**ஆசியாவுக்கு படையெடுக்கும் சிரிய அகதிகள்**

தென்கொரிய விமான நிலையத்தில் 180 பேர் காத்திருப்பு



பக்கம் 14 - 15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c

ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 190 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 21, வெள்ளிக்கிழமை 03.06.2016


## வாக்காளர் விண்ணப்பம் தொடர்பில் நேற்று மட்டும் 150 முறைப்பாடுகள்

### உடனடியாகவே நடவடிக்கை என்கிறார் யாழ். செயலாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வாக்காளர் விண்ணப்பப் படிவம் கிடைக்கவில்லை என்று நேற்றையதினம்மாத்திரம் 150க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். வாக்காளர் விண்ணப்பப்படிவம் (பி.சி) கிடைக்கப் பெறாதவர்கள் 021 222 5000 என்ற இலக்கத் பக்.23

## 55 மில்லியன் டொலரில் யாழ்.நகரம் அபிவிருத்தி

### உலக வங்கியின் பணிப்பாளர் சபை அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் யாழ்.நகரை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்துக்கு உலக வங்கியின் பணிப்பாளர் சபை கடந்த 31ஆம் திகதி அனுமதி வழங்கியுள்ளது. பக்.24

## அமைச்சர் அமரவீர கையால் ஆகாதவர்

முல்லைத்தீவு, ஜூன் 3

மத்திய கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர கையால் ஆகாதவர். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு அவர் செய்த துரோகம் கண்டிக்கத்தக்கது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான சி.சிவமோகன் பக்.23

# ஐ.நா. ஆணையாளரை சந்திக்கும் கூட்டமைப்பு

## வாய்மூல அறிக்கையை அவர் சமர்ப்பிக்கமுன் இலங்கை நிலைமை குறித்து விளக்குவதற்காக

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கையை ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் சமர்ப்பிப்பதற்கு முன்னர், தற்போதைய நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆணையாளருடனும் ஐ.நா. உறுப்பு நாடுகளின் முக்கியஸ்தர்களுடனும் நேரில் பேச்சு நடத்தவுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன். பக்.23

> ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு நடைமுறையில் என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டவுள்ளது.

## ஏக்கத்துடன் எட்டி எட்டி வீடுகளைப் பார்த்த மக்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 3

பாடசாலை விடுவிப்பு நிகழ்வுக்கு காங்கேசன்துறையைச் சொந்த இட மாகக் கொண்டு, தற்போது இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் வாடகை வீடுகளிலும் வசிக்கும் மக்களும் வந்திருந்தனர். பாடசாலையைச் சுற்றி இறுக்கமான பக்.24

## இராணுவ முகாம்களின் முற்றுகைக்குள் நடேஸ்வரா

### பாடசாலை வளாகத்திலும் ஒரு பகுதி அவர்கள் வசம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

26 வருடங்களுக்குப் பின்னர் கல்விச் செயற்பாட்டுக்காக காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி நேற்று விடுவிக்கப்பட்டது. முற்று முழுதாக இராணுவ முகாம்களின் பக்.25

## 26 ஆண்டுகளின் பின் மீண்டும் நடேஸ்வரா சொந்த மண்ணில்



வலி.வடக்கு, ஜூன் 3

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி, நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம் ஆகியன 26 வருடங்களின் பின்னர் பக்.24

## விக்கி-ஜெயா சந்திப்புக்கு கொழும்பின் அனுமதி தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 3

தனிப்பட்ட ரீதியில் தமிழக முதல்வரை விக்னேஸ்வரன் சந்திப்பதாக இருந்தால் சந்திக்கலாம். ஆனால், இராஜதந்திர மட்டத்திலான சந்திப்பாக இருந்தால், அனுமதி அவசியம். கொழும்பு பக்.24

## 60 ரூபாவால் எகிறியது சிமெந்து விலை

கொழும்பு, ஜூன் 3

50 கிலோ கிராம் நிறையுடைய சிமெந்துப் பக்கற்றின் விலை 60 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சந்தையில் பக்.24




வர்தன சேமிப்புக் கணக்குகளுக்கு

6%

அதிகூடிய வட்டி

உங்கள் சுப்ரீம் வாஸி மற்றும் மெகா போனஸ் சேமிப்புக்களுக்கு அதிகூடிய வட்டியைப் பெறுங்கள். மதிநுட்பமாகச் செயற்பட்டு எம்முடன் சேமியுங்கள். நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் விரைவாக வளர.

*சேமிப்பு வைப்புக்களுக்கு கைத்தொலைபேசி இலவசம்

நாடெங்கும் 3000 க்கு மேற்பட்ட ATM களில் செலவின்றி வரையறையற்ற மீளப்பெறுகை

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

துரித அழைப்பு: (011) 2 350 000

73/5, காலி வீதி, கொழும்பு 03. Web: www.dfcc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொக்கிளாயில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள்

## ஜனாதிபதியைச் சந்திக்கத் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜூன் 3

கொக்கிளாய், நாயாறு பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் கடற்றொழில் தொடர்பாகவும், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாகவும் வடக்கு முதலமைச்சர் தலைமையில் ஜனாதிபதியைச் சந்திப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



2016 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட அபிருத்திக் குழுவின் இரண்டாவது கூட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் மற்றும் நாயாறு பிரதேசங்களில் அண்மைக் காலமாகத் தென்னிலங்கை மீனவர்களுடைய வருகை அதிகரித்துக் காணப்படுவதுடன், தற்போது அப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களும் அதிகரித்துள்ளன.

அத்தோடு குறித்த பகுதிகளில் அந்த மீனவர்கள் சட்ட விரோதமான மீன்பிடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரங்களும் சூறையாடப்படுகின்றன.

தொடர்சியாக நடைபெறும் இந்தச் செயற்பாடுகள் எவராலும் தடுத்து நிறுத்தப்படவில்லை. அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்த கடற்றொழில் அமைச்சர் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என்றும், சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளருக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் அதன் பின்னர் அந்த அமைச்சர், கொக்கிளாய் மற்றும் நாயாறு பிரதேசங்களில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மீனவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன என்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சரை நம்பி மாவட்ட மீனவர்கள் ஏமாந்து போயுள்ளனர்.- என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஒருங்கிணைப்பு இணைத்தலைமைகளுக்குத் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்துக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட மீனவர் சமாசத் தலைவர், மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்தவர்கள் இதை நிறுத்துவதற்கான தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

அனைவருடைய கோரிக்கைகளையும் கேட்ட ஒருங்கிணைப்பு இணைத்தலைவர்கள், கடற்றொழில் அமைச்சருக்கு அடுத்த படியாகக் குறித்த பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுவதாக இருந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனேயே கலந்துரையாட வேண்டும் எனத் தெரிவித்து, அதற்கான குழு ஒன்றையும் நியமித்தனர்.

இந்தக்குழு முதலமைச்சர் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்ட மீனவர் சமாசத் தலைவர் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவினர் மாவட்ட மீனவர்களுடைய குறித்த பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவர் என்றும் இணைத்தலைவர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ṟ-ஐ-21,ரி7)

## சிறுவன் துஷ்பிரயோக விவகாரம்; சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

மாணவனைக் கட்டாயப்படுத்தி மது அருந்தக் கொடுத்துப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளவர்களைப் பிணையில் விடுவிப்பது கிராமத்தில் அமைதியின்மையைத் தோற்றுவிக்கும் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்து அவர்கள் மீதான பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்திருந்தது. வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறித்த சம்பவம் இடம் பெற்றிருந்தது. அதில் பாடசாலை மாணவன் ஒருவரைத் தனியார் கல்வி நிலைய நிர்வாகி உட்பட 4 பேர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினர் என்று குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

அவர்கள் குற்றம் புரிவது போன்ற காணொலி ஒன்றும் இணையத் தளங்களில் வெளியாகியிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் குறித்த ச ந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குறித்த செயற்பாடு திட்டமிட்டுச் செய்யப்படவில்லை என்றும் ஏதேச்சையாக நிகழ்ந்த சம்பவம் என்றும் மன்றில் கூறி பிணையில் விடுவிக்குமாறு கோரியிருந்தார். ஆனால் பொலிஸார் பிணையில் விடுவிப்பதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

குறித்த விடயம் பாலியல் குற்றச் செயல் தொடர்பானது. அவர்களைப் பிணையில் விடுவித்தால் அவர்களது கிராமத்தில் அமைதியின்மை ஏற்படும் என்று பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர். அவற்றைப் பரிசீலித்த நீதிவான் விசாரணையைத் துரிதப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டு விளக்கமறியலை நீடித்தார். (ṟ-4,26)

## வாழ்வாதார கோழிக் குஞ்சுகளால் கலகலத்தது ஒருங்கிணைப்புக் கூட்டம்

கோழிக்குஞ்சுப் பிரச்சினையால் கலகலப்பானது முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற வேளையில், கோழிக்குஞ்சு வழங்குவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட விடயத் தின்போதே கூட்டம் கலகலப்பானது.

சமுர்த்தித் திட்டத்தில் வாழ்வாதார உதவியாக முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் தனியார் ஒருவருக்கு ஒரு மாதக் கோழிக்குஞ்சு 620 ரூபாவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், அதனுடைய உண்மைத்தன்மையை வெளிக்கொண்டு வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு தான் வாழ்வாதார உதவிக்கு வழங்கப்படும் கோழிக்குஞ்சுகளை அந்த விலைக்கு வாங்குவதில்லை எனவும் 5 மாதங்களைக் கொண்ட கோழிக் குஞ்சுகளையே அந்தவிலையில் வாங்குகின்றேன் என்றும் ரவிகரன் தெரிவித்திருந்தார்.

குறித்த கோழிக்குஞ்சுகள் இவ்வளவு பணத்துக்கு வாங்கப்பட்டது என்று கூறுவது பொய் எனவும் அதை ஆராயுமாறும் அவர் கோரினார்.

இதன் போது இணைத்தலைவர்களால் குறித்த கோழிக்குஞ்சு தொடர்பாக அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 25 நிமிடங்கள் இடம் பெற்ற குறித்த கோழிக்குஞ்சு தொடர்பான விசாரணைகளால் கூட்டம் கலகலப்பாகக் காணப்பட்டது.

இறுதியில் இது தொடர்பான விசாரணைகளை கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் மேற்கொள்கிறார் என்று தெரியப்படுத்தியமையை அடுத்துக் குறித்த விடயம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் மற்றும் திணைக்களத் தலைவர்களால் இந்த விடயம் நீண்டநேரமாக முணுமுணுக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது. (ṟ-ஐ-21,ரி7)

## கணித, விஞ்ஞான பாடங்களுக்கு வட மாகாணத்தில் 532 வெற்றிடங்கள்

### வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வட மாகாணத்தில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு 532 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிரப்புவதற்குப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரியபோது குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. - இவ்வாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சு.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற யாழ். நடேஸ்வரக் கல்லூரித் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இன்று கணித, விஞ்ஞான பாடங்களுக்கான 532 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நிரப்புவதற்கு அண்மையில் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியபோது குறித்த எண்ணிக்கையையும் விடக் குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

அதேவேளை வட மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள ஆளணி அனுமதியான 15 ஆயிரத்து 520 ஐ 18 ஆயிரத்து 500 ஆக உயர்த்துவதற்கான அனுமதியையும் கோரியுள்ளோம். அத்துடன் அதில் முதற் கட்டமாக ஆயிரம் பேரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதே வேளை தொண்டராக உள்ள ஆயிரத்து 300 பேரையும் உள்வாங்கும் பணிகள் நடைபெறுகின்றன.

இருப்பினும் இந்த மேலதிக ஆளணிக்கான நிதியைப் பெறுவதில் பலத்த சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. அண்மையில் விடுவிக்கப்படும் பாடசாலைகள் தொடர்பில், நாம் அதிக கரிசனை கொண்டு அவற்றைத் திறம்பட இயக்க ஆவன செய்வதோடு வேண்டிய நிதியைப் வழங்கவும் முயற்சிப்போம்.-என்றார். (ṟ-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய விடயங்களை ஆராயாமல் முடிந்த ஒருங்கிணைப்புக் கூட்டம்

## கேப்பாபிலவு மீள்குடியமர்வு, அத்துமீறிய விகாரை அமைப்பு தொடர்பில் எந்தத் தீர்மானமும் இல்லை

முல்லைத்தீவு, ஜூன் 3
தனியார் காணியில் பிக்கு ஒருவரால் அத்துமீறி அமைக்கப்படுவதாகக் கூறப்படும் கொக்கிளாய் விகாரை மற்றும் கேப்பாபிலவு மக்களின் மீள்குடியேற்றம் உட்பட பொதுமக்களின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக ஆராயாமல் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நிறைவடைந்தது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கொக்கிளாயில் தனியாருக்குச் சொந்தமான காணியில் பிக்கு ஒருவரால் அத்துமீறி விகாரை அமைக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. குறித்த விகாரை அமைக்கும் பணியை இடைநிறுத்துமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட நிலையில், குறித்த பிக்கு தொடர்ச்சியாக விகாரை அமைக்கும் பணியை முன்னெடுத்து வருகின்றார். எனவே இந்த விடயம் மக்களின் பிரச்சினையாக உள்ளபோதும், நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படவில்லை. இதற்கான தீர்வுகளும் எட்டப்படவில்லை.

அத்துடன், மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படும் கேப்பாபிலவு மீள்குடியேற்றம் தொடர்பிலும் நேற்றையகூட்டத்தில்பேசப்படவில்லை. குறித்த பகுதி மக்கள் தங்களது சொந்தக் காணிகளில் மீள்குடியேற முடியாது மிகவும் பாதிப்படைந்துள்ளனர். தங்களை விரைவாகக் குடியமர்த்துமாறு கோரி, அவர்கள் பல போராட்டங்களை முன்னெடுத்தார்கள்.

அண்மையில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் மக்களின் பிரச்சினைகளுக்கான முடிவுகளை எடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேப்பாபிலவு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக எந்த முடிவுகளும் எட்டப்படவில்லை. கூட்டத்தில் தங்களது பிரச்சினைகள் பேசப்படவில்லை எனத் தெரிவித்த, அந்தப் பகுதி, தமது பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்கள் பிரதிநிதிகள் சிந்திக்கவேண்டும் என்று கூறியுள்ளனர்.

(த-வ-21-ரி7)

# வித்தியா படுகொலை; மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 3
புங்குடுதீவில் கடந்த வருடம் கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் தாயாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரையும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் உத்தர விட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும், வித்தியா படுகொலை வழக்கில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரின் உறவினர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவருக்கும் எதிராக, பாதிக்கப்பட்ட தரப்பை அச்சுறுத்திய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, குறித்த கொலை வழக்கில் ஏற்கனவே 12 சந்தேக நபர்கள் கைதாகி விளக்க மறியலில்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ-4)

# கத்திக்குத்தினால் இளைஞன் பரிதாபச் சாவு



வவுனியா, ஜூன் 3
உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளினால் இளைஞன் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை உறவினர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டது. இந்த முரண்பாடு கத்திக்குத்து வரை சென்றதால் பழனியாண்டி ஜெயசீலன் (வயது - 28) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

மேலும் 2 பெண்கள் உட்பட 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கத்திக்குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதானவர்களில் சிலர் படுகாயமடைந்துள்ளதால், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிசார் மேலும் கூறினர். (த-வ-4)

# வலி.வடக்கில் என்ன அணுகுண்டா உள்ளது ராணுவம் எம் காணிகளை வைத்திருப்பதற்கு?

## மாவை சேனாதிராசா எம்.பி ஆதங்கம்

வலி.வடக்கு, ஜூன் 3
வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் என்ன அணுகுண்டு உள்ளதென்றா இராணுவம் எமது காணிகளை விடுவிக்கத் தயங்குகின்றது. ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதற்காக மக்களின் குடியிருப்புக்களைப் பயன்படுத்துவதை ஒருபோதும் ஏற்கமுடியாது. இனி [illegible]கு ஆயுதங்களை வைத்திருக்கவேண்டிய தேவையும் கிடையாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா.

வலி.வடக்கு உயர் பாதுகாப்புப் பகுதியில் உள்ள நடேஸ்வரக் கல்லூரி, நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம் ஆகியன நேற்று சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக முதலில் சட்டரீதியாக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தவன் நான். மீள்குடியேற்றம் தொடர்பாக எத்தனையோ போராட்டங்களை நடத்தினோம். வலி.வடக்கில் அனைத்து மக்களையும் திரட்டி 5000 வழக்குகளைத் தாக்கல்செய்யவேண்டும் என்று நானும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய சுமந்திரனும் இணைந்து வலி.வடக்கு மக்களிடம் கோரிக்கை விடுத்தோம். 2100 பேர் தமது நில விடுவிப்புக்காக உச்சநீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுமந்திரன் எமது மக்களின் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக நீதிமன்றில் வாதாடிக்கொண்டிருக்கின்றார்.

எனது வீடு விடுவிக்கப்பட்டதும் எனது வழக்கை ரத்துச் செய்யுமாறு நீதிமன்றில் வேண்டினர். நான் காங்கேசன்துறைத் தொகுதி மக்களின் பிரதிநிதி. எனது மக்களின் நிலங்களை மீட்டுக்கொடுக்கவேண்டியது எனது கடமை. நாம் வாதாடி எனது வழக்கை ரத்துச் செய்வதை நிறுத்தினோம்.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் ஆயுதங்கள் மறைத்துவைக்கப் பட்டுள்ளன. அதனால்தான் மீள்குடியேற்றம் செய்யமுடியாதுள்ளது என்கின்றது இராணுவம் . வலி.வடக்கில் என்ன அணுகுண்டையா இராணுவம் வைத்திருக்கின்றது. அவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கவேண்டும் என்பதற்காக மக்களின் நிலங்களை அபகரிப்பதை ஒருபோதும் ஏற்கமுடியாது.

நாம் மிகவும் திட்டமிட்டு இந்த நல்லாட்சி அரசைக் கொண்டு வந்தோம்.

வலி.வடக்கை ஆறு மாதங்களுக்குள் விடுவிப்பேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார். இப்போது ஆறு மாதங்களும் முடிவுறும் நிலையில் உள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதிக்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களின் நிலங்கள் விடுவிப்பு தொடர்பாக ஒரு நல்ல முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம். நில அபகரிப்புக்கு எதிராக எம்மால் நடத்தப்பட்ட போராட்டங்களில் அவரும் பங்குபற்றியவர். எமது சகல இடங்களும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

(த-25-10)

# ஊடகவியலாளர் ப்ரெடி கமகே மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3
ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக்குழுவின் அமைப்பாளரும் ஊடகவியலாளருமான ப்ரெடி கமகே, நீர்கொழும்பு மாநகர சபைக்கு அருகில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இனந்தெரியாத இரண்டு நபர்கள், அவர் மீது தடிகளால் தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. நீர்கொழும்பு மாநகர சபையின் மாதாந்த ஒன்று கூடல் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற நிலையிலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செய்தி சேகரித்துக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் ஏற முற்பட்ட போது, பின்னால் சென்ற நபர்கள் தன்மீது தடியடி தாக்குதல் நடத்தினார்கள் என தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் ப்ரெடி கமகே தெரிவித்தார். தாக்குதலையடுத்து, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர், நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற ப்ரெடி கமகே, முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

(வ-5)

# வாகன விபத்தில் ஐவர் படுகாயம்

சாவகச்சேரி, ஜூன் 3
வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அலுவலர் உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்று முன்தினம் இரவு தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றன.

பிரதேசத்தின் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த வரணி கரம்பைக்குறிச்சியைச் சேர்ந்த 30 வயது குடும்பஸ்தர், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 39 வயது அலுவலர், அல்லாரை மேற்கைச் சேர்ந்த 27 வயது 66 வயது நபர்கள், மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 68 முதியவர் ஆகியோரே காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-ஜ-9)







தேவை
அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர், பழக விரும்புபவர், உதவியாளர், பொதிசெய்பவர் என்பவற்றுக்கு ஆண்/பெண் தேவை.
தொடர்பு: பிருந்தா மில்ஸ்
179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
077 174 6101

தேவை
கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்துக்கு (Decon) உப ஒப்பந்த காரர்கள் மேசன், கூலி மற்றும் உப ஒப்பந்தகாரர்கள் தச்சுவேலை செய்பவர்கள் உடன் தேவை.
TP: 077 361 4638, 077 803 8567

வாடகைக்கு விடப்படும்
பைக்கோ எக்ஸ்காவேட்டர் வாடகைக்கு விடப்படும்.
போக்குவரத்துக் கூலி அறவிடப்படமாட்டாது.
மணித்தியாலத்துக்கு 4000/=
077 276 9715 - புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டை மீளப்பெற்றது அரசு; எட்டு அரசியல் கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 3

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 39 பேரில், பெண்ணொருவர் உட்பட 8 பேர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த எட்டுப் பேருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்வதாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட நிலையிலேயே அவர்கள் இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சந்தேகநபர்கள் 39 பேரும் கொழும்பு நீதிவான் அருணி ஆட்டிக்கல முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்ட எட்டுப் பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் விலக்கிக் கொள்வதாக, சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் குறித்த 8 பேரையும் அவர்களுக்கு எதிரான வழக்கிலிருந்து விடுவிப்பதாக, நீதிவான் அருணி ஆட்டிக்கல கட்டளையிட்டார் .

அத்துடன், ஏனைய 31 அரசியல் கைதிகளினதும் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீள் உருவாக்கத்திற்கு உதவி புரிந்ததாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். இவர்களுடன் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட் டிருந்த 15 கைதிகளும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அந்தப் 18 பேரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் அருணி ஆட்டிகல உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு, கடற்புலிகளின் தளபதியாகப் பணியாற்றியவர் என்று குற்றம் சாட்டப்பட்ட பகீரதி முருகேசுவும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார். பிரான்சில் இருந்து பெற்றோரைப் பார்வை யிட வந்த போதே, இவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-4)



# லொய்னோன் தோட்டத்தில் மண் சரிவு எச்சரிக்கை

## 30 குடும்பங்களை இடம்பெயர வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 3

பொகவந்தலாவ லொய்னோன் தோட்டப்பகுதியில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கபட்டுள்ளமையால், 30 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேர் இடம்பெயருமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை தோட்ட நிர்வாகத்தால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி ஏற்பட்ட மண்சரிவின் போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் உயிரிழந்ததையடுத்து, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினர் மேற்கொண்ட பரிசோதனையின்போது, குறித்த தோட்ட மக்களை வெளியேறுமாறு முன்கூட்டியே அறிவித்துள்ள போதிலும், இந்த அறிவித்தலை தோட்ட நிர்வாகம் லொய்னோன் தோட்ட மக்களுக்கு அறிவிக்கவில்லை என்று மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

லொய்னோன் தோட்டமக்களின் குடியிருப்புகளில் பெரிய வெடிப்புகள் காணப்படுவதோடு, குடியிருப்புகளுக்கு அண்மையில் மண்மேடு சரிந்து விழும் அபாயமும் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொகவந்தலாவ லொய்னோன் தோட்ட மக்கள் தற்பொழுது வாழ்ந்து வரும் பகுதி, பாதுகாப்பு அற்ற பகுதியாகக் காணப்படுகின்றது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த மக்களுக்கு பொருத்தமான இடம் ஒன்றைத் தெரிவு செய்து வீடுகளை அமைக்க சம்பந்தபட்ட அதிகாரிகள் உரிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொகவந்தலாவ லொய்னோன் தோட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ)

# பேரிடரால் சேதமடைந்த பாடசாலைகளை நிர்மாணிக்கும் பொறுப்பு படையினரிடம்

கொழும்பு, ஜூன் 3

இயற்கைப் பேரிடர் காரணமாக சேதமடைந்த பாடசாலைகள் உள்ளிட்ட ஏனைய கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் நிர்மாணிக்கும் பொறுப்பு, விலை மனுக் கோரல்கள் இன்றி, படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள் ளது. இதற்கான இணைப்புப் பணிகளின் பொறுப்பு பாதுகாப்புச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இடர் காரணமாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் கேகாலை நகர சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகும் வரையில் வாரத்துக்கு ஒரு தடவையேனும் அனைத்து அமைச்சர்களும் அமைச்சின் செயலாளர்களும் கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட வேண்டும் என்று ஜனாதிபதி கோரியுள்ளார்.

இடர் காரணமாக பாதிக்கப்பட் அனைத்துப் பாடசாலை மாணவ மாணவியருக்கும் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காலணிகள், புத்தகப் பைகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வரும் பாடசாலைகளில், பயின்ற மாணவர்கள் வேறு பாடசாலைகளில் கல்வியைத் தொடர ஏற்பாடு செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (ற-ஜ-5)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம் (ம -து)

**பதவி வெற்றிடம்**

**எமது சங்கத்தில் உள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.**

01. **பதவி:** கணக்குப்பதிவாளர் (வெற்றிடம் 01) - 301/12
**சம்பளத்திட்டம் :** 10200 - 90 X 10 - 100 X 10 -12100
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டஇதர படிகள்)

**தகைமைகள் :**

(அ) கூட்டுறவு பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதிவாளர் அல்லது கணக்குப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அல்லது**

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவன இடை நிலைப் பரீட்சை சித்தி

**அல்லது**

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தி

- சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். அலுவலக நேரத்தில் ரூபா 10 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
- மேலுள்ள பதவிக்கான வயதெல்லை 18 - 45
- சங்கம் கோரும் பிணையை ரொக்கமாக செலுத்த வேண்டும்
- கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிவோர் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
- சங்க எல்லைப்பரப்புக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ் அனுபவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ்களின் நிழற்பிரதி இணைத்தனுப்புதல் வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் **பொது முகாமையாளர் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி, அச்சுவேலி** என்ற முகவரிக்கு **20.06.2016** ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.
- பூரணப்படுத்தப்படாததும் தகுதியற்றுள்ளதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்**
(சி.21390) (13.18) **அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

**நிர்வாக சபைக்கூட்டம்**

மேல் மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டுமன்றம் யாழ்ப்பாணத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 05.06.2016 பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.
-நிர்வாக சபை- (வே/1790) (11,18)

**வெல்டிங் வேலைக்கு ஆள்கள் தேவை**

வன்னி மாவட்டத்தில் அமைந்துள்ள எமது வெல்டிங் நிறுவனத்துக்கு, அனுபவ மிக்கவர்களும், வெல்டிங் வேலை பழக ஆர்வமுள்ளவர்களும் தேவைப்படுகின்றனர். நிறுவனத்தில் தங்கிநின்று வேலை செய்பவர்களாக இருக்க வேண்டும்.
**தகுந்த சம்பளம் வழங்கப்படும்.**
-நிர்வாகம்-
**தொடர்பு:077 684 9985**

**வேலையாள் தேவை**

மன்னார், நானாட்டானில் விவசாயம் செய்வதற்கு அனுபவமுள்ள ஆண் வேலையாள்கள் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் மாதம் 20, 000 முதல் 25000 வரை சம்பளம் வழங்கப்படும்.
(வே/1778)(12..18)
**077 723 4085**

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES



10.00 / 1.00 / 7.00 4.00 p.m Fri/Sat/Sun 9.30 p.m



சில்வர் 10.00 / 1.00 / 4.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m



10.00 / 1.00 / 4.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**பகிரங்க அறிவித்தல்**

**வலிமேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்**


வலிமேற்கு பிரதேசசபை எல்லைக்குள் குழாய்க் கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் **30.06.2016ஆம் திகதிக்கு முன்னர்** தொழில் வியாபார பெயர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குழாய்க் கிணறு அமைக்க உத்தேசிப்பவர்கள் பிரதேசசபையின் ஊடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெற்ற பின்னரே பிரதேசசபையில் பதிவு செய்த நிறுவனங்களின் ஊடாக குழாய்க் கிணறு நிர்மாணிக்க முடியும் என்பதுடன்,பிரதேசசபையின் அனுமதியின்றி குழாய்க் கிணறு அமைக்கும் பொதுமக்களுக்கும், குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

தொடர்புகளுக்கு: **021 225 0144**

**செயலாளர்,**
**வலிமேற்குப் பிரதேசசபை,**
**சுழிபுரம்.**
(C/21377) (11,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகரத்தினம் செல்வராசா**
(முன்னாள் பிரபல வர்த்தகர்- மாத்தறை)
திதி: தேய்பிறை திரயோதசி
(03.06.2016) வெள்ளிக்கிழமை

தோற்றம்
25.05.1931

மறைவு
26.05.2014

வையத்துள் சிறப்புற வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழியமைத்திட்ட எங்கள் ஆருயிர்த் தெய்வத்தின்
பசுமையான நினைவுகளை நெஞ்சிலே சுமந்த வண்ணம்
இரண்டாம் ஆண்டை நினைவுகூருவோமாக!
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(J/ 1747)(12.18.)
குடும்பத்தினர்.



## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
01 . 12 . 1948



இறைவன் அடியில்
03 . 06 . 1997

அமரர் **குணரத்தினம் சுந்தரலிங்கம்**
(லிங்கம் ஸ்ரோர்ஸ் இளவாலை - உரிமையாளர்)
திதி: திரயோதசி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பத்தொன்பது மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நினைத்திருக்கின்றீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
(Ilg. 1820) (13.18)

என்றும் உங்கள் நினைவில்
மனைவி, மகன்,
மகள், மருமகன், பேரப்பிள்ளை.



## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**அன்னை மடியில்**
**26.11.1942**



**இறைவன் அடியில்**
**04.05.2016**

திருமதி **கமலேஸ்வரி மகேந்திரன்**

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தியினைக் கேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மேலும் பல வழிகளில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியை நிகழ்வு 01.06.2016 புதன்கிழமை கீரிமலையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 222, தேக்கவத்தை,
கண்டிவீதி, வவுனியா.
024 567 1398
(V.36) (13.18)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18.08.1992

இறைவன் அடியில்
16.05.2015



திதி:
03.06.2016
(திரயோதசி)

**சிவலிங்கம் துஷிதன்** (பொறியியலாளர்)

எங்கள் துஷி பாசம் மிக்க மகனாக அன்பு நிறைந்த சகோதரனாக
மதிப்பு மிக்க உறவினனாக மரியாதைக்குரிய நண்பனாக
எல்லோருக்கும் எல்லாமுமாய் வாழ்ந்த எங்கள்
மதிமுகத்தோனே புன்னகைக்கும் உந்தன் வதனமுகத்தைப்
பார்க்காமலும் கலகலப்பான உந்தன் சிரிப்பொலியைக் கேட்காமலும்
நாள்கள் எல்லாம் இருள் படிந்து நகர்கின்றனவே
தென்றலின் குளிராய் நிலவின் ஒளியாய்
எப்போதும் நீ பூமியில் மீண்டும் பூவாய் மலர்வாய் எம் மகனே

இல.55, ராணி வீதி,
யாழ்ப்பாணம்.
(J/1816) (11,18)

சிவலிங்கம்
குடும்பத்தினர்.



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
23 . 08 . 1944



உதிர்வு
03 . 06 . 2013

அமரர் **அகஸ்ரின் வேதானந்தம்** Lion (A.V.ஆனந்தன்)

[ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக்கலைஞரும், பிரபல தொழிலதிபரும், தெல்லிப்பழை ஆனந்தி & கோ நிறுவனத்தின் உரிமையாளரும், தெல்லிப்பழை சிற்பாலயத்தின் நிறுவுநரும், யாழ்.திருமறைக்கலா மன்றத்தின் மூத்த உறுப்பினரும், மல்லாகம்/ தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவகரும்]

ஆண்டுகள் மூன்று கடந்தாலும் – ஆறாத் துயரிலே தவிக்கின்றோம்
ஆறுதல் அளித்திட யாருமில்லை – உங்கள்
பிரிவின் வலியதுவே மாறாத வடுவாக என்றும் எம் மனதில்
பாசத்தின் உருவமாய், பண்பின் சிகரமாய், உழைப்பின் வடிவமாய்
உலகறிய திகழ்ந்தீரே!– ஆண்டுகள் பல ஆனாலும்
அழியாது உம் புகழும் உங்களின் கலைப்படைப்புகளும்
கலைகளிலே கைவண்ணம் கண்ட அற்புத சிற்பியே!
காலத்தின் விதியதுவென கடவுளிடம் சென்றீரே!
காலங்கள் ஆனாலும் உங்களின் நினைவுகள் – என்றும்
எம் மனதில் நீங்காத நிழல்களாய்
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

சிற்பாலயம்
தெல்லிப்பழை.

என்றும் நீங்காத நினைவில்
குடும்பத்தினர்.


## தலைக் கவசமின்றி பயணித்தவருக்கு ரூ.9 ஆயிரம் அபராதம்

**சாவகச்சேரி ஜூன் 3**

தலைக்கவசமின்றி மோட்டார்சைக்கிளில் பயணித்தவருக்கு நீதிமன்று 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

தலைக் கவசமின்றிச் சென்ற மோட்டார் சைக் கிளோட்டி, வீதிப் பரிசோதனையில் நின்ற கொடிகாமம் போக்குவரத்துப் பொலிஸார், நிறுத்துமாறு சமிக்ஞை காண்பித்த போது மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

குறித்த நபரைக் கடந்த புதன்கிழமை தலைக் கவசமின்றி வா[illegible]ணம் செலுத்தியமை மற்றும் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் செயற்பட்டமை ஆகிய குற்றச் சாட்டுக்களுடன் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது இரு குற்றங்களுக்குமாக 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ந-ஜ-9)

## மணி மண்டப திறப்பு விழா

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயத்தின் மணி மண்டபத் திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத் தலைவர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், லண்டனில் வசிக்கும் கு.விவேகானந்தன் தம்பதிகள் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறக்கவுள்ளனர்.

நிகழ்வுக்கான ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கற்பக விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ. தியாக கிருஷ்ணமூர்த்திக் குருக்கள், யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் தலைவர் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(ந-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைத் துறைமுகத்தில் சட்டவிரோதமாக மீன் இறக்கும் சிங்கள மீனவர்களின் படகுகள்

> மீன் இறக்கும் போது மீன் பதிவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாமல் மீனை இறக்க முடியாது. ஆனால் எங்களுக் குத் தெரியாமல் – அறிவிக்காமல் பருத்தித் துறை துறை முகத்தில் மீன் இறக்கப்படுகின்றது. அங்கு இறுக்கமான கண்காணிப்பு இல்லை.

யாழ்ப்பாணம், ஜூன் 3
பருத்தித்துறைத் துறைமுகத்தில் சிங்கள மீனவர்களது படகுகள் சட்டவிரோதமான முறையில் மீன்களை இறக்குகின்றன என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரமேஷ்கண்ணா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதில் வைத்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பருத்தித்துறைத் துறைமுகத்தில் சிங்கள மீனவர்களது படகுகள் சட்ட விரோதமான முறையில் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றன என்று அறிகின்றோம். பாதுகாப்புத் தரப்பினரின் துணையுடன் படகுகள் அவ்வாறு கொண்டு வரப்படுகின்றனவா? என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா–

சிறிய படகுகள் இறங்கு துறையிலிருந்து புறப்பட்டு அதே இறங்கு துறையை வந்தடைகின்றன. ஆனால் பல நாள் கலங்கள் புறப்பட்ட துறைமுகத்துக்கே வரவேண்டும் என்ற நிபந்தனையில்லை. அவை எந்த துறைமுகத்துக்கும் வரலாம். பல நாள் கலங்கள் பொருத்தமான எந்த துறைமுகத்திலும் இறக்க முடியும்.

இவ்வாறு மீன் இறக்கும்போது மீன் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாமல் மீனை இறக்க முடியாது. ஆனால் எங்களுக்குத் தெரியாமல் – அறிவிக்காமல் பருத்தித் துறை துறைமுகத்தில் மீன் இறக்கப்படுகின்றது. அங்கு இறுக்கமான கண்காணிப்பு இல்லை.

கண்காணிப்பு தனித்து எமக்குரியது மட்டுமல்ல. கடலோர பொலிஸ் பிரிவுக்கும் உரியது. இரவு வேளைகளில் பருத்தித் துறை கடலில் சிங்கள மீனவர்களது படகுகள் மீன்களை இறக்குவது தொடர்பில் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ற-ஜ-5)

## ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கணினியில் தேசிய தொழில் தகைமை கற்கைநெறி ஆரம்ப விழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி, வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி கிழக்கு, பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-ரி4)

## அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 3
சித்தன்கேணி, கலைநகர் கம்பம்புலோ ஆதி வைரவப் பெருமான் திருமண மண்டபத்தின் அடிக்கல் நடும் விழா இன்று காலை 7 மணி முதல்8மணிவரைஆலயவளாகத்தில் நடைபெறவுள்ளது.

தெ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவை சோ.சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார்.(ற-ஜ-ரி4)

# பேரினவாத வன்முறை அரசியலுக்காக மாற்றப்படுகின்றன பல்கலைக்கழகங்கள்

## தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 3
பல்கலைக் கழகங்கள் பேரினவாத வன்முறை அரசியலுக்காக மாற்றப்படுவது எமக்குப் பெரும் கலக்கத்தைத் தருகின்றது. பல்கலைக் கழகங்கள் எவ்வித வன்முறைகளுக்கும் இடம்கொடுக்காத இடமாக இருக்க வேண்டும். வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை உடனடியாக எடுப்பதே வன்முறை அரசியலை எதிர்காலத்தில் இல்லாதொழிப்பதற்கான முதற்படி. எனவே உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து எடுக்க வேண்டும். – இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–

மே மாதம் 24 ஆம் திகதி பிற்பகல் 4.15 மணியளவில், சில சிங்கள மாணவர்களால் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவப் பீட மாணவனாகிய சுமேஸ்காந்த் பல்கலைக் கழக வளாகத்துக்குள்ளேயே தாக்கப்பட்டுள்ளார். இதன் பின்னர் அன்றைய தினம் மாலை செங்கலடி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தைத் தொடர்ந்து அன்று பொலிஸார், புலனாய்வாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலராலும், சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டது. பொலிஸாரால் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. பதில் உபவேந்தராக கடமையாற்றிய கருணாகரன் அன்றிரவே பாதிக்கப்பட்ட மாணவனை வைத்தியசாலையில் பார்வையிட்டுச் சென்றிருந்தார்.

சம்பவத்துக்கு மறு நாள் காலை பல்கலைக் கழக நிர்வாகத்தினரிடம் எழுத்து மூலமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அத்துடன் குற்றவாளிகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தாக்கப்பட்ட மாணவன் கேட்டுக் கொண்டுள்ளார். முறைப்பாட்டைப் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரி வைத்தியசாலைக்குச் சென்று அந்த மாணவனிடமே உறுதிப்படுத்திக் கொண்டார்.

முறைப்பாடு தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால் தாக்குதலுக்குள்ளான மாணவனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக 26 ஆம் திகதி மாணவர் ஒன்றியத்தால் அனைத்துப்பீட தமிழ் மாணவர்களையும் ஒன்றிணைத்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதையடுத்து தாக்குதலை மேற்கொண்ட மாணவர்களுக்கு காலவரையறையின்றி வகுப்புத் தடை விதிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலதிக விசாரணையின் பின்னர் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 27 ஆம் திகதி வர்த்தக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறையுடன் கூடிய ஆர்ப்பட்டத்தை அடுத்து மாணவர்களுக்கான வகுப்புத் தடை நீக்கப்பட்டது. அவர்கள் பரீட்சை எழுதுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

இதேநாள் நண்பகல் 12.30 மணியளவில் தனது அரையாண்டுப் பரீட்சையை முடித்து வெறியேறக் காத்திருந்த போது பரீட்சை மண்டபத்துக்குள்ளேயே சக சிங்கள மாணவர்கள், பாதிக்கப்பட்ட சுமேஸ்காந்தை தாக்குவதற்கான முயற்சி மறுபடியும் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டதுடன் பொறுப்பதிகாரியிடம் 30 ஆம் திகதி எழுத்து மூலமான முறைப்பாடும் செய்யப்பட்டது.

இது இவ்வாறிருக்க 24 ஆம் திகதி, சுமேஸ்காந்தைத் தாக்கிய சிங்கள மாணவன், தன்னை அன்று மாலை 4.45 மணியளவில் பல்கலைக் கழகத்துக்கு முன்பாக உள்ள பஸ் நிறுத்துமிடத்தில் வைத்து சுமேஸ்காந்த் தலைக் கவசத்தாலும் கையாலும் தாக்கினார் என்று கூறி 25 ஆம் திகதி இரவு 9 மணிக்குப் பின்பு சந்திவெளி வைத்தியசாலையில் தன்னைத்தானே சேர்ப்பித்துப் பின்னர் காலையில் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளார். சம்பந்தப்பட்ட மாணவன் இந்தச் சம்பவத்தை ஏறாவூர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தமிழ் மாணவர்கள் இவ்வாறாகப் பெரும்பான்மையின மாணவர்களின் வன்முறைக்கு ஆளாகியிருப்பது இந்தச் சம்பவத்துடன் ஆறாவது தடவையாகும். பல்கலைக் கழகங்கள் பேரினவாத வன்முறை அரசியலுக்காக மாற்றப்படுவது எமக்குப் பெரும் கலக்கத்தைத் தருகின்றது. பல்கலைக் கழகங்கள் எவ்வித வன்முறைக்கும் இடம் கொடுக்காத இடமாக இருக்க வேண்டும். வன்முறையில் ஈடுபட்ட மாணவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை உடனடியாக எடுப்பதே வன்முறை அரசியலை எதிர்காலத்தில் இல்லாதொழிப்பதற்கான முதற்படி. எனவே உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது. (ற-ஜ-5)

# முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர் மாநாடு இன்று

முள்ளியவளை, ஜூன் 3
கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் முல்லைத்தீவுக் கல்வி வலயத்தினருக்கான ஆசிரியர் மாநாடு சிலாவத்தைத் தமிழ் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் இன்றைய முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

மலாபே கொரிசோன் பல்கலைக் கழக பீடாதிபதி பேராசிரியர் தை.தனராஜ் "21 ஆம் நூற்றாண்டில் கற்றல்,கற்பித்தலில் ஆசிரியரின் புதிய வகிபங்கு" என்னும் தலைப்பில் பேருரை நிகழ்த்தவுள்ளார். அத்துடன் கற்றல் கற்பித்தல் தொடர்பான கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாளைய இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொள்ளவுள்ளார். அதில் பேருரையை வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரின் முன்னாள் பீடாதிபதி செ.அழகரத்தினம் "இன்றைய கல்வியில் ஆசி ரியரின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் அரங்க ஆற்றுகைகளான பிரதேசத்துக்குரிய காத்தவராயன், கண்ணகிகோவலன், இராவணேஸ்வரன் போன்ற பாரம்பரிய கூத்து நிகழ்வுகளும், இசை,நடன நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4,433)

# எருமையுடன் விபத்துக்குள்ளான இரு பிள்ளைகளின் தந்தை சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 3
படி வாகனம் எருமை மாட்டுடன் மோதுண்டு, தடம்புரண்டு பின்னர் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், படி வாகனத்தில் பயணித்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவரது வாகனம் மோதிய எருமை மாடு தன்பாட்டில் சென்று விட்டது.

முள்ளியவளை, குமுழமுனையில் இடம்பெற்ற இந்த விபத்தில் முதலாம் வட்டாரம் பொன்நகர் முள்ளியவளையைச் சேர்ந்த ஆறுமுகம் ரமணகுமார் (வயது – 34) என்பவரே உயிரிழந்தார். அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவர்.

கடந்த மாதம் 5 ஆம் திகதி நெல் மூடைகளை ஏற்றிகொண்டு படிரக வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, எதிரே எருமை மாடு வீதியைக் கடந்துள்ளது. வாகனம் அதனுடன் மோதுண்டு தடம்புரண்டு வீதியோரம் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதனால் அதில் பயணித்த குறித்த குடும்பஸ்தர் காயமடைந்திருந்தார்.

காயமடைந்தவர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் 20 நாள்களாக வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும், அது பயனளிக்காது அவர் கடந்த செவ்வாய் இரவு உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஜ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளியில் மீள் குடியமராத பகுதிகளில் பெரு மரங்கள் தறிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இது வரை மீளக்குடியமர அனுமதிக் கப்படாத முகமாலை, வேம்பொடு கேணி, இந்திராபுரம் பகுதிகளில் பயன்தரு மரங்கள் பட்டப்பகலில் தறித்து எடுத்துச் செல்லப்படுகின்றன என்று அயல் கிராம மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் கனரக வெடிப் பொருள்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டு இது வரை மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட வில்லை.

> “வெடிப் பொருள்கள் அகற்றப்படவில்லை என சொல்லப்படும் பிரதேசங்களில் வாகனங் கள் சென்று அங்கிருக் கும் மரங்களைத் தறித்து ஏற்றிச் செல்லுகின்றன.”


இந்த நிலையில் அந்தப் பகுதி களுக்கு சிலர் வாகனங்களில் சென்று அங்கு காணப்படும் பெரும் மரங்களைத்தறித்துவாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர் என்று அயல் கிராம மக்கள் கூறுகின்றனர்.

வெடிப் பொருள்கள் அகற்றப்பட வில்லை எனச் சொல்லப்படும் பிர தேசங்களில் வாகனங்கள் சென்று அங்கிருக்கும் மரங்களைத் தறித்து ஏற்றிச் செல்கின்றன. இது எவ்வாறு சாத்தியமாகின்றது என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சட்டவிரோதமாக மரங்கள் தறித்து எடுத்துச் செல்வதைத் தடுக்க பளைப் பிரதேச செயலகமும் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என் றும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ற-9)

# அனைவரும் வாக்காளராக பதிவு செய்வது அவசியம்

## வடக்கு முதலமைச்சர் அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஜூன் 3

அனைவரும் வாக்காளர் களாகப் பதிவுசெய்யவேண் டும். -இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வாக்காளர் தினம் தொடர் பில் அவரிடம் கேள்வி எழுப் பிய போதே அவர் மேற் கண்டவாறு, கோரிக்கை விடுத்தார்.

தமிழ் இளைஞர்கள் பலர் வெளிநாடு செல்கின்றார் கள். அவ்வாறு செல்வ தற்கு அதிகம் விரும்புகின் றார்கள். இதனால் எமது நாடாளுமன்ற ஆசனங் களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. வாக் காளர்களாகப் பதிவு செய் யாமல் இருந்தால் இந்த எண்ணிக்கை மேலும் குறைவடைந்து செல்லும். இதனால் பல்வேறு பாதிப் புக்கள் ஏற்படும்.

எனவே வாக்காளர்களாக அனைவரும் தவறாது பதிவு செய்ய வேண்டும் - என்றார். (ற-ஐ-5-109)

### கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஜூன் 3

மட்டுவில் வடக்கு திருவங் கேணிபணையடிப்பிள்ளை யார் ஆலயத்தின் மகா கும் பாபிஷேக நிகழ்வு எதிர் வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியை கள் 6 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள் ளன. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெற வுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது. (ற-ஐ-131)

# வவுனியா பொது வைத்தியசாலையில் கண் வில்லை மாற்று சத்திரசிகிச்சை



வவுனியா, ஜூன் 3

வவுனியா பொது வைத்தி யசாலையில் கடந்த மாதம் இறுதி நாள் தொடக்கம் இடம்பெற்று வரும் கண் வில்லை மாற்று சத்திரசிகிச்சை முகாம் நாளை வரை நடைபெறும் என ஏற் பாட்டாளர்கள் தெரிவித் துள்ளனர்.

இந்தக் கண் சத்திர சிகிச்சை முகாமானது புனர்வாழ்வும் புதுவாழ் வும் பிரிட்டன், வின் 2020 இலங்கை, வின் மின் சிங்கப்பூர், றோட் டரிக்கழகம் முல்லைத்தீவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்றது.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல் லைத்தீவு, மதவாச்சி போன்ற பிரதேசங் களிலிருந்து ஏற்கனவே தெரிவு செய்யப் பட்ட நோயாளர்களுக்கான கண் வில்லை மாற்று சத்திரசிகிச்சைகள் இடம்பெறு கின்றன எனவும், இதில் ஏராளமான பொது மக் கள் வந்து சேவையைப் பெற்றுச் செல் கின்றனர் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் வெளிநாட்டு கண் வில்லை சத் திரசிகிச்சை நிபுணர்கள் இருவரும், இலங்கை நிபுணர்களும் இணைந்து கண் சத்திரசிகிச்சை முகாமில் சிகிச்சை வழங்கி வருகின்றனர். குறித்த ஐந்து நாள்களில் 500 பேருக்குக் கண் சத்திர சிகிச்சை செய்து முடிக்கப்பட்டால், இலங் கையில் இடம்பெற்ற கண் சத்திர சிகிச்சை முகாமில் இதுவே அதிகளவானதாக என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். (ற-ஐ-21)

# ஜெயலலிதாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாகச் சந்திப்பேன்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்திப்பதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை. அதற்கு முன்னரே எதிர்ப் புக்கள் கிளம்பியுள்ளன. இருப்பினும் எதிர்ப்புக் களைச் சமாளித்து சந்தித் துப் பார்ப்போம். - இவ் வாறு புன்முறுவலுடன் பதிலளித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழக முதலமைச்சர் தங் களுடனான சந்திப்புக்கு சாதகமான சமிக்ஞை யைக் வெளிப்படுத்தி யுள்ளார். இந்தச் சந்திப்பு எப்போது இடம்பெறும் என்று முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கை யிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழக முதலமைச்சரும், நானும் சந்திப்பதற்கு பலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற னர். தமிழக முதலமைச் சரை உத்தியோகபூர்வமாக சந்திப்பதாக இருந் தால், டில்லியின் அனுமதியைப் பெற்றே சந்திக்க முடியும். இல்லாவிடில் அது சட்டத் துக்குப் புறம்பானது.

தமிழக முதலமைச்சரை சந்திப்பதற்கான நாள் இது வரையில் உறுதி செய்யப் படவில்லை. வாய்ப்பு அமைந்தால் நிச்சயம் சந் திப்பேன். இந்த எதிர்ப்புக் களை எல்லாம் சமாளித்து விட்டு, அதன் பின்னர் அவ ரைச் சென்று சந்தித்துப் பார்ப்போம்- என்று புன்ன கையுடன் தெரிவித்தார். (5-106)

### புத்தாண்டு விழாவும் சமூக சேவையாளர் கௌரவிப்பும்

கொழும்புத்துறை, ஜூன் 3

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையமும், கிராம அபிவிருத்திச் சங் கமும் இணைந்து நடத் தும் புத்தாண்டு விழாவும், சமூகசேவையாளர் கௌர விப்பும் நாளை மாலை 6.30 மணிக்கு சீனிவாச கம் வீதியிலுள்ள நிலைய முன்றலில் கலாநிதி லயன் நா. தனேந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேரா சிரியர் மா.வேதநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலர் பொ.தயா னந்தா, வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கன கரத்தினம், யாழ்.போதனா வைத்தியசாலை மருத்து வர் த.கபிலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

சமூக திலகம் விருது வழங் கல், நிலைய சேவையாளர் கௌரவிப்பு, மாணவர் கௌரவிப்பு, நவீன இலத் திரனியல் சாதனங்களால் எமது சமூகத்துக்கு நன் மையா? தீமையா? என் னும் தலைப்பில் பேராசி ரியர் வேல்நம்பி நடுநிலை யில் பட்டிமன்றம், கலைக் காவேரி எம்.ஏ.உதயகுமார் குழுவினரின் நடன நிகழ்வு என்பன இடம்பெறும். (ற-ஐ-135)

# சந்தைப்படுத்தல் தகவல் மையம் முல்லைத்தீவில் திறக்கப்பட்டது



முல்லைத்தீவு, ஜூன் 3

முல்லைத்தீவில் ஏழு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் தகவல் மையமும், விற்பனை நிலையமும் பொது மக் களது பாவனைக் காக நேற்றுமுன் தினம் திறக்கப்பட்டது.

முல்லைத்தீவு நகரப் பகுதியில் வடக்கு மாகாண சபையின் குறித் தொதுக் கப்பட்ட நிதியின் கீழ் நிர்மா ணிக்கப்பட்ட குறித்த தகவல் மையத்தை வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை பெறுமதிசேர் பொருள்களாக மாற்றுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள் களைச் சந்தைப்படுத்தும் இடமாக இது அமை வதுடன் இங்கு பாரம்பரிய போசாக்கு உணவு களைத் தூய்மையான முறையில் தயாரித்து பொதுமக்களுக்கு வழங்கவுள்ளதுடன் பயன்தரு மரக்கன்றுகள், நாற்றுக்கள், விதைகள் என்ப வற்றையும் பெற்றுக்கொள்ள முடியும். சந்தைப்படுத்தும் தகவல்களைக் காட்சிப்படுத் துவதுடன் ஏற்றுமதியாளர்களின் விவரங்கள் என்பவையும் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும். அத னைப் பண்ணையாளர்கள் பார்வையிட முடியும். விவசாயிகளின் உற்பத்திப்பொருள் கள் பற்றிய விவரங்களும், இங்கு காட்சிப்படுத் தப்பட்டிருக்கும் என வடமாகாண கமநல சேவை பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்வில் கலந்துகொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரி வித்ததாவது-

இவ்வாறான பாரம்பரிய உணவகம் ஒன்றின் தேவை எங்களுடைய கூட்டங்களில் கலந்து ரையாடப்பட்டன. இப்பொழுது தான் அதற்கான நிதி ஒதுக்கிடுகள் சாத்திய மாகி, வடமாகாணத்தில் முதல் தடவையாக முல்லைத் தீவு மாவட்டத்துக்கு பாரம்பரிய உணவு மையமும், தகவல் தொடர்பாடல் மையமும் ஒருங் கிணைந்தாக ஒரு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்துக்காக ஏறத்தாழ ஏழு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தமட்டில் அமைச் சுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி குறைவு என்கிற அடிப்படையில் இது எங்களுக்குப் பெருந்தொகையாகும். ஆனால் இருந் தாலும் கூட இதனால் அடையக்கூடிய பயன் பெரிதாக இருக்கும் என நான் நம்புகிறேன்.- என்றார்.

6.4 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப் பட்ட இந்த நிலையமானது, முல்லை மகளிர் விவசாய நிர்வாக அமைப்பினர் ஊடாகச் செயற் படுத்தபட உள்ளதுடன், 22 பெண்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இந்த நிகழ்வில், வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப் பினர்களான து.ரவிகரன், சிவநே சன் மற்றும் கமநல சேவை உதியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ற-ஐ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அந்தோனியார் ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, ஜுன் 3
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கடலுக்குள் அமைந்துள்ள கடல் அந்தோனியார் கெபியில் வழிபாடுகள் நடைபெறும்.
இதன்போது, பெரும் திரளான மக்கள் படகுகளில் சென்று அவற்றில் இருந்தவாறே வழிபாடுகளில் பங்கு பெறுவர்.
நவநாள் வழிபாடுகள் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். எதிர்வரும் 12 திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணை இடம்பெறும்.
திருவிழா நாளான எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் திருப்பலி காலை 5.15 மணிக்கும், திருவிழாத்திருப்பலி காலை 6.30 மணிக்கும் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும். திருச்சொரூப தேர்ப்பவனி அன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிவழமையான பாதை ஒழுங்கில் நடைபெறும். (ந-ஐ-135)

### ஒளிப்பட கண்காட்சி

கொழும்புத்துறை, ஜுன் 3
யாழ்ப்பாணம் ராகஸ்வரம் இசைமன்றத்தின் ஏற்பாட்டில், பல்சமய கருத்தாடல் நிலையத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் ஒளிப்படக் கண்காட்சி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தா ஒளிப்படக்கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
பல்சமய, பல்லின கலை கலாசாரங்களின் சமகால நிகழ்வுகளின் நினைவுகளைச் சித்திரிக்கும் நூற்றுக்கணக்கான ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-ஐ-135)

# தொண்டமானாறு நன்னீராக்கத் திட்டம் ரூ. 600 மில்லியன் நிதியில் அபிவிருத்தி

அச்சுவேலி, ஜுன் 3
தொண்டமானாறு குடாக் கடல் நீரேரி நன்னீராக்க வேலைத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 600 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.
தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கருகில் அமைந்துள்ள தடுப்பு அணை திருத்த வேலை, தடுப்பு அணைக்கு கீழாக உப்பு நீர் ஊடுவடிதலைத் தடுப்பதற்கான நிலக்கீழ் தடுப்பு மற்றும் மருதங்கேணி வரையுள்ள நீரேரிக்கு இரண்டு பக்கமும் மண்தடுப்பு அணை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
குடாக் கடல் நீரேரியை நன்னீரேரியாகவும், கரையோரங்களில் உள்ள பகுதியை மக்கள் பயன்பாடு மற்றும் மேய்ச்சல் தரவையாகவும் மாற்றி அமைப்பது உள்ளிட்ட பல்நோக்கு அபிவிருத்தியைக் கொண்டதாக நீண்டகால நோக்கில் தொண்டமானாறு குடாக்கடல் நீரேரி வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

> வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. வேலைகள் கட்டம் கட்டமாக தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

குடாக்கடல் நீரேரிக்கு உள்ளே பாக்குத்தொடு கடல் உப்பு நீர் வராமல் தடுப்பதற்கும் மழை வெள்ளத்தை சமுத்திரத்துக்கு பொருத்தமான அளவு வெளியேற்றுவதற்கு வசதியாகவும் தொண்டமானாறு தடுப்பு அணை அமைக்கப்பட்டுள்ளது.
உப்பு நீர் குடாக்கடல் நீரேரியில் கலக்காமல் தடுக்கப்பட்டு மழை வெள்ளம் நீரேரியில் தேங்கி நிற்பதற்கு உரிய முறையில் வேலைத்திட்டம் முன்னெடுத்து வரப்படுவதால், தொண்டமானாறு குடாக்கடல் நீரேரிக்கு அருகில் உள்ள கிணறுகளின் நீர் பெருமளவு நல்ல நீராகி மாறி இருப்பதோடு, மக்கள் பயன்பாட்டுக்கும், பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
அத்துடன் களப்பில் தேங்கி நிற்கும் நீர் உவர்த்தன்மை குறைவடைந்திருப்பதால், கால்நடைகள் நீருக்கு அலையாமல் நீர் அருந்தக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் மக்கள் மத்தியில் இந்த வேலைத்திட்டம் தொடர்பான நம்பிக்கை வலுவடைந்து வருகின்றது.
தொடர்ந்து இந்த வருடம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொண்டமானாறு தடுப்பு அணை திருத்தி அமைக்கப்படுவதோடு,தடுப்பு அணைக்குக் கீழாக தரைக்கீழ் நீராக உப்பு நீர் ஊடுவடிவதை தடுத்து நிறுத்துவதற்கு நிலத்துக்கு கீழ் தடுப்புச் சுவர் அமைக்கப்படவுள்ளது.
அத்துடன் வல்லைப்பாலத்தில் இருந்து மருதங்கேணி வரை உள்ள குடாக்கடல் நீரேரிக்கு இரண்டு பக்கமும் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் கரையோரமண்தடுப்பு அணைஅமைக்கப்படவுள்ளது.
வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. வேலைகள் கட்டம் கட்டமாக தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஐ-11)

# சட்ட விரோதமாக கொண்டு சென்ற 46 மாடுகள் பொலிஸாரிடம் சிக்கின

## சந்தேகக நபர் ஒருவரும் கைது

கிளிநொச்சி,ஜுன் 3
அனுமதிப்பத்திரங்கள் இன்றி சட்ட விரோதமான முறையில் கால் நடையாகக் கொண்டு செல்லப்பட்ட 46 மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட 46 மாடுகள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் பராமரிக்கப்படுகின்றன என்றும், குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்களுடைய மாடுகள் காணாமல் போயிருந்தால் மாடுகளைப் பார்வையிட்டு அடையாளங்களை உறுதிப்படுத்துமாறும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.
சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்த பொலிஸார், மாவட்ட நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.



இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த சந்தேக நபர் மாடுகளைத் தாம் வளர்ப்புக்காக விலைக்கு வாங்கியிருந்தார் என்று தெரிவித்தார்.
இந்த நிலையில் அதற்கான ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும், அதுவரையும் பொலிஸாரால் மீட்கப்பட்ட மாடுகள் தருமபுரம் பொலிஸாரின் பாதுகாப்பில் இருக்கும் எனவும் தெரிவித்த நீதிவான் சந்தேக நபரை பிணையில் விடுதலை செய்தார். (ந-ஐ-21,ரி3)

### சமஸ்கிருத வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்,ஜுன் 3
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள சமஸ்கிருத வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியிலுள்ள குருகுல மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் இந்தச் சமஸ்கிருத வகுப்புக்களின் பயிற்சிக் காலம் 3 மாதங்களாகும். இது தொடர்பில் மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் 011 - 2552641 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது வகுப்புகள் நடைபெறவுள்ள குருகுலத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-ஐ)

### நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி,ஜுன் 3
மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவராக திருமதி ஆ.இராசரத்தினமும், உபதலைவராக க.சின்னத்துரையும், செயலாளராக தி.சிவகுமாரனும், உதவிச் செயலாளராக சி.இராஜகுலசிங்கம், பொருளாளராக ச.முகுந்தனும் நிர்வாக உறுப்பினர்களாக மா.கனகலிங்கம், க.சசிகரன், திருமதி ச.ராதிகா, திருமதி தி.ஜெயவதனா, திருமதி கோ.பிரியதர்சினி, திருமதி நா.ஆறுமுகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
சங்கத்தின் காப்பாளராக இ.நாகராஜாவும், உப காப்பாளராக த.பாலசண்முகநாதனும், கணக்காய்வாளராக இ.பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-ஐ)

# பெரியார் வீரசிங்கத்துக்கு விரைவில் நினைவுச் சிலை

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்துக்கு விரைவில் நினைவுச் சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.
இதற்கான ஏற்பாடுகள் மாவட்டக் கூட்டுறவுச் சபை ஊடாக மேற்கொள்ளப்படும் என்று சபையின் உபதலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் நினைவாக மாவட்டக் கூட்டுறவு சபை வளாகத்தில் அதாவது, வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உருவச் சிலை அமைக்கப்பட வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கூட்டுறவாளர்களின் இந்தக் கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக விரைவில் கூட்டுறவுப் பெரியாரின் உருவச்சிலை அமைக்கக் கூட்டுறவுச் சபை ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் அவரின் நினைவு தினம் வருவதால், அதற்கு முன்பாக அவரது நினைவுச் சிலையை அமைத்து அந்தத் தினத்தில் திரை நீக்கம் செய்யவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் – என்று தெரிவித்தார்.
கடந்த வாரத்தில் கூட்டுறவுப் பெரியாரின் நினைவாகத் தபால் முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.
இந்த நினைவுத் தபால் முத்திரை வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்த கூட்டுறவாளர்கள் பலரும் பெரியாருக்கு நினைவுச் சிலை அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தனர். (ந-ஐ-17)

# ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் தளபாடக் கொள்வனவுக்கு நிதி

யாழ்ப்பாணம், ஜுன் 3
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தளபாட உபகரணங்களின் கொள்வனவுக்கு பனை அபிவிருத்திச் சபையால் 1.65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பனை அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஊடாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் அண்மையில், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.
இதன் போது மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி கலந்து கொண்டு, சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மூலம் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ள நலத்திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார்.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்ட அமைச்சின் செயலாளர், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் சங்கங்களின் தளபாடக் கொள்வனவுக்கு என பனை அபிவிருத்திச் சபையால் 1.65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார். (ந-ஐ-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் முறைப்பாடுகள் மீளப் பதிவு செய்யப்பட்டவை

## காணாமற்போனோர் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

காணாமற்போனோர் தொடர்பாக தமது ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 3 ஆயிரம் முறைப்பாடுகள், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பதிவு செய்யப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளன என்று ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர், வடக்கு - கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பாக, ஆணைக் குழுவிடம் 22 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

அவற்றில், 3 ஆயிரம் முறைப்பாடுகள், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன என்று ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

இதனால் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை 19 ஆயிரமாக குறைந்துள்ளது.

ஆணைக் குழுவின் பணிக் காலத்தை ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்குள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்குள், முறைப்பாடுகள் அனைத்தும், சரிபார்க்கப்பட்டு, இரட்டைப் பதிவுகள் நீக்கப்பட்டு, காணாமற்போனோர் தொடர்பான இறுதியான எண்ணிக்கையைக் கணிப்பிட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# எம்பிலிபிட்டிய கொலையில் கைதான பொலிஸ் அத்தியட்சகருக்குப் பிணை

கொழும்பு, ஜூன் 3

எம்பிலிபிட்டிய நகரில் விருந்து பசார நிகழ்வொன்றின்போது ஒருவர் கொல்லப்பட்ட வழக்கில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டிய நகரில் விருந்து பசார நிகழ்வொன்றின்போது, பொலிஸாருக்கும் பொதுமக்கள் சிலருக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தில், அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சம்பவத்தில் சுமித் பிரசன்ன ஜயவர்த்தன என்ற குடும்பஸ்தரே உயிரிழந்திருந்தார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் அத்தியட்சகர் சமிந்த தர்மரத்ன, நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன்படி, 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணை மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். அதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தின் பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும் என்றும்-எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி குமாரி எம்.அபேரத்ன உத்தரவிட்டுள்ளார். (ற-ஐ-4)

# மலையகத்தில் கொழுந்து விளைச்சல் அதிகரிப்பு



கொழும்பு,ஜூன் 3

மலையகப் பகுதியில் உள்ள தோட்டங்களில் தேயிலைச் செடிகளின் கொழுந்து விளைச்சல் அதிகமாகக் காணப்படுகின்றது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு தேயிலை மலைகளில் கொழுந்தின் விளைச்சல் குறைந்து, வறட்சியான நிலைமை காணப்பட்டதால் தோட்டத் தொழிலாளர்கள் தொழில் இல்லாமல் கஷ்டத்தை எதிர் நோக்கியதோடு, வாரத்தில் 3 அல்லது 4 நாள் கள் மாத்திரமே தோட்ட நிர்வாகத்தால் தொழில் வழங்கப்பட்டது.

தற்போது கொழுந்து விளைச்சலின் காரணமாக தொழிலாளர்கள் குடும்ப வருமானத்தைக் கருத்தில் கொண்டு, நாளுக்கு அதிகமான கிலோ கிராம் கொழுந்தைப் பறித்து வருவதோடு அதிகாலை 6 மணிக்கு தொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் மாலை 6 மணி வரை தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

தோட்ட நிர்வாகம் இவர்களுக்கு பகல் உணவு வழங்குவதோடு, மாலை நேரத்தில் கொழுந்து மடுவங்களில் வைத்து கோப்பித் தேநீர் வழங்கி வருகின்றனர். இதனால் தொழிலாளர்கள் மாலை நேரத்தில் அதிக நேரம் வேலை செய்வதாகத் தோட்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-சில தோட்டங்களில் தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தில் தண்ணீர் இருப்பதால், கழிவு என்ற அடிப்படையில் ஒரு நேர நிறுவைக்கு 3 கிலோ தொடக்கம் 5 கிலோ வரை தங்களுடைய கொழுந்தின் எடையில் கழிக்கப்படுவதாகவும் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இன்னும் சில மாதங்களுக்கு மாத்திரமே தேயிலைச் செடிகளில் கொழுந்து விளைச்சல் இருக்கும் எனவும், அதன்பின் கொழுந்து விளைச்சல் படிப்படியாக குறையும் எனவும் தொழிலாளர்கள் தெரிவிப்பதோடு மீண்டும் வறட்சி ஏற்படும், அப்போது மீண்டும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படுமெனவும் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு சம்பள உயர்வு பேச்சில் கலந்து கொள்ளும் தொழிற்சங்கங்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்று தருமாறு தோட்ட தொழிலாளர்கள், அரசியல் வாதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ)

# மாணவர் கடத்தல் வழக்கு நிறைவடையும் நிலையில்

## கோட்டை பிரதான நீதிவான் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கடற்படையினரால் மாணவர்கள் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்து விட்டன என்று கருதுகின்றேன் என கோட்டை பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, போதுமான சாட்சியங்கள் மற்றும் சந்தேக நபர் தொடர்பிலான விவரங்கள் உள்ளன. எனினும் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் அளவுக்கு விடயங்கள் உள்ளனவா என்று சட்டமா அதிபரே தீர்மானிக்க வேண்டும் என்றும் நீதிவான் ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கோட்டை பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே நீதிவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரணை தொடர்பான மேலதிக அறிக்கையுடன், குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா மன்றில் பிரசன்னமாகியிருந்தார். பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அச்சலா மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலிருந்து 11 மாணவர்கள் கடற்படையின் கடத்தல் குழுவால் கடத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் சமர்ப்பித்த மேலதிக விசாரணை அறிக்கையில், கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 11 பேரும் கடற்படையின் வெலிசறை, கோட்டை, திருகோணமலை கன்சைட் நிலத்தடி முகாம் ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும், பலரிடம் விடுதலை தொடர்பில் கப்பம் கோரப்பட்டிருந்தமையும் விசாரணையின்போது உறுதியாகியுள்ளது, விசாரணைகள் தொடர்கின்றன. மேலும், சில சான்றுகள் உறுதியானதும் சந்தேகநபர்களைக் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்த வேண்டியது எனது பொறுப்பாகும்.

இந்த நிலையில் கடத்தப்பட்ட பதினொரு பேரில் ஒருவரான ஜோன் ரீட், கடத்தப்படும்போது பயணித்துக் கொண்டிருந்த டொயாடோ ரக வான் தொடர்பில் நாம் முன்னெடுத்த விசாரணைகளில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. திருகோணமலை கடற்படைத் தளத்தில் இஞ்சின், செஸி இலக்கங்கள் மாற்றப்பட்டு இந்த வான் பயன்படுத்தப்படுவது தொடர்பில் தகவல் கிடைத்தது.

கடந்த வாரம் ஜோன் ரீட்டின் உறவினர்களுடன் திருகோணமலை சென்று வானைப் பரீட்சித்த போது அவர்கள் அந்த வானை அடையாளம் காட்டினர். அது மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. 8 விடயங்களை மையப்படுத்தி அதனை அடையாளம் காட்டினர். அதன் சாரதியாகக் கடமையாற்றிய ஒருவரையும் அழைத்துச் சென்று வானை அடையாளப்படுத்தவுள்ளோம்.

அங்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தபோது, வெலிசறை கடற்படைத் தளத்தில் உள்ள இரகசிய அறை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்த முடிந்தது. இதன் பின்னர் வெலிசறை கடற்படை முகாமுக்கு சென்ற நாம் அங்குள்ள இரகசிய அறையைப் பார்த்தோம். அதில் மோட்டார் சைக்கிள், டொயாடோ ரக வான் மற்றும் கடத்தப்பட்ட மேலும் சிலர் பயணித்த வாகனங்களுடையவை என்று நம்பப்படும் வாகனங்கள் துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன.

72 துண்டுகள் அந்த அறையில் உள்ளன. அந்த அறையை நாம் தற்போது சீல் வைத்துள்ளோம். அந்த வாகனப் பாகங்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இரகசிய அறையில் இருப்பதாக எமது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அந்த வாகனம் தொடர்பிலான விசாரணையில் கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரின் கடத்தல் விவகாரம் தெரியவந்தது. அது தொடர்பில் குற்றத் தடுப்பு பிரிவு தாக்கல் செய்த வழக்கு வேறாக விசாரணையில் உள்ளது, என்று மன்றில் தெரிவித்தார் பொலிஸ் பரிசோதகர்,

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அச்சலா, வழக்கு கடந்த 8 வருடங்களாகத் தொடர்கின்றது. தற்போது சந்தேகநபர்கள் பற்றியும் அவர்களுக்கு எதிரான சாட்சியங்களும் இந்த மன்றுக்கு அறிக்கைகள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையில் சந்தேகநபர்கள் எவரும் மன்றில் இதுவரை முன்னிலைப்படுத்தப்படவில்லை-என்றார்.

இது தொடர்பில் நீதிவான் லங்கா ஜயரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகரிடம் கேட்டார். அதற்குப் பதிலளித்த பொலிஸ் பரிசோதகர், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே விசாரணை நடைபெறுகின்றது. நாம் சுயாதீனமாக முன்னெடுத்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கிருந்து எமக்கு இதுவரை ஆலோசனை கிடைக்கவில்லை. ஏற்கனவே கிடைத்த ஆலோசனைக்கு அமையவே மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன- என்றார்.

மீளவும் வாதிட்ட சட்டத்தரணி அச்சல, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் பேசினேன். விசாரணையாளர்களுக்கு பூரண அதிகாரத்தை வழங்கியுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் விசாரணையாளரான பொலிஸார் தமக்கு ஆலோசனை கிடைக்கவில்லை என்று கூறும் நிலையில் மன்றில் சட்டமா அதிபரின் பிரதிநிதி ஒருவரை இந்த வழக்கில் முன்னிலையாக உத்தரவிடுமாறும், இதன் போது இதற்குத் தீர்வு காண முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் நீதிவான் லங்கா ஜயரத்ன தீர்மானத்தை மன்றில் அறிவித்தார். வழக்கு தொடர்பிலான முழு அறிக்கையையும் நான் படித்தேன். விசாரணைகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. புலனாய்வுப் பிரிவு விசாரணை செய்யவில்லை என்று கூற முடியாது. விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்து விட்டன என்று நான் கருதுகின்றேன். தற்போதைய நிலவரப்படி போதுமான சாட்சியங்கள் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பிலான விவரங்கள் உள்ளன. எனினும் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் அளவுக்கு விடயங்கள் உள்ளனவா என்று சட்டமா அதிபரே தீர்மானிக்க வேண்டும். சட்டமா அதிபரின் ஆலோசனையில் உள்ள ஒரு கோவை தொடர்பில் நான் உத்தரவுகளை வழங்க முடியாது.

பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணியின் வாதங்களையும் மன்று கவனத்தில் கொள்கின்றது. இந்த மன்றானது குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குத் தேவையான சந்தேகநபர்கள் தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கின்றது. இந்த உத்தரவை பதிவுத் தபாலில் கடிதமாக இந்த மன்று அனுப்புகின்றது.

சட்டமா அதிபரின் ஆலோசனையைப்பெற்று அது குறித்த விடயத்தை அடுத்த தவணையில் மன்றில் சமர்ப்பிக்கவும். ஆலோசனை கிடைக்காதவிடத்து, சட்டமா அதிபரின் பிரதிநிதியை மன்றுக்கு அழைப்பது குறித்தோ, வேறு உத்தரவுகளை பிறப்பிப்பது குறித்தோ மன்று தீர்மானிக்கும் - என்றார்.

இதனையடுத்து இது குறித்த விசாரணைக்ளை ஜூலை மாதம் 13 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்தி வைத்தார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் திரவ இயற்கை எரிவாயு அமைப்பது தொடர்பில் மௌனம்

கொழும்பு, ஜூன் 3
சம்பூரில் திரவ இயற்கை எரிவாயு அனல் மின் நிலையத்தை அமைப்பது தொடர்பாக இதுவரை இந்திய – இலங்கை அரசுகளுக்கு இடையில் எந்தப் பேச்சும் ஆரம்பிக்கப்படவில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

சம்பூரில் 500 மெகாவாட் அனல் மின்திட்டத்தை அமைப்பதற்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை அமைக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம், விடுத்த வேண்டுகோளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டிருந்தார்.

இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துமாறும் இந்தியப் பிரதமர் தமது அதிகாரிகளிடம் பணித்திருந்தார்.

அதையடுத்து, அனல்மின் திட்டம் சார்ந்த பணிகள் நிறுத்தப்பட்டுள்ள போதிலும், திரவ இயற்கை எரிவாயு மின் நிலையத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும், இந்திய – இலங்கை அதிகாரிகளிடையே இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் திட்டம் குறித்து இந்திய அதிகாரிகள் மௌனமாக இருக்கின்றனர். இது பற்றிய இறுதி முடிவு இந்திய – இலங்கை அரசு உயர் மட்டங்களிலேயே எடுக்கப்படவுள்ளது,

அதேவேளை, இயற்கை எரிவாயுமின்திட்டம் அதிக செலவானதாக இருக்கும் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எண்ணெய் விலை தற்போது குறைவாக இருந்தாலும், அது எந்த நேரத்திலும் அதிகரிக்கலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் பொருளாதார ரீதியாக, திரவ இயற்கை எரிவாயுவின் விலையும் அதிகரிக்கும்.

அதனால் இதனை அடிப்படையாகக் கொண்டு, மின் உற்பத்தியை மேற்கொள்ளும்போது மின் பயனீட்டாளர்களுக்கு அதிக மானியத்தைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-ஜ-5)

# புகலிடம் கோரியோர் கடவுச் சீட்டு தடையை நீக்கியது இலங்கை அரசு

கொழும்பு, ஜூன் 3
அரசியல் அழுத்தங்களால் வெளிநாடுகளில் புகலிடம் கோரிய இலங்கையர்களுக்கு, இலங்கைக் கடவுச் சீட்டுகளை வழங்க, விதிக்கப்பட்டிருந்த தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

வெளிநாடுகளில் புகலிடம் கோரியவர்களுக்கு, இலங்கைத் தூதரகங்கள், கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு மகிந்த ராஜபக்ச அரசு கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தடை விதித்தது.

இந்தத் தடை அரசமைப்பில் கூறப்பட்டுள்ள இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவ தாக இருக்கின்றது என்றும், சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களுக்கு முரணாக இருக்கின்றது என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சட்டத்தின் ஆட்சியை மீள உறுதிப்படுத்தும் வகையிலும், நல்லிணக்க முயற்சிகளின் ஒரு கட்டமாகவும், இலங்கையர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும், வெளிநாடுகளில் புகலிடம் தேடியவர்கள் இலங்கைக்குத் திரும்பி வருவதற்கான தடைகளை அகற்றுவதற்காகவும், புகலிடம் தேடியவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஜ-5)

# அரசமைப்பு குறித்த அறிக்கையை அரசமைப்பு நிர்ணய சபை ஆராயும்

கொழும்பு, ஜூன் 3
புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்தறியும் ஆணைக் குழுவின் அறிக்கையை அரசமைப்பு நிர்ணய சபை ஆராயவுள்ளது. அதன் தலைவர் என்ற அடிப்படையில் சபாநாயகர் கரு ஜயசூரியவால் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அடுத்த வாரம் இந்த அறிக்கையின் பிரதிகள் கையளிக்கப்படவுள்ளன.

அரசமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவின் இறுதி அறிக்கை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்தே சபாநாயகரிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் 300 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையானது தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டும், சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கக்கூடிய வகையில் 225 பிரதிகள் எடுக்கப்பட்டுமே சபாநாயகரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவர் என்ற அடிப்படையில் சபாநாயகர் கரு ஜயசூரியவால் இது பேரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும், நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிக்கைப் பிரதிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதையடுத்து, அறிக்கையின் பரிந்துரைகள் குறித்து அரசமைப்புப் பேரவையின் ஆறு உப குழுக்களும் ஆராயும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-ஜ-5)

# ஜனாதிபதி திறந்த விடுதியில் தீ விபத்து




கொழும்பு, ஜூன் 3
அம்பாந்தோட்டையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்ட சங்கிரி – லா நட்சத்திர விடுதியில் நடந்த கலை நிகழ்வுகளின்போது தீ விபத்து ஏற்பட்டது.

விழாவில் வாண வேடிக்கைக்காக வெடிக்கப்பட்ட பட்டாசுகளால், நடன அரங்குக்கு மேலாக அமைக் கப்பட்டிருந்த வைக்கோலினாலான கூரையில் தீப் பிடித்தது.

விடுதியைத் திறந்து வைத்த பின்னர், ஜனாதிபதி அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தபோது, மாலை 6.55 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டது.

திறந்தவெளி அரங்கில் விருந்துபசார நிகழ்வு நடந்து கொண்டிருந்தபோது, ஏற்பட்ட தீ விபத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எனினும், சிறிது நேரத்தில் தீ அணைக்கப்பட்டது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ற-ஜ-5)

# முஸ்லிம்களுடன் பிளவை ஏற்படுத்தவே தாஜுதீன் குற்றம் சுமத்தப்படுகின்றது

## நாமல் ராஜபக்ச எம்.பி. தெரிவிப்பு



முஸ்லிம் மக்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தவே றக்பி வீரர் வசிம் தாஜுதீன் கொலை குறித்து குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது: –

ஜனாதிபதித் தேர்தல் அண்மித்த போது மகிந்தவிடமிருந்து முஸ்லிம் மக்களை விலக்கும் நோக்கில் பல்வேறு தந்திரங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த தந்திரோபாயங்களில் ஒன்றே வசிம் சகோதரரின் உயிரிழப்பு கொலை எனக் கூறி அந்தக் குற்றச்சாட்டை ராஜபக்ச மீது சுமத்துவதாகும்.

தாஜுதீன் கொலை யோசிதவிடம் தொடங்கி இன்று எங்கு முடிவடைந்துள்ளது? பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோரில் இன்று முடிவடைந்துள்ளது.

பேராசிரியர் ஆனந்த சமரசேகரவே முதலில் உடற்கூற்றுப் பரிசோதனை செய்து, சட்ட வைத்திய அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பித்தார். அவர் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற ஓர் சட்ட வைத்திய அதிகாரியாவார். அவருடைய அறிக்கையைத்தானே பிழை எனக் கூறுகின்றார்கள்.

இந்த அறிக்கை பிழை எனக் கருதி நீதிமன்றம் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்து உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தியிருந்தது. இந்த அறிக்கை வெளியிடப்பட முன்னதாக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றிலும், ஊடகப் பேச்சாளர் ஒருவர் ஊடகத்திலும் சம்பவம் பற்றி விவரிக்கின்றார்கள்.

அப்படியானால் அவர்கள் எவ்வாறு அறிக்கையின் விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொண்டார்கள்? எனது கேள்வி அதுவேயாகும். மறுபுறத்தில் நோக்கினால், ஆனந்த சமரசேகர இந்த அறிக்கை மட்டுமன்றில்லாது பல அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

அனைத்து அறிக்கைகள் மீதும் சவால்விடுக்கப்பட முடியும்தானே. இந்தக் காலப் பகுதியில் சுகாதார அமைச்சராக தற்போதைய ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேன கடமையாற்றியிருந்தார்.

எனக்குத் தெரிந்த வகையில் இந்த விசாரணைகளின் பின்னணியில் அரசியல் சக்தியொன்று இருக்கின்றது என்பதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். இந்த விடயம் எதிர்காலத்தில் அம்பலமாகும் – என்றார். (ற-5)

# விமானப் படைக்கு இப்போது எதற்குப் போர் விமானங்கள்?

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கேள்வி

கொழும்பு, ஜூன் 3
விமானப்படைக்கு எதற்காக 400 மில்லியன் டொலர் செலவில் போர் விமானங்களை வாங்க வேண்டும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து, ஆயிரத்து 500 மில்லியன் டொலரைக் கடனாகப் பெறவுள்ளது. அந்த நிதியைப் பயன்படுத்தி, 400 மில்லியன் டொலருக்கு, போர் விமானங்கள் வாங்கப்படவுள்ளன.

மில்லியன் கணக்கான டொலரைச் செலவிட்டு போர் விமானங்களை வாங்குவதற்கு, நாட்டில் இன்னமும் போர் நடந்து கொண்டிருக்கிறதா? இலங்கைக்கு வெளிநாட்டுப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதும் இருக்கிறதா?

அமெரிக்கக் கடற்படையின், ஏழாவது கப்பற்படைப் பிரிவு, திருகோணமலைத் துறை முகத்தை தமது தளமாகப் பயன்படுத்தவுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன – என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# காட்டு யானை தாக்கி 6 வயதுச் சிறுமி சாவு

காட்டு யானை தாக்கியதில் 6 வயதுச் சிறுமி பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சிறுமியின் தந்தை, படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுணதீவு கற்பகக்கேணி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் சிறுமி தனது தந்தையுடன், மாமியின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 6 வயதுடைய இராசையா ரோஜினி என்ற சிறுமியே காட்டுயானைத் தாக்குதலில் உயிரிழந்தவராவார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வாக்குரிமை உங்களது உரிமை சார்ந்த விசேட செயற்பாடு... மறவாதீர்.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரசைக்கும், தனக்கு உள்ள வாக்குரிமையைத் தப்பாது வழங்குவது கட்டாயக் கடமை ஆகும். அதனை உதாசீனம் செய்வது, பலப்பல இடைஞ்சல்களையும், இல்லாமைகளையும் வலிந்து பெறுவதாக முடியும்.

நாங்கள் இந்த நாட்டின் பிரசைகள் என்பதற்கான அடித்தளமும், முதன்மை ஆதாரமும் வாக்குரிமையே. அந்த உரிமையை எமது சார்பில் வேறு எவருக்கும் மாற்ற இயலாது. அதனை விற்க முயல்வது எங்களை நாங்களே எரித்துக் கருக்கும் செயல்.

மேலும், உலகம் முழுவதிலும், ஜனநாயக தத்துவத்தின் சின்னமாகவும், விழுமியமாகவும் விளங்குவதும், ஒவ்வொரு நாட்டினதும் மக்கள் ஆட்சியை வெளிப்படுத்தும், தேர்தலும் அதன் ஊடான ஆட்சியுமே ஆகும்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் மட்டுமன்றி, சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும், தமக்கு உள்ள வாக்குரிமையைக் கைக்கொண்டே தமது ஜனநாயக உரிமையை நிலைப்படுத்தவும் வெளிப்படுத்தவும் இயலும்.

தமிழ் மக்களைப் பொறுத்த அளவில், வாக்குரிமை மிகப் பிரதான தேவை. அதனூடாகவே ஆட்சியாளர்களால் தமக்கு இழைக்கப்படும், ஜனநாயக விரோதச் செயல்களை உடைத்தெறிய வாய்ப்புண்டு.

அதனை உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தும் வகையில், தமிழ் மக்களை நசுக்கி ஒடுக்க முயலும் இனவாத சக்திகளையும், அரசியல் புல்லுருவிகளையும் கடாசி எறிய வாய்ப்புக் கிடைக்கும்.

ஒவ்வொருவரும், தங்களைத் தாங்களே வாக்காளர்களாகப் பதிவதற்கான, இந்த ஆண்டுக்கு உரிய காலம், கடந்து சென்ற மே மாதம் 16 ஆம் திகதியன்று ஆரம்பமாகி இருந்தது.

இதுவரை தமக்குரிய பதிவுகளை மேற்கொள்ளத் தவறியோர், விரைந்து செயற்பட வேண்டும். மிகப் பிரதானமான பதிவை காலம் கடத்தாமல் செய்வதே மிக உத்தமம்.

வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்வதற்கான செயற்பாட்டை ஆற அமரப் போடக்கூடாது; முடியாது.

மற்றொரு பிரதான அம்சம் என்னவெனில், வாக்காளராக பதியும் பணியை ஆழமாக நோக்கின், அது உங்களோடு மட்டுமன்றி, உங்கள் சந்ததிகளோடும் தொடர்பு உடைய உரிமை சார்ந்த பணியை மேற்கொள்வதாக அமையும்.

மேலும், பி.சி.படிவத்தை நிரப்பி அனுப்புவதோடு தரித்து விடாதீர்கள். அடுத்து வரும் மாதங்களில் பதிவு இடம்பெற்ற பட்டியலைப் பார்வையிட்டு, உங்கள் பதிவை உறுதி செய்து கொள்வதும் மிக அவசியம்.

இது விடயத்தில் கூர்ந்த கவனத்துடனும், பொறுப்பு உணர்வோடும் செயற்பட வேண்டும். மிகக் குறிப்பாக நாளை பார்த்துக்கொள்வோம் என்று தள்ளிப்போடும் போக்கை முற்றாகத் தவிர்த்து விடுங்கள். இன்றே அந்தப் பணியை முன்னெடுத்து முடிக்க முயலுங்கள்.

நீங்கள் மட்டுமன்றி, உங்கள் இனத்தை வாழ வைக்கவும் உதவுங்கள். ஏனெனில், வாக்குரிமை உங்களினதும், உங்கள் சந்ததிகளினதும் தொடர்புடைய உரிமை சார் விசேட செயற்பாடு. அதனை மறந்து விடாதீர்கள். காலதாமதம் வேண்டவே வேண்டாம். கரணம் தப்பின் மரணம் என்பதை மனதில் கொள்ளுங்கள்!

# வலிகளுக்கான தீர்வைக் காண்பதற்கு சுதந்திரமான செயலணி

எம்.எஸ்.ரி.கௌரி





மோதல், அழிவு அதன் வலிகள், ஆகியவற்றிலிருந்து மீளாத பலர். இந்த நிலையில் நல்லிணக்கம் பற்றி பேசுகின்றபோது, வலிகளுக்கான தீர்வைக்காணும் பொறிமுறைகள் முக்கியம் பெறுகின்றன. நடந்த பல கசப்பான அனுபவங்களுக்கான உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக் கூறல், அதற்கான இழப்பீடுகளை வழங்கல் என்பவை நல்லிணக்கத்தை பற்றி கதைப்பதற்கான பாதைகளைத் திறக்கும் என்பதுதான் பலரது அபிப்பிராயம்.

அந்த அடிப்படையில் சிவில் சமூகத்தில் இருந்து, சுதந்திரமாக இயங்கக்கூடிய முன்னணி அங்கத்தவர்கள் 11 பேரைக் கொண்ட குழுவொன்றை அரசு நியமித்தது. அதில் சட்டத்தரணி திருமதி மனோரி முத்தெட்டுவேகம(தலைவர்), கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து (செயலாளர்), கலாநிதி ஃபர்சனா ஹனீஃபா, பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, மிராக் ரஹீம், காமினி வியங்கொட, ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், பேராசிரியை கமீலா சமரசிங்க, விசாக்கா தர்மதாச, சட்டத்தரணி கே.டபிள்யு. ஜனரஞ்சன, பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். 'நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைச் செயலணி' சுதந்திரமாக இயங்கி நாட்டில் நல்லிணக்கதை ஏற்படுத்தத் தேவைப்படும் பொறிமுறைகள் பற்றி பொதுமக்களின் கருத்தை அறிந்து அதை அரசுக்கு சமர்ப்பிக்கும். அரசு அதை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளது.

அரசு ஏற்கனவே நல்லிணக்க பொறிமுறைகள் சிலவற்றை முன்வைத்துள்ளது. அவையாவன:- 1) விசேட வழக்குத் தொடுநரை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறை. 2) உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள்நிகழாமை தொடர்பான ஆணைக் குழு. 3) காணாமற்போனோர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கான அலுவலகம். 4) இழப்பீடுகளுக்கான அலுவலகம்என்பவையேஅவையாகும்.

இந்த விடயங்கள் தொடர்பிலும், வேறு பொறிமுறைகள் இருப்பின் அவை தொடர்பிலும் பொது மக்கள் தங்களது ஆலோசனைகளை முன்மொழியலாம். பொதுமக்கள் தனிநபராகவும், குழுக்களாகவும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கலாம். ஆலோசனைகள் தமிழிலோ ஆங்கிலத்திலோ சிங்களத்திலோ அமையலாம்.

பொதுமக்களது ஆலோசனைகள் அல்லது சமர்ப்பிப்புக்களை எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதிக்கு முன் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, செயலாளர், நல்லிணக்க பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைச் செயலணி, நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம், குடியரசுக் கட்டடம், சேர் பரோன்ஜயதிலக மாவத்தை, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது ,ctf.srilanka@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்க முடியும்.

மக்களது பிரச்சினைகளை கேட்பதோ அதற்கு உடனடித் தீர்வை வழங்குவதோ இந்தக் குழுவின் நோக்கமல்ல. பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கி செல்வதற்கான பொறிமுறைகளை அமைப்பதே இந்தக் குழுவின் நோக்கமாகும். அதற்காக மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது தொடர்பில் ஆலோசனைகளை முன்வைக்கலாம். உதாரணமாக, மக்களின் சமர்ப்பித்தல்களில் எப்படி விசாரணைகள் நடத்தப்படவேண்டும்? எவரால் நடத்தப்படவேண்டும்? வெவ்வேறு வகையினதான வன்முறைகளுக்கு எவ்வாறான இழப்பீடு வழங்கப்படவேண்டும்? நீதியையும் எதிர்கால சமாதானத்தையும் உறுதிப்படுத்த தேவையான சீர்திருத்தங்கள் (நிறுவன ரீதியாக அல்லது சட்ட ரீதியாக) எவை என்பவை பற்றிய ஆலோசனைகள் அமையமுடியும்.

இந்த ஆலோசனைகள் தொகுக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையாக்கப்படும். இது முழுக்க முழுக்க பொதுமக்களின் கருத்தாகவே அரசிடம் கையளிக்கப்படும். அரசு அதைக் கவனத்தில் கொண்டு நிறைவேற்றும்.

இந்த ஆலோசனைகள் கருத்துக்களின்போது தனிநபரோ குழுவோ தமது பாதுகாப்பு கருதி அல்லது இரகசியம் பேண வேண்டியிருப்பின் சாதாரண தபாலில் அவற்றை அனுப்பி வைக்க முடியும். அதேவேளை இரகசியம்போணப்படவேண்டும் என்று கோரப்படாதவிடத்து அது பகிரங்கமாக வைக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# தோல்விகளுக்கு மத்தியிலும் ஐ.எஸ்ஸின் தாக்குதல் முயற்சிகள்



உலகையே மிரட்டிக் கொண்டிருக்கும் ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் இன்று தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களின் கோட்டையாகத் திகழும் சிரியாவிலும் ஈராக்கிலும் அந்தந்த நாடுகளின் அரசுகள் ஒரே நேரத்தில் ஐ.எஸ்கள் மீதான தாக்குதல்களைத் தொடக்கி யுள்ளன. சிரியாவில் ஐ.எஸ்களின் தலை நகராக உள்ள ரக்கா பிராந்தியத்தைக் கைப்பற்றும் சிரியா அரசின் படை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதே வேளை, சிரியாவில் இயங்கும் அமெரிக்காவால் உருவாக்கப் பட்ட சிரியா ஜனநாயகப் படை என்ற குர்திஷ் படைகளும், மறு புறம் ஐ.எஸ்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடக்கியுள்ளன. சம காலத்தில் ஈராக்கிலும் படை நகர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஈராக்கில் ஐ.எஸ்களின் வசமிருக்கும் இரண்டு பெரும் நகர்களுள் ஒன்றான பலூஜாவைக் கைப்பற்றும் படை நகர்வுகள் இன்று இடம்பெறுகின்றன. அமெரிக்க விமானப் படையின் உதவியுடன் ஈராக்கிய படையினர் பலூஜா நகரை இப்போது அண்மித்துள்ளனர். இப்போது வரை அங்கு கடும் மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

### சிக்கியுள்ள 50 ஆயிரம் மக்கள்

அந்த நகரில் சுமார் 50,000 மக்கள் சிக்கியுள்ளனர். அவர்கள் வேறு இடங்களுக்குச் செல்வதற்கு ஐ.எஸ்கள் அனுமதி மறுக்கின்றனர். மீறிச் செல்பவர்கள் ஐ.எஸ்களால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

பலூஜா நகருக்குச் செல்லும் அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டுள்ளதால், மக்கள் அங்கு பட்டினியால் சாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதுவரை பலர் அவ்வாறு உயிர் இழந்துள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. பலூஜா நகர் விழுமாக இருந்தால், ஐ.எஸ்கள் வசம் எஞ்சி இருக்கப்போவது மொசூல் நகர் மாத்திரம்தான். அதுவும் மீட்கப்பட்டால் ஐ.எஸ்களின் ஆட்டம் ஈராக்கில் முடிவுக்கு வந்துவிடும்.

2014இல் ஈராக்கில் ஐ.எஸ். கைப்பற்றிய அதிகமான இடங்கள் அவர்களிடமிருந்து பறிபோயுள்ளன. கடந்த வருடம்கூட அவர்களின் வசமிருந்த மிகப் பெரிய நகரான ரமதி நகர் ஈராக் படையினரிடம் வீழ்ந்தது. அவர்கள் தொடர்ச்சியாகத் தோல்வியைச்சந்தித்துவருவதைக்காணக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு-இவர்கள் ஒருபுறம் தோல்விகளைச் சந்தித்து வருகின்றபோதிலும், மறுபுறம், இவர்களின் பயங்கரவாதத் தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் தொடரவே செய்கின்றன.தம் மீது தாக்குதல்களை நடத்தும் நாடுகள், இவர்கள் மீது இவ்வாறு தாக்குதல் நடத்துவதையும் மிரட்டுவதையும் அவதானிக்கலாம்.

ரஷ்யா, பிரான்ஸ், பெல்ஜியம், துருக்கி மற்றும் சவூதி போன்ற நாடுகள் தாக்குதல்களை எதிர்கொண்டுவிட்டன. அவை மீண்டும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றன. அந்த வகையில், பிரான்ஸ் இரண்டாவது தடவையாகவும் தாக்குதல் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. பிரான்ஸில் கடந்த வருடம் ஐ.எஸ் கள் நடத்திய தற்கொலைத் தாக்குதலின்போது 130 பேர் கொல்லப்பட்டதை நாம் அறிவோம். அதனைத் தொடர்ந்து பிரான்ஸ் அதன் பாதுகாப்பைப் பலப்படுத்தியது. இந்தநிலையில், பிரான்ஸ் தாக்குதலின் சூத்திரதாரியான அப்துல் சலாம் பெல்ஜியத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரைப் பிரான்ஸ் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். அவர் பல இரகசியங்களை வெளியிட்டுள்ளார்.

### உதைபந்தாட்ட நிகழ்வில் தாக்குதல்

இவரது மடிக்கணினியைப் பொலிஸார் பரிசோதித்துப் பார்த்தபோது, பிரான்ஸில் இடம்பெறவுள்ள சிற்ஷலி - 2016 என்ற உதைப்பந்தாட்ட நிகழ்வின்போது தாக்குதல் நடத்துவதற்கு ஐ.எஸ். பயங்கரவாதிகள் திட்டமிட்டிருப் பது தெரிய வந்தது.

அதுமாத்திரமன்றி, அந்த உதைப்பந்தாட்டத்தின் ஒரு நிகழ்வான ரஷ்யா மற்றும் இங்கிலாந்துக்கு இடையிலான ஆட்டத்தின்போது அதைக் கண்டு கழிக்கவரும் மேற்படி இரு நாடுகளினதும் இரசிகர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் அவர்கள் திட்டமிட்டிருப்பதும்-தெரியவந்துள்ளது.

யூரோ 2016 நிகழ்வானது இந்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாதம் இடம்பெறவுள்ளது. ஐ.எஸ்களின் தாக்குதலில் இருந்து இரசிகர்களைப் பாதுகாப்பதற்காக ஒரு மாதத்துக்குப் பாதுகாப்பு வழங்குவது பிரான்ஸ் அரசுக்குப் பெரிய சவாலாகும். அந்த ஒரு மாத விளையாட்டு நிகழ்வில் ஏதாவது ஒரு நிகழ்வில் அவர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என அஞ்சப்படுகின்றது. இதனால், பிரான்ஸ் படையினர் இப்போதிலிருந்தே கடும் பாதுகாப்பு ஒத்திகையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அசாதாரண நிலைமையால் சுமார் இரண்டு லட்சம் இரசிகர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கி இருக்கின்றனர். இதனால், அனேகமாக, இந்த நிகழ்வு சோபை இழந்து காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு, பிரான்ஸ் செல்லவுள்ள தங்கள் நாட்டுப் பிரஜைகளை அமெரிக்க எச்சரித்தும் உள்ளது. இன்னம் ஓரிரு மாதங்களில் ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்களின் நிலை என்னவென்பதை அறியலாம். அந்த நாடுகளில் இருந்து அவர்கள் முற்றாக விரட்டப்பட்டால் அவர்கள் கால்பாதிக்கும் அடுத்த நாடு லிபியாவாகத்தான் இருக்கும். அங்கு அவர்கள் மெல்ல மெல்ல அவர்களை நிலைப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

எது எப்படியோ, சிற்ஷலி 2016 நிகழ்வின்போது ஐ.எஸ். பயங்கரவாதிகள் முடியுமானவரை அவர்களின் கை வரிசையைக் கட்டுவதற்கு முற்படுவர் என்பது நிச்சயம்.

# பாதை மாறுகின்ற பஸ்களால் பாதிப்புறும் அரச ஊழியர்கள்

கடந்த மாதம் 6 ஆம் திகதி அன்று ஏ-9 வீதியில் (யாழ். சாள்ஸ் பாடசாலைக்கு அருகில்) மாலை 4.15 மணியளவில் திருகோணமலை செல்லும் பஸ்ஸூக் காகப் பல மணி நேரம் காத்திருந்து, பேருந்து வராததனால், வவுனியா சென்று மீளவும் திருகோண மலையில் உள்ள எனது வீட்டுக்குச் செல்ல இரவு 11.15 மணி ஆனது. இதனைச் சந்தித்த துர்ப்பாக்கியசாலிகள் நாமிருவர்.

அன்று பஸ் வராமை தொடர்பாகத் தெரிந்த ஒருவரிடம் வினவியபோது, அந்த பஸ் வைத்தியசாலை வீதியூடாகப் பயணித்து விட்டதாக அறிந்தோம். இந்தப் பாதை எதற்கு? ஏ-9 பாதை எதற்கு? இதற்கு எவர் பொறுப்பாளிகள்?

இது மாத்திரமலல்ல நாம் யாழ்ப்பாணத்துக்கு வருவது தொடர்ச்சியாக அல்ல. ஆனாலும் அடிக்கடி வருவதுண்டு. கடந்த பங்குனி மாதம் கச்சேரியில் உள்ள கடமையை முடித்து, கச்சேரிக்கு முன்பாக நின்ற வேளையில் மாலை 4.15 மணியளவில் திருகோணமலை செல்லும் பஸ் கச்சேரியில் நிற்காது, நடுவீதியில் நின்ற ஓட்டுநருக்குத் தெரிந்த ஒரு நபரை ஏற்றிச் சென்றது. நாம் துரத்தியபோதும் நிற்காது சென்று விட்டது.

அன்று பஸ்ஸூக்காகக் காத்து நின்ற கிளிநொச்சியைச் சேர்ந்த அரச ஊழியர்கள் இருவருடன் கதைத்தபோது, அவர்களில் ஒருவர் கிளிநொச்சியிலிருந்து 18 கிலோ மீற்றர் உள்ளே செல்ல வேண்டிய இடத்தைச் சேர்ந்தவராம். இப்படித்தான் ஒவ்வொரு முறையும் பஸ் தங்களை ஏற்றாது செல்வதாகக் கூறி அவர் கவலைப் பட்டார். தான் ஏனைய பஸ்களில் சென்றால் வீட்டுக்குப் போகும்போது ஏழு மணியை எட்டிவிடுமாம். ஆனால் இந்த பஸ்ஸில் சென்றால் மாலை ஆறு மணிக்கு செல்லலாமாம் என்றும் தெரிவித்தார்.

பருவகாலச் சீட்டுக்களை எடுத்தவர்களின்பாடு இதைவிட மோசமானது. நண்பி ஒருத்தி பருவகாலச் சீட்டுப் பெற்றுள்ளார். அவர் கிளிநொச்சிக்கு இடைப்பட்ட இடத்தில் இறங்கிவிடுவார்.

அடிக்கடி தான் யாழ்ப் பாணம் பஸ் நிலையத்துக்குச் சென்றுதான் பயணிக்க வேண்டியிருக்கிறது என்று கவலைப்பட்டார். இரு வாரங்களுக்கு முன்னர் ஒருநாள் யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு சென்றபோது "சீசன் ரிக்கற் சனத்தை ஏற்றக்கூடாது" என்று தன் காதுபடவே நடத்துநர் கூறினாராம் எனக் கவலைப்பட்டார். "அப்படிச் சொல்வதற்கு அவர் யார்? நாம் எமது இலகு பயணத்துக்கே பருவகாலச் சீட்டுப் பெற்றுள்ளோம். ஆனால் நடத்து நர்கள் இப்படிக் கூறுவது பொருத்தமானதாகுமா?" என்று கொதித்தார்.

பருவகாலச் சீட்டுக்களை பஸ் நிலையங்களே விநியோகிக்கின்றன. பின்னர் அதை வைத்திருப்பவர்களை ஏற்றக்கூடாது என்று நடத்துநர்கள் கூறுவதிலும், பயணிகளுடன் சினந்து பாய்வதிலும் என்ன நியாயம் உண்டு? நடத்துநர்களின் இத்தகைய கெடுபிடிகளால் பெரும்பாலும் அரச ஊழியர்களே பாதிப்புறுகிறோம். எங்கள் மனவேதனை அவர்களுக்குப் புரியாது.

யாழ். சாலை மற்றும் திருகோணமலை சாலை முகாமையாளர்களே, வெளிமாவட்டங்களில் இருந்து கடமையின் நிமித்தம் வருகின்ற எங்களுக்காகத் தயவு செய்து நடவடிக்கை எடுங்கள். அரச அதிபரே! எமக்கும் கடமையை முடித்து வேளைக்கு வீடு செல்ல வேண்டும் என்ற ஆசை இருக்காதா? யாழ். குடாநாட்டில் எத்தனை அரச திணைக்களங்களில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கடமை புரிகிறார்கள், ஏன் இவ்வாறான கஷ்டமான நிலை எமக்கு?

மேலும், அரச அதிபர் மற்றும் இ.போ.ச. முகாமையாளர்களின் கவனத்துக்குத் தெரியப்படுத்தும் விடயம் என்னவென்றால் ஏ-9 வீதி என்னும் வரையறையில் பெரிய அகன்ற வீதி இருக்கும்போது, குறுகிய பாதையான ஆஸ்பத்திரி வீதியை பஸ்கள் பயன்படுத்துவது எதற்காக? எனவே இந்த வீதியூடாக பஸ்கள் பயணிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டியது தங்களின் தலையாய கடமையாகும். எனவே இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து எங்களின் பயணத்துக்கு உதவி செய்வீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலூஜாவின் உப நகரை கைப்பற்றியது ராணுவம்

## கடும் மோதல் தொடர்கிறது



பக்தாத், ஜூன் 3
ஐ.எஸ் அமைப்பிடம் இருந்து ஈராக்கின் பலூஜா நகரை மீட்கும் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து அங்கு 20 ஆயிரம் சிறுவர்கள் உட்பட 50 ஆயிரம் பேர் அகப்பட்டுள்ளனர் என ஐ.நா. கவலை வெளியிட்டது.

அங்கு அகப்பட்டுள்ள மக்களை மனிதக் கேடயங்களாக ஐ.எஸ். அமைப்பு பயன்படுத்தி வருகின்றது. அத்துடன் ஆண்களையும், இளைஞரையும் தமக்காகப் போராடுவதற்கு ஐ.எஸ். அழைப்பு விடுத்துள்ளது. போராட மறுக்கும் ஆண்களை அது கொலை செய்து வருகின்றது. அத்துடன் ஏனைய பொது மக்கள் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

அத்துடன், ஐ.எஸ் அமைப்பின் கண்ணிவெடிகள், மறைமுகத் தாக்குதல்கள் அமெரிக்க கூட்டுப் படையினருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் என இராணுவ அவதானிப்புக் குழுவினர் தெரிவித்தனர். மேலும், இந்தப் போர் மிகவும் கடினமானதொன்று. முந்தைய தாக்குதல் போன்று அமையப்போவதில்லை என அவர்கள் மேலும் கூறியுள்ளனர். ஆனால், இரு நாள்களில் தாக்குதலை நடத்தி முடிப்போம் என ஈராக் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், நூற்றக் கணக்கான, பெண்களும், சிறுவர்களும் பலூஜா நகரில் இருந்து தப்பி வந்ததாக ஈராக் இராணுவம் தெரிவித்துள்ளது. உணவு, மருத்துவப் பொருள்கள், சுத்தமான நீர் என்பவற்றுக்கு பலூஜா நகரில் கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அங்கிருந்து தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

பலூஜா நகரைக் கைப்பற்றும் போர் ஆரம்பித்துச் சில தினங்கள் நிறைவடைந்துள்ளன. நகரைச் சூழவுள்ள 80 சதவீத நிலப்பரப்பு இராணுவத்தினர் வசமாகியுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.எஸ். அமைப்புக்கும், ஈராக்கின் கூட்டு இராணுவப் படைக்கும் கடும் போர் இடம்பெற்றதாக அவதானிகள் தெரிவித்தனர். மேலும், இராணுவத்தை தாக்கத் தற்கொலைப்படை, கண்ணிவெடித் தாக்குதல்கள், மறைமுகத் தாக்குதல்களை ஐ.எஸ். அமைப்பு நடத்துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கின் பாதுகாப்பு அமைச்சர் ஹமிட் அல் - மலிகி, பலூஜாவைச் சூழவுள்ள கிராமப் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டுள்ளன எனக் கடந்த திங்கட்கிழமை அறிவித்தார். இதனால் ஈராக் படையினர் கடும் இழப்புக்கு ஆளாயினர். ஆனால் இழப்புத் தொடர்பான விவரங்களைக் கூற அவர்கள் மறுத்து விட்டனர். குறிப்பாக நுவைமியா பகுதியில் கடும் தாக்குதல்கள் இடம்பெற்றன. இங்கு இடம்பெற்ற தாக்குதல்களில் மாத்திரம் 25 ஈராக் படையினர் கொல்லப்பட்டதுடன், 6 இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் அடுத்த கட்ட நகர்வு பலூஜாவை அடைவதாகும். மிகவும் ஆபத்தான தாக்குதல்கள். எதிர்வரும் நாள்களில் இடம்பெறவுள்ளன. மோசமான சுழலுக்குள் கால்களை விடுவது போன்ற உணர்வு. கடவுள் எங்களைக் காப்பாற்றுவாராக என ஈராக்கின் ஊடகப் பேச்சாளர் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார். (த-ரி4)

# ஆசிய
# படை
# சிரிய

## தென்கொரிய விமான




சியோல், ஜூன் 3
ஆசியாவுக்கு சிரிய அகதிகளின் வருகை ஆரம்பித்துள்ளது. நேற்று முன்தினம் தென் கொரிய விமான நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு பகுதியில் 28 சிரிய ஆண் அகதிகள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். தென் கொரிய அரசின் அனுமதியைப் பெறும் வரை அவர்களுக்கான தற்காலிக வீடாக விமான நிலைய காத்திருப்பு பகுதி அமைந்துள்ளது. சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக அங்கிருக்கும் மக்கள் பல நாடுகளுக்கும் அகதிகளாகத் தப்பிச் சென்று வாழ்ந்து வருகின்றனர். போர்ச் சூழல் காரணமாகச் சிரியாவில் அகப்பட்டுள்ள இளைஞர்கள் இராணுவத்தில் சேரவோ, அல்லது போராளியாகவோ வற்புறுத்தப்படுவதனால் அவர்கள் தப்பியோட வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டதாக தென் கொரியாவுக்கு தப்பிவந்த அகதி ஒருவர் தெரிவித்தார்.

தென் கொரிய விமான நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள், அங்குள்ள பயணிகள் இருக்கையில் படுத்துறங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் சுமார் 180 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், ஆனால் 50பேர் தங்குவதற்கான வசதியை மட்டுமே விமா நிலையம் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் கொரிய நீதித்துறை அமைச்சு 116 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. மூன்று வேளை உணவாக பர்கரும், சோடாவும் வழங்கப்படுகின்றன. பயணிகள் காத்திருக்கும் அறையில் சிரிய அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளதை தென் கொரிய நீதித்துறை மறுத்துள்ளது.

இந்த
யுள்ள
தென்
முன்வ
காரண
கூற எ
தென்
கள், து
யாவுக்
கடல்
ஆபத்
கோரி
துள்ள
தந்த அ
மேற்
னர். க
யாவில்
காப்பா
தந்தத

## 15,000 டொலர் பெறுமதியான சிலையை உடைத்தான் சிறுவன்



சீனாவில் கண்காட்சி ஒன்றில் சிறுவன் ஒருவன் சிலையொன்றை உடைத்த சம்பவம் நேற்று முன்தினம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறிய பொருத்துத் துண்டுகள் மூலம் உருவாக்கப்பட்ட ஆளுயரச் சிலை சிறுவன் தட்டியதால் சேதமடைந்தது. சூரொப்பியா எனும் அனிமேன் படத்தில் வரும் கதாபாத்திரம், சிறிய பொருத்துத் துண்டுகளால் 3 நாள்கள் உழைப்பில், 15 ஆயிரம் டொலர் செலவில் சோஹா என்ற வடிவமைப்பாளரால் உருவாக்கப்பட்டது.

இதனை அடுத்து சிறுவனின் பெற்றோர் சோஹாவிடம் மன்னிப்புக் கோரினர். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார் அத்துடன், சிறுவன் வேண்டும் என்று நடந்துகொள்ளவில்லை என அவர் தெரிவித்தார். (த-ரி4)



வட மத்திய பிரான்ஸில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக செய்ன் ஆறு அணைகளை மீறி வெள்ளம் பாய்கிறது. இந்த ஆறு முதன்முறையாக 1880 ஆம் ஆண்டு மே மாதமும், இறுதியாக 1910 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும் பெருக் கெடுத்தது. கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகு குறித்த நகரம் வெள்ளப் பெருக்குக்கு முகம் கொடுத்துள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவுக்கு
# யெடுக்கும்
# அகதிகள்

## ன நிலையத்தில் 180 பேர் காத்திருப்பு



இந்த நிலையில், அங்கு தரையிறங்கியுள்ள அகதிகளுக்கு பொறுப்புக் கூறத் தென் கொரியாவின் எந்தத் துறையினரும் முன்வரவில்லை. சட்ட நடவடிக்கைகளைக் காரணம் காட்டுவதன் மூலம் பொறுப்புக் கூற எவரும் முன்வரவில்லை.

தென் கொரியாவுக்கு வருகை தந்த அகதிகள், துருக்கி, சீனாவினூடாக தென் கொரியாவுக்குப் பயணித்துள்ளனர். மத்திய தரைக் கடல் மூலம் ஐரோப்பாவுக்கு பயணிப்பது ஆபத்து அதிகம் என்பதால் பாதுகாப்புக் கோரி தென் கொரியாவுக்கு வருகை தந்துள்ளனர். தென் கொரியாவுக்கு வருகை தந்த அகதிகளை அகதிகளாகச் சட்டப்பதிவை மேற்கொள்ள அதிகாரிகள் மறுத்து விட்டனர். காரணம் அவர்கள் நேரடியாகச் சிரியாவில் இருந்து வரவில்லை, மாறாகப் பாதுகாப்பான நாடுகளில் இருந்து வருகை தந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இவர்களுக்காக வாதிடும் சட்டத்தரணிகள், இவர்கள் பாதுகாப்பான நாட்டில் இருந்து வரவில்லை. சீனா வட கொரிய அகதிகளையே ஏற்காத நாடு, துருக்கி சர்வதேச மன்னிப்புச் சபையால் அகதிகளை விரட்டியதாக குற்றம் சுமத்தப்பட்ட நாடு. எனவே இவை பாதுகாப்பான நாடுகள் அல்ல என வாதிட்டுள்ளனர். முன்னதாக 1994 ஆம் ஆண்டில் 3 சிரியர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னர், 2014 ஆம் ஆண்டு அகதிகள் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு 668 பேர், மனிதாபிமான உதவி அடிப்படையில் நாட்டினுள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் ஏற்கனவே தென் கொரியாவில் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றித் தவித்து வருகின்றனர். புதியவர்களின் வருகை அதிக நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். (து-ரி4)

## கொலையில் முடிந்த தற்கொலை

சியோல், ஜூன் 3
தென்கொரியாவில்தற்கொலை செய்த இளைஞர் ஒருவர், வேறொருவரைத் தற்செயலாக கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குவாங்யு நகரில்,கடந்த செவ்வாய்க்கிழமை, 25 வயதான மாணவன் ஒருவர் தற்கொலை செய்வதற்காக 20 ஆவது மாடியில் இருந்து குதித்துள்ளார். அந்தக் கணத்தில் கீழே 38 வயதான குடும்பஸ்தர் ஒருவர் தனது, 8 மாதக் கர்ப்பிணி மனைவியுடனும், 5 வயது மகனுடனும் நடைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார். கீழ் நோக்கிக் குதித்த இளைஞர், குடும்பஸ்தர் மீது மோதினார். உடனடியாக இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனின்றி இருவரும் உயிரிழந்தனர்.
இந்தச் சம்பவத்தில் மாணவன் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். மாணவனின் காப்புறுதித் தொகையைப் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வழங்க பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். (து-ரி4)

## போர்க் குற்றம் புரிந்த ஒருவருக்கு பங்களாதேஷில் சாவுத் தண்டனை

டாக்கா, ஜூன் 3
பங்களாதேஷ் விடுதலைப் போரின்போது போர்க்குற்றத் தில்ஈடுபட்டதாகக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு சாவுத் தண்டனையும், இரண்டு பேருக்கு வாழ்நாள் சிறையும் விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ்விடுதலைப்போரின்போது பாகிஸ்தான் ராணுவத்துடன் இணைந்து போர்க்குற்றத்தில் ஈடுபட்டதாக மூவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதில், மோஹிபுர் ரஹ்மான் போரோ மியாவுக்கு சாவுத் தண்டனை விதித்து, பங்களாதேஷ் சர்வதேச குற்றத் தீர்ப்பாய தலைமை நீதிபதி அன்வருல் ஹக் தீர்ப்பளித்தார். (து)

## உலகின் மிக நீண்ட சுரங்கப் பாதை திறப்பு



பேர்ண், ஜூன் 3
உலகின் மிக நீண்ட சுரங்கப் பாதை சுவிஸில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பாதை ஐரோப்பாவை ஊடறுத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.
இந்த பாதை ஐரோப்பாவில் மக்களையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பும் என சுவிஸ் ஜனாதிபதி திறப்புவிழாவில் தெரிவித்தார். இந்த ரயில் முதற் பயணத்தில் ஐரோப்பியத் தலைவர்கள் பங்கெடுத்தனர். அத்துடன் ஜேர்மனியின் அதிபர் ஏஞ்சலா மோர்கல், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கொசிசஸ் ஹொலான்டே மற்றும் இத்தாலியப் பிரதமர் மற்றோ றென்சியும் முதல் பயணத்தில் பங்கெடுத்தனர். திறப்பு விழா வைபவத்தில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
கடந்த 17 ஆண்டுகள் காலமாக குறித்த சுரங்கப் பாதை கட்டப்பட்டு வந்தது. இதற்கு 12 பில்லியன் டொலர் செலவானதுடன், 125 ஊழியர்களின் உழைப்பில், 43 ஆயிரத்து 800 மணிநேரக் கட்டுமானத்தில் உருவாகியதாக சுவிஸ் ரயில்சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த ரயில் சேவை மூலம் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்குக் குறைந்த நேரத்தில் பயணிக்க முடியும். அத்துடன் சாலையில்வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதுடன், சூழல் மாசடைவும் தவிர்க்கப்படுகிறது. கனரகப் பொருள்களையும் இந்தப் பாதை மூலம் கொண்டு செல்ல முடியும். இந்த ரயில் மூலம் ஒவ்வொரு நாளும் 9 ஆயிரம் பயணிகள் பயணிப்பார்கள் என்றும், 2020 ஆம் ஆண்டளவில் அந்த எண்ணிக்கை 15 ஆயிரம் ஆக அதிகரிக்கும் எனவும் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (து-ரி4)

## விண்வெளி வீரர்களுடன் மார்க் பேஸ்புக் மூலம் உரையாடினார்



வொஷிங்டன், ஜூன் 3
பேஸ்புக் நிறுவநர் மார்க் சுக்கர்பேர்க் முதன்முறையாக நேற்றுமுன்தினம் பேஸ்புக்கினூடாகச் சர்வதேச விண்வெளிவீரர்களுடன் காணொலி மூலம் உரையாடினார்.
ஐரோப்பிய விண்வெளி முகவர்களினூடாகத் தொடர்பாடல் சோதனை நடத்துவதற்கான அனுமதியுடன், 20 நிமிடக் கலந்துரையாடல் இடம்பெற்றது. பூச்சிய ஆர்முடுகல் உ… தளத்தில் தொடர்பாடல் … பாட்டுக்கான சோதனை… இது இடம்பெற்றது. ஏற்கன… 169 நாள்கள் விண்வெ… ஓடத்தில் பணிபுரியும் 3 … களுடன் இந்த கலந்து… யாடல் இடம்பெற்றது. குறி… காணொலிக்கலந்துரைய… பதிவு, பேஸ்புக்கில் பகிர… டுள்ளது.
(து-

## குஜராத் குல்பர்க் கலவரங்களில் ஈடுபட்ட 24 பேர் குற்றவாளிகள்



குஜராத்தில் 2002ஆம் ஆண்டு கலவரங்களின்போது, குல்பர்க் என்ற குடியிருப்புப் பகுதியில் நடந்த படுகொலைகள் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 24 பேரை குற்றவாளிகள் என்று விசாரணை செய்து நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.
குஜராத்தில் நடந்த இந்தக் கலவரங்களில் 1000க்கும் மேற்பட்ட பெரும்பாலும் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரங்கள் கோத்ரா என்ற இடத்தில் ரயில் பெட்டி ஒன்று தீவைக்கப்பட்டதில் இந்துப் பயணிகள் கொல்லப்பட்டதை அடுத்து இடம்பெற்றன. இந்தக் கோத்ரா சம்பவத் தில் சுமார் 60 இந்துக்கள் கொல்லப்பட்டனர்.
குல்பர்க் கொலைகள் குறித்து விசாரித்த சிறப்பு நீதிமன்றம் இதில் குற்றம் சாட்டப்பட்டிருந்த வேறு 36 பேரை விடுதலை செய்துவிட்டது.
இந்தச் சம்பவத்தில் ஒரு கும்பல் இந்த குடியிருப்புப்பகுதியைத் தாக்கி, வீடுகளை எரித்து, அங்கிருந்தவர்களை வெட்டிக் கொன்றது. மொத்தம் 69 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஷான் ஜாப்ரியும் அடங்குவார்.
அவரது வீட்டில் தஞ்சம் புகுந்திருந்த பல முஸ்லீம் பொதுமக்களும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டவர்களில் … ஹிந்து பரிசத்தின் தலைவர் ஒருவரும் அடங்குவார்.
இந்த வழக்கில் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனை திங்கட்கிழமை வழங்கப்படும்.
தற்போது இந்தியாவின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அப்போது குஜராத் முதல்வராக இருந்தார். அவர் இந்தக் கலவரங்களை அடக்கத்தவறிவிட்டார் என்று அவர் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. (து)



…யகிறது.
…ம் பெருக்
… (து-ரி4)

## அழிவின் விளிம்பில் தன்சானிய யானைக…

தற்போதைய அளவில் யானைகளை வேட்டையாடுவது தொ… தால், அடுத்த ஆறு ஆண்டுகளில் மீதமிருக்கும் யானைகளை… தன்சானியாவின் வேட்டையாடும் பாதுகாக்கப்பட்ட வனப்… இழந்துவிடும் என்று தெரியவந்துள்ளது.
செலூஸ் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் 40 ஆண்டுகளு… முன்பு ஒரு லட்சம் யானைகள் இருந்தன. இப்போது, அது… சதவீத யானைகளின் எண்ணிக்கையை இழந்துள்ளது எ… உலக வனவிலங்கு நிதியத்தின் அறிக்கை கூறுகிறது.
சீனாவில் யானைத் தந்தத்துக்கு இருக்கும் தேவைதான் … யானை வேட்டை. இவ்வளவு பெரிய அளவில் நடப்பதற்குத் தூ… கோலாக அமைகிறது என்று அந்த அறிக்கை குற்றம் சாட்டு… சட்டத்துக்குப் புறம்பான யானைத் தந்த வியாபாரம் தொடர அ… திக்கும் ஊழலை தாம் தடுத்து நிறத்தவுள்ளதாக போவதாக… சானியாவின் புதிய ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
# பிறந்த எண்ணின் பலன்கள் 3

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான பிறந்த எண் 3 க்கான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

**திருமண வாழ்க்கை**
இவர்கள் 3, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களைத் திருமணம் செய்து (பிறந்த எண் அல்லது விதி எண்) கொண்டால், வாழ்க்கைப் பயணம் இனிமையாக இருக்கும். 2 எண் காரர்களையும் மணந்து கொள்ளலாம். இவர்களை அனுசரித்துப் போவார்கள்.

**இவர்ளைத் தாக்கும் நோய்கள்**
இவர்களுக்குத் தோல் வியாதிகள் தான் முதல் எதிரி. பெரும்பாலானோருக்குவயிற்றுவலியும், மலச்சிக்கலும், வாய்வுக் கோளாறுகளும் இருக்கும். வாய்ப்புண், குடல் சம்பந்தமான நோய்களும் ஏற்படும். மூச்சுப் பிடிப்பு, சொறி சிரங்கு போன்றவைகளாலும் அடிக்கடி தொந்தரவுகள் உண்டு. நெல்லிக்கனியும், எலுமிச்சை மற்றும் கீரை வகைகளையும் அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை உடலுக்கு உறுதியையும் நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கும்.

**இவர்களுக்கான தொழில்கள்**
இவர்களுக்கு ஆசிரியர், சோதிடர்கள் போன்ற அறிவைத் தூண்டும் தொழில்கள் சிறப்புத் தரும். நல்ல அரசு உத்தியோகங்கள் கிடைக்கும் யோகம் உண்டு. தர்ம ஸ்தாபனங்களில் உத்தியோகம் கிடைக்கும். பேச்சாளர்களாகவும் சிறந்த நுண்ணிய சாத்திர ஆராய்ச்சியாளர்களாகவும், ஆலோசனையாளர்கள் போன்ற துறைகளிலும் பிரகாசிப்பார்கள். சிலர் புத்தக விற்பனையாளர்களாகவும், பாடசாலைகள் நடத்துபவர்களாவும் இருப்பார்கள். அரசியல் ஈடுபாடும் ஏற்படும். நன்கு பிரகாசிப்பார்கள். எழுத்தாளர்கள், பேப்பர் கடைகள், அச்சுத் தொழில் ஆகியவையும் இவர்களுக்கு நன்கு அமையும். கல்லூரிப் பேராசிரியர்கள், தத்துவப் பேராசிரியர்கள், மேலாளர்கள் போன்ற தொழில்களும் சிறப்புத் தரும். இராணுப்படையிலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

**எண் 3 சிறப்புப் பலன்கள்**
இந்த எண் தேவர்களுக்குக் குருவான பிரஹஸ்பதியினுடையது. எல்லோருக்கும் நல்ல ஆலோசனைகள் சொல்வதும், நல்ல வழிகாட்டுவதும் இவர்கள் தான். "குரு பார்க்க கோடி நன்மை" என்கிறது சோதிடம். இந்த 3ஆம் எண்காரர்களால் உலகத்தில் உள்ள மற்ற அனைவருக்கும் நன்மைகளே ஏற்படும். இவர்களிடம் மற்ற அனைவரையும் விடத் தாங்கள் தான் அறிவிலும், அதிகாரத்திலும் உயர்ந்து விளங்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்கேற்ற உழைப்பும் உண்டு. பிறரைக் கட்டுப்படுத்தி, தனது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும் என்கிற தீவிர எண்ணங்களும் உண்டு.
எந்த ஒரு செயலிலும் கட்டுப்பாடும், ஒழுங்கும் இருக்க வேண்டும் என்பார்கள். தங்களுடைய மேலதிகாரிகள், முதலாளிகள் போன்றவர்களுக்கு மிகவும் விசுவாசமாகவும், உண்மையாகவும் நடப்பார்கள். மனச்சாட்சி பார்த்துச் செயல்படுவார்கள். எனவே, வியாபாரத்திலும் அல்லது உத்தியோகத்திலும் வெகுவிரைவில் முன்னேறி விடுவார்கள்.
இவர்களது கண்டிப்பான நடத்தையின் மூலம் சில எதிரிகளும் ஏற்பட்டு விடுவார்கள். கர்வம் ஓரளவு வந்து விடும். அடுத்தவரைப் புகழ்ந்து பேசத் தயங்குவார்கள்.
சுதந்திர எண்ணங்களும், அடுத்தவர்களை விட மேலே இருக்க வேண்டும் என்று தீவிர எண்ணமும் ஏற்படும். உலகம் பாராட்டும் ஆன்மீகத் தலைவராகவோ, ராஜதந்திரியாகவோ, தங்களை வருத்திக்கொண்டு தியாகங்கள் புரியும் தேசியத் தலைவர்களாகவே விளங்குவார்கள் இவர்களே.
சுவாமி விவேகானந்தர், இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக இருந்த பாபு இராஜேந்திர பிரசாத் போன்ற மகான்கள் எல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்களே. நாணயம், பண்புடைமை, ஒழுக்கம் போன்ற நற்குணங்கள் நிறைந்தவர்கள். கடுமையான உழைப்பாளிகள். 3இன் பலம் குறைந்தால், இவர்களது உழைப்பை எளிதான மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் நல்ல பெயர் பெறுவார்கள். பல அன்பர்கள் ஆசிரியர்களாகவும் கல்லூரிப் பேராசிரியர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் மதப்பற்றும், தங்களது பண்பாடு, கலாசாரம் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடும், நம்பிக்கையும் உடையவர்கள்.
புதிய நாகரிக முன்னேற்றங்களைக் குறை கூறுவார்கள். பிறருடைய நிர்ப்பந்தங்களுக்காக எந்த ஒரு ஒவ்வாத செயலையும் செய்யமாட்டார்கள். இதனாலேயே பழைமைவாதிகள் என்று முத்திரை குத்தப்படுவார்கள்.

(தொடரும்)

# சேவையால் உயர்ந்த உத்தமன்
# வேலுப்பிள்ளை பாலசுந்தரம்

ஆசை .தியாகராஜா

**1954** ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரியில் நான் பிறெப் சீனியர் (PREP & SSC) வகுப்பில் கற்றுவருகையில் புதிதாக இரசாயனவியல் (CHEMISTRY) ஆசிரியராக வந்து இணைந்தவர்தான் அண்மையில் காலமாகிய வேலுப்பிள்ளை பாலசுந்தரம்.
தூய வெள்ளை உடையணிந்து கம்பீரமான தோற்றத்தில் இரசாயனவியல் பாடத்தை அவர் கச்சிதமாகக் கற்பித்தார். புன்னகை பூத்த முகத்தை உடைய அந்த ஆசான் மிகவும் கண்டிப்பானவர். தேவை ஏற்படின் பிரம்பையும் பாவிக்க தவறமாட்டார். சுத்த சைவ போசன உணவை உட்கொண்டவர்.
ஆசாரமாக தயார் பண்ணப்பட்ட மதியபோசன பொதியுடன் நான்கு ஐந்து பேருக்கு அளவான தயிரும் கொண்டு வருவார். இதனால் மதிய போசன வேளையில் அவரது மேசையில் அமர சக ஆசிரியர்கள் போட்டி போடுவதுண்டு.
புதிய றலி துவிச்சக்கர வண்டியில் கோண்டாவிலில் இருந்து நாள் நிமிடம் பிசகாது பாடசாலைக்கு வருவார். ஆங்கிலப் புலமையில் வித்தகரான இவர், தனது இரசாயன பாடத்துடன் பரீட்சைகளில் சுருக்கமும் பொருள் விளைவும் உள்ள விடைகளை தூய ஆங்கிலத்தில் முன்வைக்கும் கலையையும் புகட்டினார். அத்துடன் சன்மார்க்க நெறிகளையும் இடையிடையே நகைச்சுவையாக எடுத்து இயம்புவார்.
கந்தகம் தொடர்பான விவரங்களை கற்பிக்கும் வேளையில் ஒரு கட்டத்தில் கந்தகத்தை சிறிதளவில் கிரமமாக உண்டுவந்தால் காலப்போக்கில் மேனி வண்ணம் (COMPLEXION) கவர்ச்சிகரமாக மாறும் எனக்கூறினார்! இதனைக் கேட்ட மிடுக்கான

**அர்ப்பணிப்பான சேவையால் உயர்ந்து யாழ்.மத்திய கல்லூரியின் அதிபராகிப் பல காலம் பணியாற்றினார். அவருடைய வழிகாட்டலில் கல்லூரி பல துறைகளிலும் மிளிர்ந்தது.**

மாணவன் ஒருவன் எழுந்து சேர் நீங்கள் ஏன் இதனை இன்னும் பரீட்சிக்கவில்லை என்று வினவினார். எனது மேனி வண்ணத்தையிட்டு நான் பூரண திருப்தி கொண்டுள்ளதால் அந்த முயற்சியில் நான் ஈடுபடவில்லை என அவரும் பதிலளித்தார்.
1955ஆம் ஆண்டில் அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு ஆயத்தங்கள் நடைபெறுகையில், மதிய உணவு இடைவேளையில் ஒரு நாள் அழைப்பிதழ்களை நிரப்பி அஞ்சலில் சேர்க்கும் பணியில் மாணவர்களாகிய நாமும் ஈடுபட்டோம்.
இதனைத்தொடர்ந்து துவிச்சக்கர வண்டியில் வகிபாகத்தை அழகிய கார் ஒன்று பெற்றுக்கொண்டது. அதனை தானே செலுத்திவந்து வேப்பமர நிழலில் நிறுத்தி விசேட கவசம் ஒன்றினால் மூடிவிட்டு வகுப்புக்கு வருவார். சகல செயற்பாடுகளிலும் தனக்கே உரித்தான பாங்குகளைக் கொண்டிருந்த எமது ஆசான், மறைமுகமாக மாணவர்களுக்கு செயல்விளைவான அறிவை ஊட்டினார் என்று கூறினால் அது மிகையாகாது.
அர்ப்பணிப்பான சேவையால் உயர்ந்து யாழ்.மத்திய கல்லூரியின் அதிபராகி பல காலம் பணியாற்றினார். அவருடைய வழிகாட்டலில் கல்லூரி பல துறைகளிலும் மிளிர்ந்தது.
இந்த நல்லாசானின் ஆத்மசாந்தி வேண்டி ஈசனை பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடலிகள் வானுயரும்

கே.எஸ்.சிவஞானராஜா

உலக வரலாற்றில், யாழ்ப்பாணம் என்ற சொல் அடிக்கடி பேசப்பட்டும், எழுதப்பட்டும், வாழ்த்தப்பட்டும் வருகிறது. காரணம் யாழ்ப்பாணத்தவர்கள் பனைவளத்தோடு கூடிய பண வளமும், பண் வளமும் (முத்தமிழ்), எண் வளமும், எழில் வளமும் நிரம்பப்பெற்ற மூளையுடையவர்கள்! முதலுடையவர்கள்! முழுமுதற் கடவுளோடு ஒன்றித்து வாழ்பவர்கள்! அவரவர் மதத்துக்கு அவரவர் தெய்வங்களே முதன்மையானதாகப் போற்றி வழிபடும் பேறுடையவர்கள். மற்றும் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வல்ல தூரநோக்குடையவர்கள். மேலும், ஜோதிட பரிபாலன நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டவர்கள். அவரவர் பாட்டை அவரவரே கவனிக்கவல்ல பேரவா உடையவர்கள். எக்கச்சக்கமான சொத்துக்களைச் சேர்க்கவல்ல உடல், உள, உறவு, வலிமை மிக்கவர்கள்! அதேபோல வீடோ, காணியோ, வேலை வாய்ப்போ, உறவுகளோ இல்லாதவர்களும் இந்த மண்ணின் புண்ணியத்தால் காயாமல், நனையாமல் வாழ்கிறார்கள். எது எப்படியோ இந்த மண்ணில் வாழ்பவர்கள் அனைவரையும் இந்த மண் வானுயர வாழ வைக்கும்! வடலிகள் எவ்வாறு வானுயர்ந்து பனையாகச் செல்வத்தை அள்ளித்தருகிறதோ, அதேபோலப் பிள்ளைகளும் பயபக்தியோடு வீட்டுக்கும், நாட்டுக்கும், ஏட்டுக்கும் வாழ்வார்களாக இருந்தால், வானுயரப் புகழோடு செல்வத்தையும் அள்ளித் தருவார்கள். வடலிபோல இளமையும், வாள் கருக்குப் போலக் கூர்மையும், நிமிர்ந்த நேர்கொண்ட உடல்வாகும், பல்கிப்பெருகும் பசுமைதரு சிந்தனைகளும், பாலிக்கும் பாளையாம் கருணையும், நிலையற்ற வாழ்வைச் சொல்லும் காவோலையும், நீடித்த பேறளிக்கும் நுங்கும், மானுட வாழ்வுக்கு வேண்டிய படிப்பினைகளாகும். இந்த வடலிகளின் வாழ்க்கையையே ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாண மக்கள் நீடித்த ஆயுளைப் பெற்றனர். குறிப்பாகத் தீவக மக்கள் பனைகளையும், வடலிகளையும் தெய்வங்களாகப் போற்றி தத்தம் வாழ்க்கையைப் பேறாக்கினர்.



இதனாலன்றோ, பனைகளைப் போற்றிய அனைவருமே உலகத்தில் ஏதோவொரு வகையில் கொடி கட்டிப் பறக்கிறார்கள். எந்தவிதக் குறைபாடும் இன்றி நீடித்து வாழ்கிறார்கள். கற்பக விருட்சமாய் கடவுளாக நின்று வாழ்வித்து, கருமை நிற மேனியோடு காதல் செய்யுமாறு பருவமடையும் வடலிகள் நிச்சயம் வானுயரும். காதலும், வீரமும் சங்க காலத்தில் வாழ்வுக்கு வளம் சேர்த்ததுபோல, ஈதலும், செல்வமும் எந்தக் காலத்திலும் கைகொடுக்கவே இந்த மண்ணில் நல்ல வண்ணம் வடலிகள் வானுயர்ந்து தேனான பழங்களைக் குலைகுலையாகத் தருகின்றன. அவை தித்திக்கின்றன.

### உறுதி

வடலிகள்போல இளமையில் உறுதி கொண்ட பயிர்களோ, மரங்களோ எதுவுமில்லை எனலாம். வடலிகள் தன்னை எவராவது தீண்டினால் சும்மா விட்டுவைப்பதில்லை. தன் மேனியெங்கும் விரவி நிற்கும் கருக்கு மட்டைகளால் நல்ல பாடம் புகட்டியே தீரும். தன்னைப் பாதுகாப்பதிலும் தன்னினத்தை வளர்ப்பதிலும் வடலிகள் மிகவும் உறுதியாகவே உள்ளன. தற்போதைய சந்ததியின் உன்னதமான ஓர் இலட்சிய, இலக்கிய பயணத்துக்கு உறுதியளித்தவை (பனை) வடலிகளே! எப்படி என்றால், வடலிகளும், பனைகளும் நம் வாழ்வை உறுதியாகவும், நேர்மையாகவும், பக்கச் சார்பின்றியும் ஒரே குறிக்கோளுடனும், எதிர்பார்ப்பின்றியும் தமக்கு எந்தவிதமான நன்மையுமின்றி அர்ப்பணிப்பதனால் அது சாத்தியமாயிற்று. இன்னும் சொல்வதானால், பனையும் வடலிகளும் வளரும் பிரதேசங்களில் வாழும் மனிதர்கள் இந்த மண்ணையோ அல்லது உலகையோ ஒரு காலத்தில் ஆளுவார்கள் என்பது திண்ணமே. இருந்தபோதிலும், 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர், இலங்கையின் வடபகுதியில் ஏறக்குறைய முப்பது லட்சம் பனைகளும், இருபது லட்சம் வடலிகளும் இருந்ததென ஒரு கணக்கெடுப்புப் பகர்கிறது. தற்பொழுது (எல்லாமாக) இருபத்தைந்து லட்சமே உள்ளதாக அறிய முடிகிறது. இவை இன்னும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிற தாற்பரியத்தை இந்த மண் இன்னுமே உணரவில்லை என்ற செய்தி ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

எது எப்படியோ வடலிகளாகத் தற்போது வளர்ந்துவரும் பத்து லட்சம் மரங்கள்தான் அடுத்த சந்ததியைக் காப்பாற்றப் போகின்றன. மேலும், ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவு தோறும் ஒவ்வொரு லட்சம் பனம் விதைகளை நடுமாறு பணித்துச் செயற்படுத்துவதன் மூலமாக வடபகுதியை ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும். ஒரு வருடத்தில் எழு பதினாயிரம் பனைகள் அறிந்தோ, அறியாமலோ தறிக்கப்படுவதாக உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பனம் விதை மூலம் வடலிகளை உண்டு பண்ணுவதன் மூலம் நன்மையும், சௌகரியமும் கிடைக்கச் செய்வீர்களா?

### வாலிபம்

வாலிப வயதையுடைய இருபாலாருக்கும் வடலி ஒரு வரப்பிரசாதமாகும். காரணம் வடலிகள் போல வாலிபர்களும் வானுயர வாழ்வாங்கு வாழ முடியும். நேர்வழி பயணிக்கவும், பயன்பெறவும் முடியும். வடலிகள் எப்பொழுதும் அழகானவையாகவே வளரக்கூடியவை. எவருமே அவற்றுடன் விளையாடவோ, கையாளவோ, நெருங்கவோ முடியாது. தாமாகவே தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். இதுதானே வாலிபப் பருவத்தினருக்கு வேண்டப்படும் அழகாகும். குறிக்கோளும் தன்னம்பிக்கையும் வடலிகளுக்கு இருப்பதனாலேதான் வடலிகள் வானுயர்வதுபோல வாலிபமும் வானுயர வென்றிட முடியும். தற்காலத்தில் வாலிபம் பால் சார்ந்த தேவைப் பொருளாக மலினப்படுத்தப்படுவதால் வடலிகள் மனிதனிடமிருந்து ஒதுங்கியிருக்கின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது. இளமையும், வடலியும் ஓரிடத்தில் நிற்பதில்லை.

### பேறு

கற்பகமாய், அட்சய பாத்திரமாய், தன்னையே ஒப்புவிக்கும் பனைச் செல்வத்தைப்போல இந்தப் புவியில் வேறெந்தத் தருவும் அமைந்ததில்லை.

*வீட்டுக்கு நல்லவளை*
*வாழ்வுக்கு நல்ல வளை*

என்பதிலிருந்து, பெண்ணும், பனையும் பேறாக்கப்படுன்றன. பனை வடலிகள் தரும் உயர்வை இப்பொழுது பார்க்கலாம் மனிதா! (நீ) சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, விவேகானந்தர் போலச் சமூகம் பயனுற வாழ வழிகாட்டியாய்த் திகழுவாய். நேர்வழி செல்வாய். உயர்ந்து பயன் தருவாய். உன்னை நீயே அறிவாய். பேதங்களைப் பார்க்க மாட்டாய். சோம்பலாய் இருக்க மாட்டாய். சுறுசுறுப்பாக இருப்பாய். முயற்சியுடையவனாய்த் திகழ்வாய். உன்னை நீ நம்புவாய். நம்பிக்கை உனது சொத்தாகும். எந்தத் தோல்வி வந்தாலும் துவண்டிடமாட்டாய். நோய் எதிர்ப்புச் சக்தி உன்னை ஆரோக்கியமாய் நீடூழி காலம் வாழ வைக்கும். உனது தோற்றத்தைப் பார்த்து வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல அழகான மனைவி கிடைப்பாள். ஆம்! சிரஞ்சீவியாய் வாழ்வாய்!!

### எப்படி

பனம் பொருள்களான நுங்கு, பனம் பழம், புளுக்கொடியல், ஒடியல், பதநீர், பனங்கட்டி, பனைவெல்லம், ஒடியல்கூழ், பனையோலை, பனை மரங்கள் யாவுமே உன் வீட்டில் குடியிருந்து பயன்படுமாயின் நீயும் ஒரு மெஞ்ஞானியாய் மிளிர்ந்து வடலியென வானுயர்வாய்! இல்லறம் சிறக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



சி.தனுஸ்ரன்,
தரம் – 4
சென்.பெனடிக்ற் வித்தியாலயம்.

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலரும் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சித மான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமை களில் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.

# சிலையாக மாறிய பாறாங்கல்



அற்புதமான சிற்பி ஒருவர், ஒருநாள் தெருவில் போய் கொண்டிருந்த போது ஒரு கடையருகே கனத்த பாறாங்கல் ஒன்றைப் பார்த்தார்.

ஏதோ பெரிய புதையலைப் பார்த்த மகிழ்ச்சி, அதன் பின் அந்தக் கடைக்காரரிடம், 'ஐயா, இந்தப் பாறாங்கல் தங் களுக்குத் தேவையா? அல்லது இதை நான் எடுத்துச் செல்லலாமா?' என்று கேட்டார்.

'தாராளமாய் எடுத்துச் செல்லுங்கள். இது இந்த இடத்தில் பெரிய இடையூறாய்க் கிடக்கிறது. போவோர் வருவோரெல் லாம் இடறி விழுகின்றனர் என்றார் – கடைக்காரர்.

பாறாங்கல்லை உருட்டிச் சென்ற அந்த சிற்பி, அதை நுட்பமாகச் செதுக்கி அற்புதமான கடவுள் சிலை ஒன்றை உருவாக்கினார். அந்தச் சிலை கடைத்தெருவில் விலைக்கு வந்தது. போட்டி போட்டுக் கொண்டு மக்கள் அதை விலைக்குக் கேட்டார்கள். அப்படிக் கேட்டவர்களுள் கல்லைக் கொடுத்த கடைக்காரரும் ஒருவர்.

முடிவில் அந்தக் கடைக்காரரே அதிக விலை கொடுத்து அந்தச் சிலையை வாங்கிக் கொண்டார்.

அந்த சிற்பியை மறந்துவிட்ட அந்தக் கடைக்காரர், 'இந்த அற்புதமான சிலைக்குரிய கல்லை எந்த மலையிலிருந்து எடுத்து வந்தீர்கள்?' என்று கேட்டார்.

அதற்கு சிற்பி, 'வேறு எங்கிருந்தும் இல்லை. தங்கள் கடை வாசலில் தான் இதைக் கண்டெடுத்தேன். என்னை நினைவில்லையா தங்களுக்கு? ஆறு மாதங்களுக்கு முன் இடையூறாய்க் கிடக்கிறது என்று சொல்லி என்னிடம் நீங்கள் கொடுத்த கல் தான் இது என்றார் – சிற்பி. கடைக்காரர் வியந்தார்.

ஆம். தங்கள் பார்வையில் இது தடைக் கல்லாய்த் தெரிந்தது. என் பார்வையில் கடவுளை பொதித்து வைத்திருக்கும் சிற்பக் கல்லாய்த் தெரிந்தது. வேண்டாத பகுதியையெல்லாம் செதுக்கி எடுத்தேன். உள்ளே இருந்த கடவுளின் உருவம் வெளிப்பட்டது! – என்றார்.

தேவையற்ற வார்த்தைகளை வாழ்வில் நீக்கினால் நாமும் விலைமதிப்பற்ற மனிதனாய், ஒவொருவரும் நம்மைப் போற்றும் வகையில் வாழ்ந்து காண்பிக்கலாம்

# வரலாற்றில் இன்றைய தினம்

1889 - கண்டங்களுக்கு இடையேயான கனேடியன் பசுபிக் புகையிரதப் பாதை பூர்த்தி செய்யப்பட்டது.

1889 - முதலாவது நீண்ட தூரத்துக்கு மின் சக்தியைக் கொண்டு செல்லும் இணைப்பு அமெரிக்காவில் பூர்த்தி செய்யப்பட்டது. வல்லிமோற் நீர்வீழ்ச்சி மின் பிறப்பாக்கி நிலையத்திலிருந்து போர்ட்லாண்ட் ஓரிகன் வரை 14 மைல் (23 கி.மீ) தொலைவு கொண்டதாக இது அமைக்கப்பட்டது.

1916 - அமெரிக்க தேசியப் படையின் எண்ணிக்கையை 450, 000 ஆக அதிகரிக்கும் தேசிய பாதுகாப்பு சட்டம் ஒப்பமிடப்பட்டது.

1959 - பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஓர் அங்கமாக இருந்தபோதும், சிங்கப்பூர் தன்னை சுய ஆட்சி நாடாகப் பிரகடனம் செய்தது.

1962 - பாரிஸ் ஓர்லி விமானத் தளத்தில் ஏயர் பிரான்ஸ் 007 விமானம், மேல் எழுவதை தடுத்து நிறுத்த விமானத்தின் விமானி முயற்சித்த போது, விமான ஓடு பாதையைக் கடந்து விமானம் வெடித்து சிதறியதில் 130 பேர் சாவு.

1979 - மெக்ஸிக்கோ குடாவின் தென்பகுதியில் இக்ஸ்ரொக் 1 எண்ணெய்க் கிணற்றில் இருந்து எண்ணெய் வெளியேறி 3,000,000 பரல் எண்ணெய் நீரில் கலந்தது. அதுவரை பதியப்பட்ட மிக மோசமான எண்ணெய்க் கசிவில் இது இரண்டாவது ஆகும்.

1982 - ஐக்கிய ராச்சியத்துக்கான இஸ்ரேலிய தூதுவர் ஸ்லோமோ அர்கோவ் லண்டன் வீதியில் வைத்து சுடப்பட்டார். இவர் தப்பிப் பிழைத்த போதும், ஒரு பகுதியின் உடலியக்கம் நிரந்தரமாகச் செயலிழந்தது.

1992 - 1992ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற விமான விபத்தின்போது காய மடைந்த பாலஸ்தீனவிடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்துக்கு தலைப் பகுதி யில் சத்திர சிகிச்சை.

1992 - 2030 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை இரண்டு மடங்கு அதிகரிக்கும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவிப்பு.

1992 - அரசுக்கு எதிராக கொழும்பில் பத்திரிகையாளர்கள் கண்டனக் கூட்டம்

2003 - பிறரின் அழுத்தங்களுக்குப் பணிந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பதவியிலிருந்து விலகப் போவதில்லையென வி.ஆனச்தசங்கரி உறுதிபடத் தெரிவிப்பு.

2004 - ஊடகவியலாளர் நடேசனின் பூதவுடல் வதிரியில் தீயுடன் சங்கமம். இறுதி ஊர்வலத்தில் பெருமளவானோர் பங்கேற்றனர்.

2004 - புலிகள் - இராணுவம் மட்டக்களப்பில் சந்தித்து, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி யில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றிப் பேச்சு.

2004 - ஊடகவியலாளர் நடேசன் படுகாலைக்கு நீதிகோரி நாடாளுமன்றத்தின் முன்பாக மூவின ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்.

2004 - தீவக வலயத்தின் வருடாந்த தடகளப் போட்டிக்களுக்கான பரிசளிப்பு விழா 'உதயன்' நாளேட்டின் அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

2004 - நேபாளப் பிரதமராக ஷேர் பகதூர் தேவ்பா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2012 - இரண்டாம் எலிசபெத் மகாராணியாரின் வைரவிழா தேம்ஸ் நதியில் வைத்துக் கொண்டாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றட்டும் மைத்திரி

ஆயுதப் போர் இலங்கையில் நிறைவுக்கு வந்தபோதும் தமிழர்கள் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதில் போரின்போது இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் பெற்றுக்கொள்வது என்பது மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக இருந்து வருகின்றது. ஏனெனில், காணிகள் என்பது ஒரு தலைமுறையோடு முடிந்துவிடும் விடயமல்ல. பரம்பரை பரம்பரையாகத் தமிழரின் வாழ்வாதார உரிமையோடும், தாயக உரிமையோடும் தொடர்புபட்ட விடயமாக அது இருக்கின்றது.

போரை மிகவும் மிலேச்சத்தனமாக முடிவுக்குக் கொண்டுவந்த முன்னைய மகிந்த ராஜபக்ச அரசும், அதற்கு ஆதரவு வழங்கிய சிங்களக் கடும்போக்கு தேசிய சக்திகளும் போரின்போது கைப்பற்றப்பட்ட காணிகளை மீண்டும் உரிமையாளர்களிடம் வழங்குவதை போர் வெற்றியைத் தாரைவார்க்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே கருதிச் செயற்பட்டு, சிங்கள மக்கள் மத்தியில் தவறான கருத்தை வலுவாக ஊன்றியிருந்தன. ஆனால், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழர்களின் காணிகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற விடயத்தில் காண்பித்துவருகின்ற நிலைப்பாடு முற்றிலும்மாறுபட்டதாக இருந்துவருவதை அவர் தெரிவித்துவரும் ஆழம் பொருந்திய கருத்துகளும் அக்கறை மிக்க செயற்பாடுகளும் உணர்த்தி நிற்கின்றன.

ஜி-7 உச்சிமாநாட்டின் அங்கமாக நடைபெற்ற இணைமாநாட்டில் கலந்துகொள்வதற்காக கடந்த வாரத்தில் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, அங்கு வாழ்கின்ற புலம்பெயர் சிங்கள சமூகத்தினர் மத்தியில் உரையாற்றியபோது; தமிழர்களின் காணிகளைத் திருப்பிக்கொடுக்கவேண்டிய விடயத்தை மிகவும் ஆணித்தரமாக எடுத்துக்கூறியது மட்டுமன்றி, அங்கிருந்தவர்களைப் பார்த்து, நீங்கள் உங்களது சொந்தக் காணிகளிலன்றி முகாம்களில் வாழ்ந்தால் உங்களுடைய நிலை எப்படியிருக்கும்? எனக் கேள்வி எழுப்பி, தமிழர்கள் கடந்த 27 வருடகாலத்துக்கும் மேலாக முகாம்களில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுடைய நிலத்தை மீளக் கையளிக்கவேண்டும்- என வலியுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதி காணிகள் விடயத்தில் வெறுமனே வாய்ச்சொல் வீரரல்ல என்பதைப் பறைசாற்றுவதாக அண்மைய நகர்வுகள் அமைந்துள்ளன. கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய நத்தார் பண்டிகை வைபவத்தின்போது அடுத்து வரும் ஆறுமாத காலத்துக்குள் முகாம்களில் வாழ்ந்துவரும் மக் களின் காணிகளை இனம்காணும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு, மக்களை மீளக்குடியேற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும் என அவர் வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதியை காற்றில் விடாமல் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற முக்கிய சந்திப்பொன்றில் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மக்களின் காணிகளை இனம்காணும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படவேண்டும் எனவும், இந்த மாதத்துக்குள் அவர்களது காணிகள் தொடர்பாக அறிவிக்கப்படவேண்டும் எனவும் பணிப்புரை விடுத்துள்ளார்.

போரின்போது போர்த்தேவைகளுக்காகக் கைப்பற்றப்பட்ட காணிகளைப் போர் முடிந்ததும் விடுவிப்பது என்பது உலக நியதி. ஆனால், போர் நிறைவுக்கு வந்து ஏழு ஆண்டுகளான பின்னரும், அதைச் செய்வதற்கு இழுத்தடிப்பதானது, இந்த நாட்டில் மீண்டும் பிரச்சினை வெடிப்பதற்கான முக்கிய காரணிகளிலொன்றாக அமைந்துவிடும் என்பதையும் ஜனாதிபதி புரிந்து வைத்திருப்பது, அந்தக் காணிகள் உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றச்சாட்டுக்கள், ஐ.நா. தீர்மானத்துக்கு அமைவாக வெளிநாட்டு நீதிபதிகளை போர்க் குற்றங்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களில் உள்வாங்குதல் போன்ற விடயங்களில் ஜனாதிபதியின் கருத்துகள் தமிழர்களின் எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போவதாக இல்லை. ஆனாலும், காணிகளை மீண்டும் திருப்பிக்கொடுக்கும் விடயத்தில் காண்பிக்கும் அக்கறையும் உணர்வும் வரவேற்கத்தக்கவை. ஆயினும் ஜனாதிபதியின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தையே இராணுவம் கொண்டுள்ளமை அம்பலமாகியுள்ளது. ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதியால் காணிகள் விடுவிப்புத் தொடர்பில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் வலி.வடக்குப் பகுதியில் உள்ள மயிலிட்டிக் கிராமத்தை விடுவிப்பதற்கு இராணுவத் தளபதி அடியோடு மறுத்துவிட்டமை தொடர்பான தகவல்கள் கசிந்துள்ளன.

இந்த மறுப்பை அடுத்து, அதற்கான மாற்று வழிகள் பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி இராணுவத் தளபதியிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் கூறியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மயிலிட்டி தமிழ் மக்களின் மீன்பிடிப் பொருளாதார மையங்களில் ஒன்று. அதன் விடுவிப்புக்காக அந்தப்பகுதி மக்கள் பல வருடங்களாகக் காத்துக்கிடக்கின்றனர். அந்த மக்களின் எதிர்பார்ப்பைப் பொய்யாக்காமல் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி நிறைவேற்றவேண்டும். அதுவே நல்லாட்சியின் அதிஉன்னதமான அடையாளமாகும்.

# அர்த்தமுள்ள நாமங்களை சூட்டுவோம்



காரை எம்.பி.அருளானந்தம்

தெய்வீகத் திருநாமங்கள் சேர்ந்து வரும் பெயர்களை பிள்ளைகளுக்கு வைப்பதனால் இல்லற வாழ்வு நல்லறமாக அமைவதை காண்கிறோம். மிக மிகச் சாதாரண விடயம் தான் பெயர் சூட்டுதல் என்று தான் நாம் நினைத்து வருகிறோம். குழந்தையைக் கூப்பிட வேண்டும் அல்லவா? அதனால் பெயர் வைக்கிறோம் என்று கூறப்படும் விளக்கம் கேட்பதற்கு அர்த்தம் உள்ளதாக இருந்தாலும், அந்தப் பெயர் அர்த்தம் பதிந்ததாக இருப்பதை நாம் அறிந்திருக்க நியாயம் இல்லைத் தான்.

எங்கள் குழந்தைகளுக்கு பகவானின் நாமத்திலேயே ஏன் பெயர் சூட்டுகின்றோம்? என்று கேட்கலாம். வேதங்கள், திருமுறைகள் எல்லாமே சதா நன்மை பயக்கும் வழிகளைத் தான் எடுத்து உரைக்கின்றன. அதற்காகவே புராணங்களில் வரும் பாத்திரங்கள் நன்மை பயக்கும் வழிகளையே பின்பற்றுகிறார்கள். அல்லாது வேறுபட்ட வழிகளில் செல்பவர்கள் எப்படியெல்லாம் துன்பப்படுகிறார்கள் என்பதைக் காணலாம்.

நல்வழி புகட்டிடும் நல்லவர்களின் பெயரை அர்த்தத்துடன் சூட்டி மகிழ்ந்து வாழ்ந்தவர்கள் சைவத் தமிழ் மக்கள். அத்துடன் நில்லாது அந்த நல்லவர்களின் பெயரைக் கூறும் போதே அவர்கள் எவ்வாறு வாழ்ந்து காட்டினார்கள் என்ற வரலாறும் எமது நினைவுக்கு வந்து, அந்தக் கலாசாரத்தைப் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

உதாரணத்துக்கு இராமன் என்று பெயர் வைக்கின்றோம். உடனே இந்தக் குழந்தை இராமனைப்போல் நற்குணம் கொண்டவனாக இருக்க வேண்டும், தாய் தந்தையை மதித்து நடக்க வேண்டும். ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டும், நீதி வழுவாத அரசனைப்போல் நீதிமானாக இருக்க வேண்டும், என்ற நல்லெண்ணங்கள் தோன்றுகின்றன. அது மட்டுமல்ல இராமன் என்ற பெயர் தாத்தாவின் பெயராகவோ அல்லது கொள்ளுத் தாத்தாவின் பெயராகவோ இருக்கலாம்.

அதனால் தாத்தாவின் பெயரை வைக்கும் போது பாரம்பரியத்தின் மகிமையை நிலை நாட்டுகிறோம். நற்பழக்கங்களுடன், நல்ல வளமுடன் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் மூதாதையரின் பெயரை வைக்கின்றோம். ஓ! இன்னாரின் பேரனா? ஆகா... அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா? என்னவொரு பாரம்பரியம்? என்று புகழ்ந்து நீயும் அப்படியே நல்லவனாக, வல்லவனாக வாழவேண்டும்- என்று எதிர்பார்ப்புக்களைத் தெரிவிக்கின்றனர். வழிவழியே கலாசாரம் பெயரின் அடிப்படையில் வருகின்றது. ஏதோ பிறந்தோம், உண்டு உறங்கி வளர்ந்தோம் என்று உப்புச் சப்பில்லாத வாழ்க்கையை வாழ்ந்தவர்களின் பெயரை வைத்திடுவதை நாம் இயற்கையாகவே தவிர்ப்போம்.

ஆயகலைகள் அறுபத்து நான்கும், நான் மறைகளும் கற்றுக் கரைகண்டு சிவபக்தியில் ஈடு இணையற்றவனாக விளங்கிய இலங்கேஸ்வரன் கற்றதை செயற்படுத்தத் தவறி, காமத்தீயில் மூழ்கி- அறிவிழந்து மூர்க்கனாக இருந்ததால், அவனது கல்வியனைத்தும், மேதாவிலாசம் அனைத்தும் மழுங்கி மறைந்தன. அவன் ஒரு சாதாரண பெண்பித்தனாகக் கருதப்படுகிறான். இந்த ஒரு பலவீனம், ஒரு பெரும் சாம்ராஜ்யத்தையே அழித்துவிட்டது. பின் எதை எவ்வளவு கற்று என்ன பயன்? ஸ்திரிலோலனான் இலங்கேஸ்வரனுடைய நாமத்தை எந்தக் குழந்தைக்கும் சூட்டுவதில்லை. அது மட்டுமன்றி அசுரத்தனத்துக்கு இராவணனை உருவகப்படுத்துகிறார்களல்லவா?.

இதனால் நமக்குத் தெளிவு ஒன்று புலனாகிறது. பெயர் என்பது வெறும் சொல் அல்ல. அதன்பின்னால்மாபெரும்பொக்கிசமான எமது கலாசாரத்தை எடுத்துரைக்கும் பெரும் சக்தி அடங்கியிருக்கிறது என்பது புலனாகிறது.

அதனாலேயே புராண இதிகாசங்களில் வரும் நல்வழி புகட்டும் நல்லவர்களின் பெரை வைக்கிறோம். வம்சாவளியைப் போற்றிப் புகழ்ந்திடவே குழந்தைகளுக்கு முன்னோர்களின் பெயரையும், நன்மக்களாகக் கருதப்படும் புராண இதிகாச, உப நிடத பாத்திரப்படைப்புகளின் பெயர்களையும் வைத்தனர். பெயரில் என்ன இருக்கிறது? என்று கேட்டால், என்ன இல்லை அதில்? எல்லாமே அடங்கியிருக்கும். ஒரு முரசு பெயர்.

நதிகளின் பெயர், மரம், செடி கொடிகளி
பெயர்களை மனிதர்களுக்கு சூட்டு
கூடாது என்றும்- வேதங்கள் கூறுகின்ற
எவ்வளவோ புண்ணிய நதியாக இருந்தா
நதிமூலம்- ரிஷிமூலம் தெரிந்துகொள்
கூடிய விடயம் அல்ல என்று நிலைநாட்டப்
விட்டதால் கங்கை, ஜமுனை என்ற
பெயர்களை வைக்கக்கூடாது என்கிறார்
பெயர் எவ்வளவு முக்கியமானது. அதை
அர்த்தங்கள் நிறைந்தது. தமிழில
சிறப்புக்கள் சேர்த்து வைப்பதனால் அ
மகத்துவம் மேலானது. இவற்றையெல்
நாம் அறிந்துகொண்டால் எந்தக் கால
லும் எங்கள் குழந்தைகளுக்கு நிஜம
நிலைக்கக் கூடிய தத்துவார்த்த சிந்தனை
நிரம்பிய நாமங்களைச் சூட்டி மகிழ்வோ
அஜமிளன் என்ற ஈனக்குணம்கொண்ட
தன் தனது கடைசிக் காலத்தில் நாராய
என்ற பெயர்கொண்ட மகனைத் தினமும்
சொல்லிக் கூப்பிட்டதால் முத்திபெற்றான்
வரலாறு நல்ல பெயர் சூட்டுவதன் பார
யத்தை விளக்குகிறது. வள்ளுவர் பெரு
கூறியது போல் 'தோன்றிற் புகழோடு தே
றுக' என்று நாம் இந்த உலகில் பிறந்த
பொருளே நற்பெயர்பெறுவதற்காக
நினைத்து நாம் சூட்டிக்கொண்டிருக்கும்
கெடாமல் பாதுகாத்து; வையத்துள்
வாங்கு வாழ்ந்து உயர்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

திருமதி: வித்யா

**மேடம்:** உறவினருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

**இடபம்:** உங்களின் நற்செயல்களை சிலர் குறை கூறுவர். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**மிதுனம்:** விடாமுயற்சி வெற்றிக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில், விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். ஆன்மிக சுற்றுலா செல்லத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.

**கடகம்:** திறமையை வெளிப்படுத்தி பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய மாற்றங்களை உருவாக்குவீர்கள். தாராள வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**சிங்கம்:** நண்பர்களிடம் அதிருப்தி வராத வகையில் பழகவும். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் நல்லது. வாகனத்துக்கு பராமரிப்புச் செலவு உண்டாகும்.

**கன்னி:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். நேரம் தவறாமையை பின்பற்றுவது அவசியம். தொழிலில், மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** நம்பிக்கை இழந்த விடயம்கூட நடந்தேறும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப்பணி சிறக்கும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். புதிய சொத்து வாங்க அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** கடந்த கால இனிய நினைவுகளில் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், மேலதிக வளர்ச்சி உண்டாகும். பணவரவு அதிகரிக்கும். இயன்ற வகையில் அறப்பணி செய்வீர்கள்.

**தனுசு:** பொது இடங்களில், நிதானித்துப் பேசுவது நல்லது. தொழிலில் உள்ள இடையூறைத் தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**மகரம்:** பகைவரிடம் இருந்து விலகுவதால், சிரமம் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் மிதமாக இருக்கும். புளிப்பு, காரம் நிறைந்த உணவுகளைத் தவிர்க்கவும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள்.

**மீனம்:** சிலர் உங்களை ஏளனமாகப் பேசலாம். தொழில், வியாபாரத்தில், பொறுப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த அளவு வருமானம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.



**நீதிபதி:** ஏன் உங்க மனைவியை விவாகரத்து செய்யணும் என்று நினைக்கிறீங்க?

**கணவன்:** 6 மாசமா அவ என்கிட்டே பேசுறதே இல்லை.

**நீதிபதி:** நல்லா யோசிச்சுப் பாருங்க! இப்படியெல்லாம் ஒரு வாய்ப்பு மறுபடியும் கிடைக்கிறது கஷ்டம் தான்.

WhatsApp படித்ததில் பிடித்தது

எப்படியோ பொய்யான வாக்குறுதிகளை அள்ளிவீசியாச்சு...!!!
இனிமே நாங்க தான் இன்னும் ஐம்பது வருசத்துக்கும்...!!!



2ஜி ஊழல்; கிரனைட் ஊழல்...!!!?
110000 கோடி லபக்...??
இன்னுமா..?? உலகம் உங்களை நம்புது..??

அவன் :
நாம போகும்போது
பூனை குறுக்க போச்சுன்னா
என்ன அர்த்தம்..?
இவன் :
அதுவும்
எங்கேயோ
போகுதுஎன்று
அர்த்தம்...





# மீண்டும் இணையும் பழைய நடிகர்கள்

சென்னை, சாய் ஷிவானி வழங்க, வாராஹி சலன சித்திரம் மற்றும் சாய் கோரப்பட்டி புரடெக்ஷன்ஸ் சார்பில் ரஜினி கோரப்பட்டி மலையாளம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கும் படம், "நமது". தெலுங்கில் "மனமன்தா" என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. மோகன்லால், கௌதமி ஒரு ஜோடி. விஸ்வநாத், ஹனிஷா ஆம்ரோஷ் இன்னொரு ஜோடி. மற்றும் நாசர், ஊர்வசி, சந்திரமோகன், கொல்லப்புடி மாருதி ராவ் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## சிதறல்கள் @muju333333

உனது அன்பை
எழுதிக் கொண்டே
இருக்கிறேன்.
வார்த்தைகளும்
தீரவில்லை எனது வாழ்க்கை தான்
தீரும் போல வெறுமை கொண்ட
நெஞ்சில் விருட்சமாக வளர்கிறதே
காதல்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| | | | | | | 5 | 9 | 1 |
| | 6 | 2 | 8 | | 9 | | | |
| | | | | | 6 | | | |
| | | 8 | | 2 | | | | |
| | 5 | | | 1 | | | 3 | |
| | 9 | | 6 | 8 | | | | |
| | | 4 | | | | 3 | | |
| 2 | 3 | | 9 | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 4 | 3 | 7 | 6 | 2 | 1 | 5 |
| 6 | 2 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 |
| 1 | 7 | 3 | 8 | 5 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 4 | 6 | 7 | 1 | 8 | 5 | 3 | 9 |
| 9 | 5 | 8 | 4 | 2 | 3 | 7 | 6 | 1 |
| 7 | 3 | 1 | 9 | 6 | 5 | 4 | 8 | 2 |
| 5 | 1 | 2 | 6 | 9 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 6 | 9 | 2 | 8 | 4 | 1 | 5 | 7 |
| 4 | 8 | 7 | 5 | 3 | 1 | 9 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேசரி

## தேவையானவை

ரவை 250 கிராம்
நெய் 100 கிராம்
முந்திரிப்பருப்பு 25 கிராம்
சீனி 150 கிராம்
உலர் திராட்சை 25 கிராம்
ஏலக்காய் 10 கிராம்
கேசரிப்பவுடர்
அரைத்தேக்கரண்டி

## செய்முறை

வாயகன்ற பாத்திரத்தில் சிறிது நெய் விட்டு அடுப்பில் வைக்க வேண்டும். நெய் காய்ந்ததும் முந்திரி, உலர் திராட்சையைப் போட்டு ஒரு புரட்டுப் புரட்டி அரை லிற்றர் தண்ணீர் விட வேண்டும்.

தண்ணீர் கொதிக்கும்போது ரவையைப் போட்டு வேகவிட வேண்டும். அடிப்பிடிக்கா வண்ணம் அவ்வப்போது கிளறி விட்டுக் கொள்ள வேண்டும்.

தண்ணீர் பொங்கிவர ரவையைப் போட்டு சீனியைக் கொட்டி கிளற வேண்டும். சீனியும், ரவையும் சேர்த்து இளகியதும் நெய் சிறிது விட்டு கிளற வேண்டும்.

கேசரி தளரும் போதெல்லாம் நெய்விட்டுக்கிளறிக்கொண்டே வர வேண்டும். கடைசியில் கேசரிப் பவுடருடன் ஏலக்காயைத் தட்டிப் போட்டுக் பாத்திரத்தில் ஒட்டாவண்ணம் கிளற வேண்டும்.

### நாளை

வைகாசி-22
சனிக்கிழமை - 04.06.2016
திதி: சதுர்த்தசி மு.ப.11.26 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
பி.ப.03.05 வரை
ராகுகாலம்: 08.52-10.22 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
அமாவாசை விரதம்

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 100 | 120 | 100 | – | 40 | 70 |
| கத்தரி | 400 | 100 | 350 | 280 | 200–240 | 200 | 100 | 200 |
| கரட் | 200 | 160 | 200–300 | 200 | 200–240 | 250 | 100 | 200 |
| மரவள்ளி | 70 | 60 | 60 | 50 | 60 | 80 | 40 | 45 |
| பயிற்றை | 300 | 240 | 300 | 280 | 140–160 | 240 | 150 | 240 |
| பாகல் | 250 | 240 | 250 | 300 | 180 | 120 | 120 | 140 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 120 | 160 | 100 | – | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80–100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 160 | 160 | 140–160 | 200 | 100 | 130 |
| பூசணி | 40 | 50 | 60 | 70 | 80 | 60 | 15 | 40 |
| தக்காளி | 200 | 170 | 280 | 180 | 200 | 240 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 40 | 80 | 35 | 40 |
| கீரை | 40 | 50 | 40 | 30 | 40 | 40 | 25 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 | – | 20 | 12 |
| பச்சை மிளகாய் | 600 | 450 | 400–600 | 400 | 400 | 600 | 400 | 400 |
| புடோல் | 120 | 80 | 100 | 120 | 100–120 | 120 | 30 | 100 |
| கோவா | 180 | 160 | 180 | 160 | 140–160 | 240 | 90 | 140 |
| வெண்டி | 150 | 120 | 140 | 140 | 140 | 160 | 50 | 80 |
| போஞ்சி | 300 | 280 | 400 | 240 | 200–220 | 300 | – | 200 |
| லீக்ஸ் | 250 | 100 | 200 | 110 | 200–220 | 240 | 100 | 190 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30–40 | 30–40 | 40 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 110–120 | 100 | 75 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 240 | 200–240 | 200 | 350 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15–20 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 | 280 | 300–320 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 170 | 180 | 160 | 180–200 | – | 110 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 130 | 160 | 200 | 200–240 | 200 | 150 | 160 |




### கிறிஸ்ரல் ஆபரணம்

கிறிஸ்ரல் மெற்றல் ஆபரணங்கள் அறிமுகமாகியுள்ளன. உயர் ரக கிறிஸ்ரல் வேலைப்பாட்டுடன், உலோக வேலைப்பாடும் சேர்த்து இவை உருவாக்கப்பட்டுள்ளன. இவை 700 ரூபாவில் இருந்து 850 ரூபா வரை விற்பனை செய்யப் படுகின்றன.

## இதைத் தெரிந்து கொள்ளுங்கள்

1. வீட்டில் பொழுதுபோக்குக்காக ஒதுக்கப்படும் நேரங்களில் இசையை ஈடுபாட்டுடன் கேட்கலாம். மனது இலகுவாகும்.
2. தொலைக்காட்சி பார்க்கும்போது அருகில் இருப்பவர்கள் திடீரென உங்கள் மீது விழுந்தாலோ, அருகில் உள்ள மேசையிலிருந்து எவராவது இருமினாலோ உங்களுக்கு எரிச்சல் வரும் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலிலே நீங்களாகவே அந்த மாதிரியான தொந்தரவுக்கு இடம் கொடுக்காமல் தள்ளி உட்கார்ந்து விடுங்கள்.
3. வீட்டில் பொருள்கள் ஆங்காங்கே ஒழுங்கு இல்லாமல் சிதறிக் கிடந்தால் எரிச்சல் ஏற்படும். இப்படிச் சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒழுங்கு படுத்தலாம். மேலும், ஆங்காங்கே கிடக்கும் குப்பைகளை எடுத்து குப்பைத் தொட்டியில் சேகரிக்கும் நல்ல பழக்கத்தையும் கற்றுக் கொள்ளலாம்.
4. குடி தண்ணீரைக் கொதிக்க வைக்கும் போது அதில் சீரகம் கலந்திடுங்கள். கொதிக்க வைத்து ஆறிய பின் அதை குடி தண்ணீராக அருந்துங்கள். தினமும் 3 லீற்றர் தண்ணீர் அருந்தினால் வெப்பத்தால் உண்டான உடற் சூடு குறையும். சீரகத் தண்ணீர் உடல் ஆரோக்கியத்தையும் சீராக வைத்திருக்க உதவும்.
5. வீட்டில் தனியாக இருக்கும்போது திருடர்கள் உங்களைத் தாக்கும் நோக்கத்தோடு வந்தால் அவர்களிடமிருந்து தப்பிக்க காரத்தே போன்ற கலைகளை தெரிந்து வைத்திருங்கள். தற்காப்புக் கலை எதுவும் தெரிந்திருக்காவிட்டாலும் உங்கள் மனது எப்போதும் தன்னம்பிக்கையோடு இருக்கட்டும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 1000 | 1000 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 400 | 200 | 800 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 700 | – |
| பாரை | 550 | 700 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 500 | – |
| விளை | 650 | 550 | 400 | 500 | 500 | 300 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 450 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 400 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 380 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 100 | 220 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 400 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# செல் சிற்றியின் திறன் பேசிகள்

இலங்கை நுகர்வோர் மத்தியில் திறன்பேசி பாவனை அதிகரித்து வருவதோடு அண்ட்ரொய்ட் அடிப்படையிலான திறன்பேசிகளுக்கான கேள்வி பரவலானதாக விளங்குகிறது.

செல்சிற்றி நிறுவனம், அண்மையில் MEIZU திறன் பேசிகளை அறிமுகம் செய்து வைத்தது.

2003ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட திறன்பேசிகள் வர்த்தக நாமமான MEIZU உயர்ந்த வடிவமைப்பு மற்றும் எம்ரச் தொழில்நுட்பத்துடனான கைரேகை அடையாள அங்கீகாரம் போன்ற சிறப்பம்சங்களுடன், சர்வதேச தரத்திலான, பிரீமியம் மற்றும் நடுத்தர விலைகளிலான திறன்பேசிகளின் தயாரிப்புக்கு புகழ்பெற்றதாகும். 2,500க்கும் அதிகமான சேவை மையங்கள் மற்றும் 500,000 க்கும் அதிகமான விற்பனை முகவர்களுடன் MEIZU Technologies நிறுவனமானது, உலகளவில் செயற்பட்டு வருகிறது.

அண்ட்ரொய்ட் 5.0 அடிப்படையிலான பிரத்தியேக Flyme OS உடனான MEIZU திறன்பேசிகள், சிறந்த பயனர் இடைமுகம், பற்றரி மேம்படுத்தல்களுடன் பல்வகைப் பயன்பாட்டின்போது மேம்பட்ட பயனர் அனுபவத்தைத் தருகின்றன.

செல்சிற்றி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான கோன் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், 'நாடளாவிய ரீதியில் 17 சேவை மையங்கள் மூலம் முதற்தர மொபைல் விற்பனையின் பின்னரான சேவைகளை வழங்குவதற்கு எமது அர்ப்பணிப்பான ஊழியர்கள் எப்போதும் தயாராக உள்ளார்கள். இரண்டு வருட உத்தரவாதத்துடன் கிடைக்கப்பெறும் MEIZU திறன்பேசிகள் நுகர்வோர் மத்தியில் நல்ல வர வேற்பைப் பெறுவது நிச்சயம்' -என்றார். (இ)

# ஓட்டோவை விடக் குறைந்த விலையில் நான்கு சில்லு வாகனம் இலங்கைக்கு

ஓட்டோவை விடக் குறைந்த விலையில், நான்கு சில்லுகள் கொண்ட வாகனம் ஒன்றை இலங்கைக்கு இறக்குமதி செய்யத் திட்ட மிட்டுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, அறிவித்திருந்த நிலையில், 3 லட்சம் ரூபா பெறுமதியுடைய கார் ஒன்றே அந்த வாகனம் என்று தற்போது கூறப்பட்டுள்ளதோடு, அந்த வாகனம் தொடர்பான தகவல்களும் தற்போது வெளியாகியுள்ளன.

4 சில்லுகளைக் கொண்ட வாகனம் என்று அமைச்சர் குறிப்பிட்டிருந்த போதிலும், அது எந்த வகையான வாகனம் என்று அறிவித்திருக்கவில்லை. ஆனாலும், மிகச் சிறிய ரக கார் ஒன்று தொடர்பிலேயே அமைச்சர் அவ்வாறு அறிவித்திருந்தார் என்ற தகவல்கள் கசிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



3 இலட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யக்கூடிய இந்தக் கார், உலகில் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யக்கூடிய கார் அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, உலகில் மிகக் குறைந்த விலையில் காணப்படும் டாட்டா நனோ ரகக் காரை இலங்கையில் கொள்வனவு செய்ய 1.4 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, அதனைவிடப் பல மடங்கு குறைந்த விலையில் குறித்த கார் தற்போது இலங்கையில் விற்பனைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காரானது, கொட்ரி சைக்கிள் என்றே அழைக்கப்படுகிறது. இந்த கொட்ரி சைக்கிளின் வரலாறு, 1896 ஆம் ஆண்டுக் காலத்துக்குரியதாகும். உலகப் பிரசித்தி பெற்ற போர்ட் நிறுவனமானது, 1896 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதியன்றே, தனது முதலாவது கொட்ரி சைக்கிளைத் தயாரித்தது.

வணிகம்

தற்போது, இந்தியாவின் பஜாஜ் நிறுவனமானது, தனது கொட்ரி சைக்கிள் உற்பத்தியை Qute என்ற பெயரில் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விலை, 2 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகும். இலங்கை ரூபாப்படி, 3 இலட்சம் என்று கூறப்பட்டுள்ளது.


பஜாஜ் நிறுவனத்தின் கொட்ரி சைக்கிள் Qute ஆனது, தற்போது இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது, அந்த வாகனம் தொடர்பான தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெகு விரைவில், இலங்கையில் இந்தக் காரைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் என்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்த வாகனத்துக்கான வரியுடன் கூடிய விலை, இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

மணித்தியாலத்துக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடிய இந்த வாகனமானது, நகரப் பாவனைக்காக மாத்திரமே தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், நான்கு பேர் மாத்திரமே பயணிக்க முடியும் என்பதுடன், ஒரு லீற்றர் பெற்றோலில் 36 கிலோ மீற்றர் தூரம் செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

நுட்பம்

## அதிக விலையுடைய அண்ட்ரொய்ட் கைபேசி



தற்காலத்தில் அனைவரும் நாடும் கைபேசிகளாக அண்ட்ரொய்ட் கைபேசிகள் இருக்கின்றன. இந்தநிலையில் உலகில் விலை உயர்ந்த அண்ட்ரொய்ட் கைபேசி வகையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது இங்கிலாந்து தலைநகர் லண்டனில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொடர்புகளைப் பாதுகாக்க உலக நாடுகளின் ராணுவ அமைப்புகள் பயன்படுத்தும் அதிநவீனத் தொழில்நுட்பத்துடன் இந்தக் கைபேசி வெளியாகியுள்ளது.

இதுவரை வெளியான கைபேசிகளில் இல்லாத அளவுக்கு, எந்தவிதமான சைபர் தாக்குதல்களையும் தாக்குப்பிடிக்கும் வகையிலும், தகவல்களைப் பாதுகாக்க அதிகபட்ச பாதுகாப்பு வசதிகளைக் கொண்டதாகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலைச் சேர்ந்த சிரின் லேப்ஸ் என்ற நிறுவனம் சோலாரின் என்ற பெயரில் அண்ட்ரொய்ட் கைபேசிகளை 14 ஆயிரம் அமெரிக்க டொலர் விலையில் அறிமுகப்படுத்தியுள்ளது.



## அதி வேக இணையம்

இன்றைய கால கட்டத்தில் இணையமும் மனித வாழ்வில் அத்தியாவசியமான ஒன்றாக மாறிவிட்டது. அதனால் இணையத் தொழில்நுட்பத்தில் பல புதுமைகளைப் புகுத்த பல்வேறு முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக லி-பீ எனும் மின்குமிழ் மூலம் அதிவேக இணைய இணைப்பை வழங்கும் சாத்தியம் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக ஜேர்மன் பொறியியலாளர் குழு ஒன்று புதிய சாதனையொன்றைப் படைத்துள்ளது.

அதாவது செக்கனுக்கு 6 ஜிகாபிட்ஸ் வேகத்தில் 37 கிலோ மீற்றர் தூரத்துக்குத் தரவுகள் கடத்தப்பட்டுள்ளது. இந்த வேகத்தின் ஊடாக டிவிடியிலுள்ள தரவுகளை வெறும் 10 செக்கன்களிலேயே பரிமாற்றம் செய்துவிட முடியும். இதில் விசேட அம்சம் என்னவென்றால், வழமையாக இணைய வேகத்தின் சாத்தியம் குறித்த ஆராய்ச்சிகள் மென்பொருள்களைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்படும். ஆனால், இந்த ஆராய்ச்சியானது நிஜமாகவே இணைய இணைப்பை உருவாக்கி வெற்றி காணப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர்

ஆகியோர் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களுடைய அத்துமீறிய குடியேற்றத்தாலும், சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்டு தங்களது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். இந்த நிலையில் அவற்றைத் தீர்த்து வைப்பேன் என்று மீனவர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உறுதிமொழி அளித்த மத்திய கடற்றொழில் அமைச்சர், அதனை நிறை வேற்றவில்லை. மீனவர்களை ஏமாற்றியது அவருடைய கையாலாகாத் தனத்தையே காட்டுகின்றது. குறித்த அமைச்சர் முல்லைத்தீவுக்கு வருகை தந்து இங்குள்ள மீனவர்கள் மத்தியில் தன்னைச் சிறந்தவர் போல் பாசாங்கு செய்து, சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவது யாராக இருந்தாலும் அவர்களைக் கைது செய்யுங்கள் என்று தெரிவித்திருந்தார்.

அத்துடன் தென்னிலங்கை மீனவர்களுடைய அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதாகவும் உறுதியளித்திருந் தார். இவ்வாறு மீனவர்கள், அரச அதிகாரிகள் மத்தியில் தெரிவித்த அமைச்சர், கொழும்புக்குச் சென்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறித் தனியாரின் காணிகளில் குடியேறியுள்ள தென்னிலங்கை மீனவர்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டங்களை அமைத்துத் தருவதாகத் தெரிவித்துள்ளார். .

அமைச்சரின் இந்தச் செயற்பாடுகள் அவருடைய கையாலாகாத தன்மையையே காட்டுகின்றது. இதை நான் வன்மையாக கண்டிக்கின்றேன் என்று ரவிகரன் மேலும் தெரிவித்தார்.

ரவிகரனுடைய குற்றச்சாட்டை வழிமொழிந்த நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலை வருமான சி. சிவமோகன்,தானும் அமைச்சருடைய செயற்பாட்டுக்குக் கண்டனம் தெரிவிப்பதாகவும், தொடர்ச்சியாக இந்தச் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

(து-வ-21-ரி7)

## ஐ.நா.

இலகுவாகச் செய்யக்கூடிய கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்புக் கூட இலங்கை அரசு செய்து முடிக்கவில்லை என்பது இதன்போது சுட்டிக்காட்டப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் முதலாம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இலங்கை தொடர்பில் 29 ஆவது கூட்டத்தொடரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் முன்னேற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் 32ஆவது கூட்டத்தொடரின் போது, வாய்மொழிமூலஅறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் இந்தக் கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் வாய்மொழிமூல அறிக்கையை, எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார். இதற்கு முன்னர் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடனும், ஐ.நா. உறுப்பு நாடுகளின் முக்கியஸ்தர்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் பேச்சு நடத்தவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு நடைமுறையில் என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதன்போது சுட்டிக்காட்டவுள்ளது.

இலங்கை அரசு மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் குறிப்பிடுவோம். அதேவேளை, இலகுவாகச் செய்யக்கூடிய கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு என்பன நடைபெறவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுவோம். அத்துடன், இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார்.(து-வ-5)

## வாக்காளர்

துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்று யாழ். மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார். இதற் கமையவே நேற்றையதினம் மாத்திரம் 150 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளன. இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முறைப்பாடு செய்தவர் எந்தப் பிரதேச செயலகத்துக்குரியவரோ, அந் தப் பிரதேச செயலகத்துக்கு உடனடியாக மின்னஞ்சல் ஊடாகத் தகவல் வழங்கப்படுகின்றது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பப் படிவம் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. இதேவேளை, வீடு வீடாக விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்காத கிராம அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நேற்று மாவட்டச் செயலகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

சில பிரதேச செயலகங்களில், கிராம அலுவலர்கள் பதில் கடமை புரிவதானால், வீடு வீடாக விண்ணப்பப் படிவ விநியோகம் தவறவிடப்பட்டுள்ளதாகக் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தெரிவிக்கப்பட்ட காரணத்தின் உண்மைத் தன்மை அறியப்படும் என்றும், அதன் பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (து-வ-5)


### மரண அறிவித்தல்

**யோண் பிலிப் லூர்த்தம்மா (நேசமணி)**



தோற்றம் 04.05.1928 மறைவு 02.06.2016

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற யோண் பிலிப்பின் அன்பு மனைவி யோண் பிலிப் லூர்த்தம்மா நேற்று (02.06.2016) வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு கள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

243, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (J/1812) (11,18)

தகவல்:
திருமதி
இலங்காவதி அலோசியஸ்
(மருமகள்)

**021 222 3302, 077 367 1545**

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சாமிவேல் நாகராஜா**



தோற்றம் 17.08.1952
மறைவு 15.05.2015

ஆண்டாண்டு காலம் அழுதாலும் தீருமோ
உங்கள் இழப்பு!
ஓராண்டு காலம் ஓடி மறைந்துவிட்டது. ஆனாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சில் நீக்கமறக கலந்துள்ளது
காலங்கள் மறையலாம் - எம் குலவிளக்கின் நினைவுகள்
என்றும் எம் மனதை விட்டகலாது
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்......
குடும்பத்தினர்.

154 ஆம் கட்டை,
இந்து புரம், முறிகண்டி. (என்.63) (13.18.17)

**077 683 1382**

### இதய அஞ்சலி



" அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னையாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டிய கொக்குவில் இந்துக்கல்லூரியின் மூத்த பழைய மாணவனும்கல்லூரி வளர்ச்சிக்கு மட்டுமல்ல கல்விச் சமூகத்திற்குமே தனது சொந்த நிதியை அள்ளிக் கொடுத்து பௌதீக வளங்களைப்பெற்றுக்கொடுத்தவருமான சமூகப்புரவலர்,வித்தியாதான கீர்த்தி

**மாணிக்கம் சுப்பிரமணியம்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கல்லூரிச் சமூகத்திற்கு கிடைத்தது. கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னாரின் மறைவு கல்லூரிச் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் முழு சமூகத்திற்மே பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி,பிள்ளைகள்,உற்றார்,உறவினர்கள், எல்லோருக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா இறைவனடி சேர எல்லாம் வல்ல கல்லூரி குலதெய்வமான கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமியை வேண்டி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க
நம்பிக்கை நிதியம் (யாழ்ப்பாணம்) (ஜ/81367) (12.15)

### மரண அறிவித்தல்

சமூகப்புரவலர் **மாணிக்கம் சுப்பிரமணியம்**



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும்,Ragu International (pvt) Ltd உரிமையாளரும் பிரபல வர்த்தகருமான மாணிக்கம் சுப்பிரமணியம் நேற்று (02.06.2016) வியாழக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது புத்திரனும்,காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இரத்தினம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், மாலதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, சிவபாதம் மற்றும் இராசலிங்கம், இரட்ணலிங்கம், சிவச்சந்திரன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகுணன் (கனடா), அமுதன் (லண்டன்), சுகந்தினி (கொழும்பு), கார்த்திகாயினி (கனடா), ராகுலன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா, யசோ, திருஎந்தி, ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், வர்ஷிகா, சமிரா, அஸ்மிரன், சாமிரன், வாமரன், அம்றுத்தா, வைஷ்சித்தா, ஹரி, ஹரிசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.06.2016 ஞாயிற்றுக்கிழமை அவரின் பம்பலப்பிட்டி இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.38B, சிறபறி கார்டின்ஸ்,
கொழும்பு 4 (J/1814) (11,18)

தகவல்:
சு.ராகுலன் (மகன்)

**011 259 0630, 077 833 3069**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ஆண்டுகளின்

நேற்று மீண்டும் அதன் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.
நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடேஸ்வரக் கல்லூரியில் அமைந்துள்ள காளிகோவிலில் பூஜை வழிபாடுகள் நடைபெற்று, நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயத்தை நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சோ.சேனாதிராசா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டித் திறந்துவைத்தனர்.
தொடர்ந்து நடேஸ்வரக் கல்லூரியின் பெயர்ப் பலகையையும் மாவை சோ.சேனாதிராசா திரை நீக்கம் செய்து வைத்தார். நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயத்தின் பெயர்ப் பலகையை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா திரை நீக்கம் செய்து வைத்தார்.
வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தினார். வரவேற்புரையையும் அதிபர் உரையையும் கல்லூரி முதல்வர் பொ.அமிர்தலிங்கம் நிகழ்த்தினார்.
நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர்களான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா மற்றும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோரது உரைகளில் கல்லூரிக் கால பழைய நினைவுகள் பெரிதும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.
இந்த நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(த-வ-25)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### அன்னபூரணி தங்கேஸ்வரன்

(நயினாதீவு-1)

யாழ் நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணி தங்கேஸ்வரன் கடந்த (27.05.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பையா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கேஸ்வரனின் அன்பு மனைவியும் பரமேஸ்வரன் (சுவிஸ்), மணிமேகலா(சுவிஸ்),விஜயகுமார் (கனடா), விஜயலோஷனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகநாதன் (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், சுந்தரமூர்த்தி, பொன்னம்பலம், பாலாம்பிகை மற்றும் பவானியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, விசாலாட்சி நாகமத்து, மு.க.கனகரெட்ணம், சி.வ.குழந்தைவேலு, மகேஸ்வரி, அமிர்தலஷ்மி, விக்னேஸ்வரன் மற்றும் புஸ்பராணி, நாகரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

11, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

தகவல்:
பவானியம்மா
குழந்தைவேல் (சகோதரி)



மலர்வு 1926 . 04 . 24
உதிர்வு 2016 . 06 . 01

### தம்பு கந்தசாமி (சாமியார்)

காளி கோயிலடி கோப்பாய் மத்தி கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தசாமி நேற்று (01.06.2016) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக் கணவரும், சின்னையாபிள்ளையின் சகோதரரும், சரோஜாவின் மைத்துனரும், வக்சலா (சுவிஸ்), பிறேமலா (பிரான்ஸ்), ரீபன் (பிரான்ஸ்), திலீபன் (பிரான்ஸ்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் சுபேஸ் (பிரான்ஸ்), ரமேஸ், சந்தி ரிக்கா, சத்தியப்பிரியா ஆகியோரின் பெரியப்பாவும் கணேச லிங்கம் (சுவிஸ்), பத்மநாதன் (பிரான்ஸ்),மேனுகா, அருந்தா (பிரான்ஸ்), பிரனையா, நகுலபாஸ்கரன், நிரஞ்சன் ஆகியோரின் மாமனாரும் மதுஷா,துவாரகா (சுவிஸ்), தேனுகா, லக்ஷனா, கார்த்திகேயன் (பிரான்ஸ்), சாருஜா, நிவேதிகா, யதுக்ஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 895 7609

## விக்கி

அரசின் ஆதரவு இன்றி, இராஜ தந்திரச் சந்திப்புகளை நடத்துவதில் பயனில்லை.
இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.
தமிழக முதலமைச்சரைச் சந்திப்பதற்கு எதிர்ப்புக்கள் வந்தாலும், அதனைத் தாண்டி அவரைச் சந்திப்பேன் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
தனிப்பட்ட ரீதியில் தமிழக முதல்வரை விக்னேஸ்வரன் சந்திப்பதாக இருந்தால் சந்திக்கலாம். ஆனால், இராஜ தந்திர மட்டத்திலான சந்திப்பாக இருந்தால் அனுமதி அவசியம். மத்திய அரசின் ஆதரவு இன்றி இராஜதந்திரச் சந்திப்புகளை நடத்துவதில் பயனில்லை என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சுட்டிக்காட்டினார்.
இதுபற்றிக் கருத்து வெளியிட்ட முன்னாள் இராஜதந்திரி தயான் ஜயதிலக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவேண்டுமானால், அதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கட்டாயம் பெறவேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம், முதல்வர்களுக்குச் சில விடயங்களுக்கு அப்பால் செல்ல முடியாது. வெளிநாட்டுச் சந்திப்புகளை நடத்துவதற்கு ஜனாதிபதியிடம் கட்டாயம் அனுமதி பெறவேண்டும்.
வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், இந்தியாவில் தனிப்பட்ட சந்திப்புகளை நடத்தி, அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசவுடன் முரண்பட்டதால்தான் வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டிய சூழல் உருவாகியது என்று குறிப்பிட்டார்.

(த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை பிள்ளைநாயகம்



நாவற்குழி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பிள்ளை நாயகம் நேற்று (02.06.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் கடைசி மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராகினிதேவி, சிவகுருநாதன், சிவறாஜினி, முத்துலட்சுமி, குகராஜினி, குயந்தினி (ஆசிரியர்), தவகுருநாதன், கோகுலகுருநாதன், சற்குண நாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணைமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.



### வைத்திலிங்கம் காண்டீபன்

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவருமான வைத்திலிங்கம் காண்டீபன் நேற்று (02.06.2016) வியாழக்கிழமை பொன்னாலையில் காலமாகி விட்டார்.

அன்னார் வைத்திலிங்ம்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (இந்திரன்) மற்றும் ச.மங்களராணி, ரங்கநாதன் (பிரான்ஸ்), நேசமலர் (ஏழாலை) மனோராணி (ஆசிரியை) காலஞ்சென்ற கர்ணன் மற்றும் மோகனசுந்தரி (ஆசிரியை), புஸ்பராணி (ஆசி ரியை) ஆகியோரின் சகோதரரும் சந்திரசேகரம், வரதலட்சுமி, நகுலேந்திரராஜா, ஸ்ரீகாந், ஜெயக்குமார், மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் குகதர்சி, பிரியங்கா, சாரங்கா, பானுசா, சுதர்சனன், துசிகரன்,தர்மிகா, டிஷானி, வர்சிகன் ஆகியோரின் மாமனாரும் இந்திரஜித், ஹரணி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 55 மில்லியன்

உலக வங்கியின் நிதி உதவியில் யாழ்.நகரை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்ட முன்மொழிவுகள் கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து தயாரிக்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தினை முன்னெடுக்கும் முக்கிய பங்காளராக யாழ்.மாவட்டச் செயலகத்திற்குப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.
இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான அனைத்துத் தரப்புக்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை என்று சகல தரப்புக்களினதும் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.
இருப்பினும், வடக்கு மாகாண ஆளுநர் சகல தரப்புக்களையும் அழைத்து நடத்திய கலந்துரையாடல் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தார்.
இந்த நிலையில், கடந்த மே மாதம் 31 ஆம் திகதி, சர்வதேச நாடுகள் பலவற்றிலிருந்தும் வருகின்ற திட்டங்களைப் பரிசீலித்து அனுமதி வழங்கும் உலக வங்கியின் உயர்மட்டக் கூட்டம் - பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் இலங்கையிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட, யாழ்.நகர அபிவிருத்தித் திட்டத்துக்கு உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.
அனுமதி வழங்கப்பட்ட விடயம் நேற்று இரவு யாழ். மாவட்டச் செயலகத்துக்கு மின்னஞ்சல் ஊடாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூன்று ஆண்டு காலத்தைக் கொண்டது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5-101)

## ஏக்கத்துடன்

இராணுவப் பாதுகாப்பு இருந்ததால் அந்த மக்களால் தமது சொந்த வீடுகள் இருந்த இடத்துக்குச் சென்று பார்க்கமுடியவில்லை. அவர்கள் பாடசாலை வளாகத்துக்குள் நின்று தமது வீடுகளை எட்டிஎட்டி ஏக்கத்துடன் பார்த்து நின்றனர்.
அவர்கள் கண்கள் கண்ணீர்க் குளமாகின. சிலரது வீடுகள் தொடர்ந்தும் இராணுவப் பாவனையில் உள்ள அதேநேரம், மேலும் சிலரின் வீடுகளோ அடி அத்திபாரத்துடன் இடித்தழிக்கப்பட்டிருந்ததையும் அந்த மக்கள் வேதனையுடன் பார்த்துக்கொண்டிருந்தனர். சிலர் பாடசாலை வளாகத்துக்குள் நின்றுகொண்டு தமது வீடுகளைப் பிள்ளைகளுக்குக் கைகளால் சுட்டிக்காட்டி பெரு மூச்சுவிட்டுக்கொண்டனர்.
அங்கு வந்திருந்த இளைஞர்கள், இளம் பெண்களில் பெரும்பாலானோருக்கு அந்த இடம் புதிதாகவே இருந்தது. அவர்கள் 26 ஆண்டுகளுக்கு முன் சிறு வயதிலேயே அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தவர்கள். பல பிள்ளைகள் தமது சொந்த இடத்தை நேற்றுத்தான் நேரில் கண்டிருந்தார்கள். அந்த மகிழ்ச்சி அவர்கள் முகத்தில் தென்பட்டபோதும் எப்போது சொந்த இடத்தில் வாழ்வைத் தொடங்குவோம் என்ற ஏக்கமும் அவர்கள் மனதில் இருந்தது. இறுதியில் சொந்த வீடுகளையும் காணிகளையும் கண்களால் மட்டும் பார்த்த திருப்தியுடன் பிற்பகலில் அனைவரும் அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டனர்.

(த)

## 60 ரூபாவால்

உள்ள சிமெந்துகளின் விலை அதிகரிப்புக்கு நுகர்வோர் அதிகார சபை அனுமதி அளித்துள்ளது.
இதனடிப்படையில் 50 கிலோ கிராம் சிமெந்துப் பைக்கற்றின் விலை 870 ரூபாவில் இருந்து 930 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ

முற்றுகைக்கு மத்தியிலேயே இயங்க ஆரம்பித்துள்ளது. நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தின் வளாகம் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அதன் ஒரு பகுதியை ஊடறுத்து முட்கம்பி வேலி உயரமாக அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளைச் சுற்றியுள்ள எல்லை வேலிகளுடன் இராணுவ முகாம்கள், இராணுவத்தின் வாகன சுத்திகரிப்பு நிலையம் மற்றும் இராணுவம் பயன்படுத்தும் கட்டடங்கள் என்பன அமைந்துள்ளன. பாடசாலையைச் சுற்றி உள்ள பல வீடுகள், பொதுமக்களின் கட்டடங்கள் என்பன தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாவனையில் உள்ளன.

பாடசாலை இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ள போதும் அப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்வுக்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை. இதனால் கற்கும் மாணவர்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பகுதிகளில் இருந்தே அங்கு செல்லவேண்டியுள்ளது.

பாடசாலைக்கு செல்லும் பிரதான பாதையான கே.கே.எஸ். வீதியில் மாவிட்டபுரம் சோதனை நிலையத்தில் இருந்து நடேஸ்வரக் கல்லூரி வரையான பிரதான வீதியில் இருமருங்கிலும் இராணுவம் மற்றும் பொலிஸாரின் தேவைகளை நிறைவேற்றும் நிலையங்களே அடுத்தடுத்து இயங்கி வருகின்றன.

வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம், வடபிராந்திய பொலிஸாரின் விசேட விசாரணைப் பிரிவு, பொலிஸாரின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, பொலிஸ் வெதுப்பகம், பொலிஸ் உணவகம், பொலிஸ் வைத்தியசாலை, பொலிஸ் வாகனத் திருத்தகம், இராணுவ நலன்புரி நிலையம் மற்றும் இராணுவ முகாம்கள் என்பன இவற்றில் முக்கியமானவை.

(உ-தி)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
**திரு. வ.வன்னியசிங்கம்** அவர்களின் பாசமிகு தாய்

### அமரர் புவனேஸ்வரி வைரமுத்து

அவர்கள் 24.05.2016 அன்று சிவபதமடைந்துவிட்டார்.
அவரின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**பிரதேச செயலகம், கோப்பாய்.**

(J/1826)
(10)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வைத்தீஸ்வரஐயர் வெங்கடகிருஷ்ணசர்மா
(குட்டி ஐயா)



அன்னை மடியில்
26.09.1959

அன்னியன் கையில்
26.05.2006

*நீ முந்திப் போகவே ஞாயம் இல்லை*
*நான் முந்திப் போகவே யோகம் இல்லை....*
*ஆண்டுகள் 10 ஆகியும் என்றும் உன் நினைவால்*
*நானும் பிள்ளைகளும் தனிமையில் அன்பு பாசம் இல்லாது*
*தவிக்கிறோம்.*

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 21.05.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
அமரர்

### தெட்சணாமூர்த்தி ஞானசங்கர் (ஞானம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (04.06.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.*

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தெட்சணாமூர்த்தி
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.05.2016 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் சகோதரன்

அமரர்

### நல்லான் ஏகாம்பரம் (ஏரம்பு)

(பணியாளர் நியூ சயன்ஸ் கோல் யாழ்ப்பாணம்)



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.06.2016) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியபுலோ,
சுழிபுரம்.

நல்லான் குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
05.06.1926



மறைவு
07.05.2016

### அமரர் நாகேந்திரர் கணபதிப்பிள்ளை

கடந்த (07.05.2016) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நாகேந்திரர் கணபதிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.06.2016) சனிக்கிழமை மு.ப 9.00 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 06.06.2016 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். நெடுந்தீவிற்கு செல்வதற்கான விஷேட படகு சேவை காலை 7.30 மணியளவில் குறிகாட்டுவானில் இருந்த புறப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'திருத்தணி'
58, மருதடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 0322

## கொக்குவில் இந்து அன்னை கண்ணீர் வடிக்கிறாள்

மலர்வு
28 ☼ 01 ☼ 1940



உதிர்வு
02 ☼ 06 ☼ 2016

கொக்குவில் இந்துவின் புகழ் பூத்த பழைய மாணவனும்
கொடை வள்ளலுமாகிய

### திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்

அவர்களின் திடீர் மறைவினால் கல்லூரிச் சமூகத்தை
ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவன் துணை புரிவாராக

*தொலையாத நினைவுகளும் கரையாத கனவுகளும்*
*நிலையான வாழ்க்கையிலே நிலையாமல் போனீரே.*
*விலையேதுமில்லாத வள்ளல் மாணிக்கம் சுப்பிரமணியமே.*
*தொலைதூரம் உன்னைத் தொலைத்து ஏங்குகின்றோம்*
*தளையாமல் பணி செய்து நிலையாகிவிட்டாய் நெஞ்சவனே*
*தொலைதூரம் போனாலும் தொடர்வோம் உன்பணி...*

### கல்லூரிக்குச் செய்த சேவைகள்

- கல்லூரியின் தென்பகுதியில் 3 மாடிக் கட்டடம் கட்டியமை.
- கல்லூரியின் நம்பிக்கை நிதியத்துக்கு காணி கொள்வனவுக்கு பண உதவி வழங்கியமை.
- மாலதி கலை அரங்கு அமைத்தமை.
- [illegible]ணியம் அரங்கு அமைத்தமை.

பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் அணி அபார வெற்றி

யாழ்ப்பாணம் ஜூன் 3
கழுகுகள் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென்.ஜோசப் அணி வெற்றிபெற்றுள்ளது.

கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.ஜோசப் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதியது. இரண்டாவது நிமிடத்தில் ரெக்சன் முதல் கோலைப் பதிவுசெய்ய ஆட்டத்துடன் இணைந்து சென்.ஜோசப்பின் ஆதிக்கமும் ஆரம்பித்தது. ஆனால் நீடிக்க விடவில்லை விக்னேஸ்வராவின் நிக்சன். அவர் மூன்றாவது நிமிடத்தில் பதிலடி கொடுக்க நிலைமை 1:1. ரெனோசன் 8ஆவது நிமிடத்திலும், லெமென்டன் 10ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய 3:1 என்று சென்.ஜோசப்பின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் சென்.ஜோசப்பின் சார்பாக மேலும் இரு கோல்கள் பதிவாகின. இருப்பினும் பலத்த போராட்டத்தை வெளிப்படுத்திய விக்னேஸ்வரா அணி, அனோஜன் மற்றும் பானுயன் ஆகியோரது உதவியுடன் மேலும் இரு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் சென்.ஜோசப் அணி 5:3 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)



# தெல்லிப்பழை யூனியன் சம்பியன் மகாண எறிபந்தாட்டத் தொடரில்



யாழ்ப்பாணம், ஜூன் 3
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று நடந்த இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி மோதியது. முதலாவது செற்றை சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற அந்த அணியின் வாய்ப்பு பிரகாசமாக இருந்தது. இருப்பினும் இரண்டாவது செற்றை 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது யூனியன். இதனால் கிண்ணத்தைத் தீர்மானிக்கும் செற்றாக இறுதி செற் மாற்றம் பெற்றது. 27:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றை போராடி வென்றது யூனியன். இதனையடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யூனியன் கல்லூரி அணி.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் அணி மோதியது. இதில் 2:1 என்ற செற் கணக்கில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கியது

(ம-422-108)

# சச்சினை வீழ்த்துவார் அலிஸ்டர் குக்

## – சுனில் கவாஸ்கர்

டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற சச்சினின் சாதனையை, இங்கிலாந்து அணியின் தலைவர் அலிஸ்டர் குக் முறியடிக்க வாய்ப்பிருப்பதாக முன்னாள் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின்போது, 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 12ஆவது வீரராக மாறியிருந்தார் குக். தவிர இந்த மைல்கல்லை குறைந்த வயதில் அடைந்தவர் என்ற சாதனையையும் நிலைநாட்டியிருந்தார். இந்த நிலையில் குக் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே சுனில் கவாஸ்கர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் – சச்சினின் டெஸ்ட் ஓட்டங்களுக்கான சாதனையை, அலிஸ்டர் குக்கால் முறியடிக்க முடியும். அவருக்கு வயது உள்ளது. மட்டுமல்லாமல் ஏராளமான டெஸ்ட் ஆட்டங்களில் இங்கிலாந்து விளையாடுகிறது. குக் தொடர்ந்து போர்மில் இருப்பாரானால் அவர் தனது 37ஆவது வயதில் சச்சினை வீழ்த்த முடியும் என்றார். (ம)



# மத்தியை சாய்த்தது யாழ். இந்து



யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதிய இந்த ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி 34:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. சிறந்த வீரர்களாக யாழ். இந்துக் கல்லூரி அணியின் மாதவனும் யாழ். மத்திய கல்லூரி அணியின் கஜறூபனும் தெரிவானார்கள். நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே கலந்துகொண்டார்.

(ம-23)

# சவால்!

அடுத்த வருடம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் லீக் தொடர் இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. இதற்கான அட்டவணையும் குழு விவரங்களும் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டன. இலங்கையின் குழுவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் உள்ளன. இந்த நிலையிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – இலங்கை அணிக்கு இந்தத் தொடர் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியமான தொடராக அமையும். இளம் வீரர்கள் இந்த தொடரில் இருந்து பல விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அதேபோல் 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்குத் தயார்படுத்திக்கொள்ளும் வகையில், இந்தத் தொடர் நல்ல அனுபவத்தைக் கொடுக்கும். இந்தத் தொடரை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. நாங்கள் இடம்பெற்றிருக்கும் 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என வலிமையான அணிகள் இடம்பெற்றுள்ளன. இது கண்டிப்பாக சவால் நிறைந்த தொடராக இருக்கும் என்றார். (ம)

# நாட்டைவிட்டு வெளியேறும் செய்தி பொய்யானது

## –டில்சான்

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் தனக்கு எந்தவொருபிரச்சினையும் இல்லை என்று தெரிவித்துள்ள டில்சான், நாட்டைவிட்டு வெளியேறும் செய்தி முற்றிலும் பொய்யானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி–20 தொடர்களிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார் டில்சான். தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்த விலகல் என்று அவர் குறிப்பிட்டிருந்த போதிலும், அவரை இலங்கைக் கிரிக்கெட் தான் களமிறங்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாகவும் மற்றொரு தகவல் பரவியது மட்டுமல்லாமல் டில்சான் நாட்டை விட்டு வெளியேறப்போகிறார் என்றும் பேசப்பட்டது. இந்த நிலையிலேயே இந்தக் கருத்துக்களுக்கு டில்சான் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக [illegible] மேலும் தெரிவிக்கையில் – [illegible] யாட்டுத்துறை அமைச்சரை நான் கடந்த மூன்று மாதங்களாக சந்திக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில், அமைச்சருக்கும் எனக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து செய்திகள் வெளியாகியுள்ளமை வருத்தமளிக்கிறது. கிரிக்கெட் மீதும் கிரிக்கெட் வீரர்கள் மீதும் அன்பு செலுத்தும் ரசிகர்கள் இந்த நாட்டில் ஏராளமாக உள்ளனர். அவர்களை [illegible] [illegible] பப்பட்டு வருகின்றன. அத்துடன், நான் இந்த நாட்டை விட்டு வெளியேறி ஆஸ்திரேலியாவில் தங்கவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அந்தச் செய்தியிலும் எவ்வித உண்மையும் இல்லை. தவிர, கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறக் கூட நான் இதுவரையில் தீர்மானிக்கவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் களமிறங்க [illegible]ள்ளேன். அதற்கான பயிற்சியிலேயே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்–என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

**வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூ பைட் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**திருமகள் வி.க. தொடர்**

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் திருமகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஐக்கிய அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து 5 ஸ்ரார் அணி மோதவுள்ளது. (ம-23)

## ஐக்கியம் அபாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் விடத்தல்தீவு ஐக்கிய அணி வெற்றிபெற்றுள்ளது.

கழுகுகளின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்து இரண்டாவது நிமிடத்திலேயே ஐக்கியத்தின் சார்பாக முதல் கோலைப் பதிவு செய்தார் கலிஸ்ரன். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. ஆதிக்கத்தை தொடரும் முனைப்பில் ஐக்கியம் பதிலடி கொடுக்கும் முனைப்பில் நாமகள். அரங்கேறியது இரண்டாம் பாதி. 46ஆவது நிமிடத்தில் ஜான்சனின் உதவியுடன் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தியது ஐக்கியம். 54 ஆவது நிமிடத்தில் தெல்லிப்பழை நாமகள் அணியின் சுபாங்கன் பதிலடி கொடுத்த போதிலும், முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் விடத்தல்தீவு ஐக்கிய அணி வென்றது. (ம-23108)

## யாழ். - கொழும்பு நாளை பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடரின் காலிறுதி ஆட்டமொன்றில் யாழ், கொழும்பு பிராந்திய அணிகள் நாளை மோதவுள்ளன. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)




# தெல்லிப்பழை யூனியன் சம்பியன் மாகாணமட்ட எறிபந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுக் காலை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ. த.க. பாடசாலை அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது தெல்லிப்பழை யூனியன்கல்லூரிஅணி. இதனால் இரண்டாவது செற்றில் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது மாதர் பனிக்கர் மகிழங் குளம் அ.த.க. பாடசாலை அணி. இருப்பினும் அந்த செற்றும் 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யூனியனின்வசமாக முடிவில் அந்த அணி 2:0 என்ற நேர்செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-422-108)

## கழுகுகளின் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

8 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவை மேற்கொள்ளும் படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## வவுனியா பிரதேச செயலகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 3

வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வவுனியா பிரதேச செயலகம் சம்பியனானது.

வவுனியா நகர சபை கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா வடக்கு பிரதேச செயலக அணி மோதியது. இதில் வவுனியா பிரதேச செயலக அணி 31:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

# வேம்படி மகளிர் சம்பியனானது மத்தியின் கூடைப்பந்தாட்டத்தில்



யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கூடைப் பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி சம்பியனாகியுள்ளது.


யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. சிறந்த வீராங்கனைகளாக வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் அனோசியாவும் உடுவில் மகளிர் கல்லூரி அணியின் மினியாவும் தெரிவானார்கள். (ம-23)

## ரட்வன்ஸ்கா அதிர்ச்சித் தோல்வி பைரோன்கோவாவிடம் சிக்கினார்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் சர்வதேச தரப்படுத்தலில் இரண்டாவது நிலையிலுள்ள வீராங்கனையான ரட்வன்ஸ்கா.

பரிஸ் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் இரண்டாம் நிலை வீராங்கனை ரட்வன்ஸ்கா, தரப்படுத்தலில் 100 இடங்களுக்குள் இல்லாத வீராங்கனையான பைரோன்கோவாவுடன் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் ரட்வன்ஸ்கா. இருப்பினும் அடுத்த இரு செற்களையும் 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய பைரோன்கோவா 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக் குத் தகுதி பெற்றார்.

2006ஆம் ஆண்டு முதல் பிரான்ஸ் தொடரில் விளையாடி வரும் பைரோன்கோவா காலிறுதியை எட்டுவது இதுவே முதல் முறையாகும். அத்துடன் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பிரான்ஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்ற முதல் பல்கேரிய நாட்டவர் என்ற சிறப்பையும் அவர் பெற்றார். (ம)



## ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்; முர்ரே பங்கேற்பதில் சந்தேகம்

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் தான் பங்கு பற்றுவது சந்தேகம் என்றவாறாக வெளிப்படுத்தியுள்ளார் முர்ரே.

பிரேஸிலில் சிகா வைரஸ் தொடர்பான அச்சம் தொடர்ந்து நிலவி வருகிறது. இதனால் தொடரை வேறு இடத்துக்கு மாற்றும்படியும் அல்லது பிற்போடு மாறும் உலக சுகாதார அமைப்பையும் பிரேஸில் ஒலிம்பிக் சம்மேளனத்தையும், சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தையும் பலரும் வலியுறுத்திவருகின்றனர். இந்த நிலையிலேயே முர்ரே இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவுகள், தெ.ஆபிரிக்கா, ஆஸி. முத்தரப்புத் தொடர் ஆரம்பம்

மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை எதிர்த்து ஆஸ்திரேலியா மோதவுள்ளது. (ம)

# கோபா அமெரிக்கத் தொடர் இன்றுமுதல் ஆரம்பமாகிறது




தென்னமரிக்க நாடுகளுக்கு இடையே நடைபெறும்பழைமை வாய்ந்த கோபா அமெரிக்க கால்பந்துத் தொடர் அமெரிக்காவில் இன்று ஆரம்பமாகிறது.

கடந்த வருடம் கிண்ணம் வென்ற சிலி இம்முறை நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்குகிறது. தவிர பிரேஸில், ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட 16 அணிகள் தொடரில் கலந்துகொள்கின்றன. கோபா அமெரிக்கத் தொடர் ஆரம்பிக்கப்பட்டு நடப்பு வருடத்துடன் 100 வருடங்கள் நிறைவடைகின்றமையால் இந்தமுறை கிண்ணம் வெல்லும் அணிக்கு தனிச் சிறப்புக் கிடைக்கும். பார்சிலோனா கழக அணிக்காகக் கலக்கும் மெஸ்ஸி, ஆர்ஜென்ரீனாவுக் காக சிறப்பாகச் செயற்படுவதில்லை என்றும் ஒரு குறைஉள்ளது. எது எப்படியோ ஆட்டம் இன்று ஆரம்பம். (ம)

## மீண்டும் வருவேன் ரெய்னாவின் சபதம்

டெஸ்ட் ஆட்டங்களில் மீண்டும் தனது இடத்தை உறுதிப்படுத்த விரும்புவதாக இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ரெய்னா தெரிவித்துள்ளார்.

ரி-20, ஒருநாள், டெஸ்ட் என மூன்று விதமான ஆட்டங்களிலும் இந்தியாவைப் பிரதிநிதித்துவம் செய்த ரெய்னா படிப்படியாக தனது நிலைகளை இழந்து வருகிறார். ஆரம்பத்தில் டெஸ்ட் அணியிலிருந்து ஒதுக்கப்பட்ட அவர் பின்னர் ஒருநாள் ஆட்டங்களுக்கான அணியிலிருந்தும் விலக்கப்பட்டு தற்பொழுது ரி-20 ஆட்டங்களில் மட்டுமே விளையாடி வருகிறார். இந்த நிலையிலேயே ரெய்னா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சிம்பாப்வேக்கு எதிரான இந்திய அணியில் நான் இடம் பெறவில்லை. ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இது சிறப்பானது. இந்த இடைவேளையைப் பயன்படுத்தி நிச்சயம் மீண்டு வருவேன். திருப்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தி டெஸ்ட் ஆட்டங்களுக்குத் திரும்புவேன். வெள்டையுடையில் மீண்டும் களமிறங்குவேன். என்றார். (ம)





## அரையிறுதியில் முருகுசா?

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் முருகுசா.

பரிஸ் நகரில் நேற்று நடைபெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் தரப்படுத்தலில் நான்காம் நிலை வீராங்கனையான முருகுசா, அமெரிக்காவைச் சேர்ந்த செல்பி ரோஜர்ஸை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றில் மட்டுமே ரோஜர்ஸால் சிறிது போராட முடிந்தது. இதனால் அந்த செற்றை 7:5 என்று போராட்டம் காட்டியே முருகுசா வென்றார். ஆனால் இரண்டாவது செற்றில் முருகுசாவின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. அந்த செற் 6:3 என்ற செற் கணக்கில் முருகுசாவின் வசமாக, முடிவில் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அவர் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# கத்துக்குட்டிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து; பரிசீலிக்கிறது சர்வதேச கிரிக்கெட் சபை



கத்துக்குட்டி அணிகளாகக் கருதப்படுகிற ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, நேபாளம் ஆகிய அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்க ஐ.சி.சி. பரிசீலித்து வருவதாக அதன் தலைவரான டேவிட் ரிச்சட்சன் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் ஆட்டங்களுக்கு உயிரூட்டும் நடவடிக்கையில் சர்வதேச கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது. இதன் படி, டெஸ்ட் ஆட்டங்களில் இரு பிரிவுகள் ஏற்படுத்தப்படுவது குறித்து கவனஞ் செலுத்தப் படவுள்ளது. தற்போது ஆராயப்படும் முறையின்படி, தரப்படுத்தலில் முதல் 7 இடங்களில் காணப்படும் அணிகள் முதலாவது பிரிவில் இடம்பிடிக்கும். தற்போதுள்ள டெஸ்ட் தரப்படுத் தலில் 8, 9, 10ஆம் இடங்களைப் பெற்றுள்ள அணிகள் இரண்டாவது பிரிவில் விளையாட வேண்டியேற்படும். தவிர கத்துக்குட்டிகளான ஆப்கானிஸ்தான், அயர்லாந்து, நேபாளம் ஆகிய அணிகளுக்கு வாய்ப்புக்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்களை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான டேவிட் ரிச்சட்சன் உறுதிப்படுத்தியுள்ளார். (ம)

வேலையாள்கள் தேவை
• விற்பனை உதவியாளர்கள் (ஆண், பெண்)
• Dish அன்ரா பொருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள்
• கணக்காளர்
தொடர்பு: 021 222 6807

FLC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் MR. V. JEGAN (Trained in France - 2007)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1100 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 04.06.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 06.06.16 Mon@ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

SAAMSON Experts in English Training
மூன்றே மாதங்களில்
SPOKEN ENGLISH
ஷாம்சனிடம் பழகுங்கள்!
"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின்மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"
சனி,ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 04.06.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு3: 01.00-03.00
பிரிவு2: 10.00-12.00 பிரிவு4: 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.
ஷாம்சன் ஆசிரியரின் Personal Class
வார, வார இறுதி நாட்களில் - காலை: 06.00-7.30 மாலை : 5.30-07.00
SAAMSON Experts in English Training
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
அக்ஷய திருதியை நாளில் எமது ஸ்தாபனத்தில் நகைகளைக் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறை மூலம் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டனர்.
வெற்றியாளர் விவரம்
முதலாம் பரிசு - சுலக்சன் - சிட்.இல. 15445
இரண்டாம் பரிசு K. ரகுநாதன் - சிட்.இல. 14518
மூன்றாம் பரிசு - உதயா - சிட்.இல - 14898
விஷேட அதிர்ஷ்டசாலிகள்
1. செல்வராஜா - சிட்.இல.- 14527
2. க.விஜயகலா - சிட். இல - 441
3. R.நிருஷா - சிட்.இல - 14290
4. சுந்தரலிங்கம் குருக்கள் - சிட்.இல 14880
5. ராஜா கிறீம் கவுஸ் - சிட்.இல 15195
6. ராஜி - சிட்.இல 15417
ஆறுதல் பரிசுகள்
1. கனுஜா - 15220
2. கி.சுதர்சினி - 14812
3. ப.விஸ்னுகாந்தன் - 442
4. நிர்மலாதேவி - 862
5. ரஞ்சனாதேவி - 14452
6. த.பவானி - 15006
7. ரேகா - 14328
8. சர்மிளா - 14441
9. வதனி - 15211
10. அருள்ஞான ரெட்ணம் - 449
வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவம் நாளை (04.06.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது ஸ்தாபனத்தில் நடைபெறும். வெற்றி பெற்றவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட விற்பனைச் சிட்டைகளுடன் வந்து தங்களுக்குரிய பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.
தொடர்புகளுக்கு
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல.38,40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7878, 021 221 7877

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
June 25,26 நடைபெறவுள்ள
SLAS Ltd பரீட்சைக்கு
ஞாயிறு 9.00 4.00 மணிவரை
SLEAS Ltd பரீட்சைக்கு
ஞாயிறு 10.00 4.00 மணிவரை
கணக்காய்வாளர் (Auditor) பரீட்சைக்கு
சனி 2.00 5.00 மணிவரை
அடுத்தவாரம் முதல் பிரதி ஞாயிறு
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
T.P: 0766 883394
021 222 3382

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறு[illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org